
ஆரிய சரித்திரம்



ஏகலைவன்

ஆரிய சரித்திரம்

நீதிக்கதைகள்

(படங்கள் அமையப்பெற்றது)

ஐந்தாம் பதிப்பு

சென்னை

கணேஷ் அண்டு கோ

கேம்ப்ரிட்ஜ் பிரஸ், சென்னை.

பதிப்பாசிரியர் முன்னுரை

சிலவருஷங்களுக்குமுன் எம்மால் அச்சிட்டு வெளிவிடுக்கப்பெற்ற இந்நூலின் நான்குபதிப்புந் தீர்ந்து இப்பொழுது ஐந்தாம் பதிப்பு வெளிவந்திருப்பதே இந்நூலின் அருமையையும் பெருமையையும் நன்குவிளக்குதற்கோர் அறிகுறியாகும். தமிழபிமானிகளும் மற்றும் செந்தமிழில் ஆர்வங்கொண்டமூதறிவாளர்களும்இந்நூலின்பாற் காட்டிய ஆதரணை என்றென்றும் மறக்கற்பாலதன்று. முன்பதிப்புக்களை யன்புகூர்ந்து முழுதுமோதிய அமிழ்தினுமினிய தமிழ்வித்துவான்கள் பலர் எம்மிடஞ் சுட்டிக்காட்டிய சிற்சில திருத்தங்களுக்காக அவர்பால் யாம் மிக்க நன்றிபாராட்டுவதுடன், அத்திருத்தங்களனைத்தையும் இப்பதிப்பினில், அவர் தம் கோரலுக்கிணங்கி, கூடியவரையில் நிறைவேற்றியுள்ளோம். அருந்தவ பாரதப் புதல்வியாகத் தென்றேயத்தில் நடமாடும்தமிழ்மொழியினைத்தரணியில்வேரூன்றச் செய்யும் உத்தமநோக்கத்தை நமது ஆரியாபிமானிகள் பெரிதும் தாங்கியுள்ளாராதலின், அவ்வாரியரது சரித்திரமும் அந்நோக்கத்திற்குச் சிறிது இடங் கொடுக்குமென்று நம்பி, இவ்வைந்தாம் பதிப்பினை வெளிக்கொணர்ந்துளோம்.

கணேஷ் அண்டு கோ

முதற்பதிப்பு	மார்ச்சு	1915
இரண்டாம் பதிப்பு	அக்டோபர்	1915
மூன்றும் பதிப்பு	ஆகஸ்டு	1917
நான்காம் பதிப்பு	ஜூலை	1921
ஐந்தாம் பதிப்பு	ஆகஸ்டு	1924

முகவுரை

எனைத்தானும் நல்லவை கேட்க;
அனைத்தானும் ஆன்றபெருமை தரும்.

கடலாடை சூழ்ந்த இக்காசினியில் எய்தற்கரிய மானிடப்பிறவி வாய்க்கப் பெற்றோர் தங்களது வாண் முகத்தில் இருவிழிகள் படைத்திருப்பினும், வானத்தே கதிரவன் எழுந்தாலன்றி, நிலத்திலுள்ள பொருள்களைக் காண்டலருமையாம். அங்ஙனமே, கண்ணைப்போல் பெருமை பொருந்திய செல்வமும் அறிவும் மானிடர் பெற்றுளாரேனும், நூற்கேள்விகளை யுணர்ந்தாலன்றி இம்மை மறுமை நல்வினை தீவினை முதலிய விஷயங்களை அறிய வியலாது. அறிய வேண்டுமாயின், அவ்வரிய பெரிய பொருள்களை, அனைவரும் நூற் கேள்விகளால் உய்த்துணர வேண்டியதைத் தவிர வேறு வழியில்லை.

எங்நாட்டினும் நன்றெனப்படும் நங்நாட்டிலே அங்நீதி போதங்கள் அடங்கியுள்ள நூல்களோ கடலி னும் பரந்துள்ளனவென்பது அனைவரும் அறிந்த விஷ யம். தோண்டுமளவிற்குத் தக்கவாறு மணற்கேணியூற் றெடுத்துப் பெருகுவதைப்போல், நாம் கற்கும் அள விற்கு ஏற்றவாறு நமது உணர்ச்சி முதிர்ச்சி படையுமா தலின், மேன்மேலும் நாம் விஷயங்கள் பலவற்றையும் படித்து, ஆராய்ந்தவண்ணமாயிருத்தல்வேண்டும். இது

பொருட்டன்றோ சாந்துணையும் கற்றல்வேண்டுமென்று பெரியோர் கூறியுள்ளார்?

நீதிபோதங்கள் யாவும் நமது புராண இதிஹாஸங்களிற் கதாரூபமாக விரிந்து பரந்து கிடக்கின்றன வென்பதை அனைவரும் நன்கறிவர். கற்கண்டு ருசி பொருந்தியது என்று சொல்வதைப் பார்க்கினும், கற்கண்டையே கொடுத்து உருசி பார்க்கச்சொல்லின், அதனுடைய உருசி நன்கு புலப்படுமன்றோ? ஆதலின் முன்னோர்கள் "மக்களே! நீங்கள் மெய்யே பேச வேண்டும். உத்தமர்களாய் நடக்கவேண்டும்" என்று கூறுது, தாங்களே நன்னெறியில் நடந்து நமக்கு வழிகாட்டி யிருப்பதுமன்றி, நல்வழியிலேயே நடந்து நற்கதி பெற்றவர்களின் சரிதங்களைச் சுவைபட எழுதியும் வைத்துளார்.

சிறுவருக்கு ஔஷதத்தைச் சர்க்கரையில் கலந்து கொடுப்பதுபோல், "மெய் பேசி மேன்மைபெற்றான் அரிச்சந்திரன், சூதாடி நாடிழந்தான் நிடதநாட்டதிபதி, குருபக்தியிற் சிறந்து விளங்கினான் ஏகலைவன்" என்ற நீதிகளைக் கதையிலமைத்துச் சொல்வதனால், அந்நீதிகள் யாவும் பசுமரத்தாணிபோல் நம் மனதிற் பதியுமென்பது திண்ணம்.

இஃதன்றி, நமது நாட்டு நூல்கள் பலவற்றையும் மேனாட்டார் தங்களது பாஷைகளில் மொழி பெயர்த்து அவைகளை அறிந்து ஆனந்தமெய்துவதனாலேயே நமது முன்னோர் இயற்றியுள்ள நூல்களின் பெருமை இனிது விளங்குவதை யாம் சொல்ல வேண்டுவது அனாவசியம்.

ஆகவே, அத்தகைய மேன்மை வாய்ந்த நன்னூல்களிற் சிறந்துள்ள நீதிகளை அனைவரும் நன்கறியுமாறு, அவைகளிற் காணப்படும் சிறந்த நீதிக் கதைகளைத் தேர்ந்தெடுத்து இலகுவான செந்தமிழ் நடையில் எழுதி, ஆரியசரித்திரம் என்று பெயர்புனைத்து, அச்சிட்டு வெளிப்படுத்த முன்வந்துளோம்.

இச்சரித்திரத்திலுள்ள கதைகள் பலவும் இராமாயணம், பாரதம் முதலிய பல நூல்களிலிருந்து திரட்டப்பட்டவை.

கலாசாலைகளிற் பயிலும் சிறுவர் சிறுமியர்க்கு நீதி போதம் அவசியமாவதை முன்னிட்டு 'விளையும் பயிர் முளையிலே' என்னும் முதுமொழியின் வண்ணம் அனைவரும் இளம்பிராயத்திலேயே நல்வழியிற் பழக வேண்டுமென்பது வெளிப்படை யாதலால், நாமகளின் அவதாரமாய் விளங்கும் ஒளவையாரும், 'இளமையிற் கல்' என்று மொழிந்துளாரன்றோ ?

ஆதலின், நமது நாட்டுச் சிறுவரும் சிறுமியரும் நீதிக் கதைகளைப் படித்தறியின், நமது முன்னோர்களின் அரும் பெருங் குணங்களை அவர்கள் நன்குணர்வதுடன் அவ்வாறே நல்லொழுக்கத்திற் பழக வழியுமுண்டாகும்.

இனி நமது புராணங்களிலுள்ள கதைகளே ஆரியசரித்திரத்தில் எழுதப்பட்டுள்ளனவென்று இலேசாய் நினைக்க மார்க்கமில்லை. ஏனெனில், நமது புராண இதிகாஸங்களோ அளவின்றி விரிந்துகிடக்கின்றன. அவைகள் பலவும் எழுத்துப்பிழை சொற்பிழையில்லாமல் செவ்வனே அச்சேறவில்லை. மேலும் அவை

கள் ஒவ்வொன்றையும் படித்தறிதல் எளிதில் நிறைவேறக் கூடியதன்று. அன்றியும் அவைகளில் இலை மறைகாய்போல் பதுங்கிக் கிடக்கும் நீதிக்கதைகளை எளிதில் தேடிப்படிப்பதும் கஷ்டமாகும். அதை நிவர்த்திக்கும் உத்தேசத்துடனேயே யாம் இச் சிறு நூலைத் தமிழுலகத்தவர்முன் விடுக்க வெளிவந்தனம்.

இச்சமயம் ஆரிய சரித்திரத்தின் முதற்பாகம் மட்டும் வெளிவந்துளதாயினும், ஈசனது திருவருளையும் தமிழ் மக்களின் பேரபிமானத்தையும் முன்னிட்டு, ஆரிய சரித்திரம் என்றதலைப்பின்கீழ் இன்னும் பல பாகங்களை விரைவில் அச்சேற்றி வெளிவிடவும் தமிழ் மக்களின் ஆதரணை யேற்படுமென்று வேண்டுகின்றனம்.

இக்கதைகளைக் கவனித்துப் படிக்கும் கற்றோர்கள் எமது சிற்றறிவிற் கெட்டாத ஏதேனும் அரியபெரிய விஷயங்களை அறிவிப்பார்களாயின், அவர் மாட்டு யாம் நன்றி பாராட்டக் கடமைப் பட்டவராவோம்.

சென்னை

கணேஷ் அண்டு கோ.

அட்டவணை

ஆரிய சரித்திரம்

யயாதியும் பூருவும்

பிதுர்வாக்கிய பரிபாலனம்

கல்வியிற் சிறந்த சுக்கிராச்சாரியருக்குத் தேவயானி என்றொரு பெண்மணியிருந்தனள். அசுரர்க்கு இறைவனும் விருஷபர்வாவுக்குச் சர்மிஷ்டை என்று ஒரு புதல்வி. அவ்விரு மங்கையரும் நேசத்தால் ஒருவரையொருவர் பிரியாது, நகமும் சதையும்போல் கூடிவளர்ந்து வந்தனர். ஒருநாள் தேவயானியும் சர்மிஷ்டையும் சந்தோஷமாய்ப் பொழுது போக்கும்பொருட்டு நந்தவனஞ் சென்று அதன் சிறப்பைக் கண்ணுற்று மகிழ்ச்சி யடைந்தார்கள். அவ்வாறிருக்கையில், பளிங்குபோல் நீர்நிறைந்த குளமொன்றை ஆங்குக் காணவே, அதில்மூழ்கி விளையாடவேண்டுமென அவாக் கொண்டனர்.

ஆகவே இருவரும் தம்தம் ஆடைகளைக் களைந்து குளக்கரையில் வைத்துவிட்டு நீரிலிறங்கி விளையாடிக் கொண்டிருக்கையில், வேகமாய்க் காற்றுவீசியதனால், தனித்தனியே வைக்கப்பட்டிருந்த ஆடைகள் ஒன்றாய்க் கலந்துபோயின. நீராடி முடிந்ததும், சர்மிஷ்டை முதலில் கரைசென்று, கையிலகப்பட்ட ஆடையொன்றைச் சரேலென்றெடுத்து உடுத்திக்கொண்டனள். அது

தேவயானியின் ஆடையென்பதை அவளறியவில்லை. ஆயினும் அதைக்கண்ட தேவயானி மனம் பொறாது வெகுண்டு, குருமகளாகிய தனது ஆடையை அணிந்துகொண்டது மரியாதைக்குறைவென்று அவளைக் கடிந்து பேசினள். அதுகேட்ட சர்மிஷ்டையும் கோபங்கொண்டு "என் தந்தையைப் புகழ்ந்து, அவர்கொடுப்பதை வாங்கியுண்டு வயிறுவளர்க்கும் சுக்கிராச்சாரியரின் பெண் என்பதை நீ மறந்தாய் போலும்" என்று சொல்லி, அங்கிருந்த ஒரு கிணற்றில் தேவயானியைத் தள்ளிவிட்டுச் சிறிதும் இரக்கமில்லாது தன்மாளிகையை அடைந்து வாளாவிருந்துவிட்டாள்.

அச்சமயம் அவ்வழியே வேட்டையை நாடிவந்த யயாதி என்னும் நாமம்பூண்ட ஹஸ்தினாபுரத்தரசன், கிணற்றில் தேவயானி கிடப்பதைக் கண்டு வினவ, அவள் நடந்ததைநவின்று, தான் இன்னாளென்பதையும் அறிவித்தனள். உடனே யயாதி, அவள் கையைப் பற்றிக் கரையேற்றிவிட்டான். அரசன் செய்த உபகாரத்தால் அவனிடத்து நன்றியறியுள்ளவளாகிய தேவயானி, அவனது எழிலையும் இளமையையுங்கண்டு காதல்கொண்டு, தன்னை மணந்து கொள்ளுமாறு குறிப்பாய் வேண்டினள். யயாதியும் அவள் பாற்சென்ற உள்ளத்தினனாயினும், அந்தணர் குலத்துதித்த கன்னிகையை அவளது தந்தையின் அனுமதியின்றி மணந்துகொள்வது முறையன்று எனக்கூறி, தன் நகர் நோக்கிச்சென்றனன். அதன்பின் தேவயானி விருஷபர்வாவின் நகருக்குச்செல்ல விருப்பற்றவளாய் நகரின் வெளிப்புறத்தே நிற்பாளாயினள்.

பொழுதுசென்றும் தமது பெண் வீடுவந்து சேராததால் மனங்கலங்கின சுக்கிராச்சாரியர் அவளைத்தேடப் புறப்பட்டு, நகரின் வெளிப்புறத்தே தேவயானியைக் கண்டு, சர்மிஷ்டைக்கும் அவளுக்கும் நேர்ந்த மனவருத்தத்தை அறிந்துகொண்டார். அவளுடைய மனத்திருப்தி ஒன்றையே பெரிதும் விரும்பினவராகையால, இஷ்டப்படி அவளை அவ்விடமே நிறுத்தி, அரசன்பாற் சென்றார்.

சென்று, தேவயானிக்கும் சர்மிஷ்டைக்கும் விளையாடப் போனவிடத்தில் நேர்ந்த பூசலையும், இனி அந்நாட்டில் தங்கியிருக்க அவள் விரும்பாததையும், அரசனுக்கறிவித்து, அவளுடன் தாமும் போய்விட வேண்டுமென்று அனுமதி கேட்டார். யாரைத் துறந்தாலும் குருவைத் துறக்க மனமில்லாத அவ்வசுர ராஜன் தன் குருவுடன் தேவயானி இருக்குமிடம் போய், அவளைக் குறையிரந்து வேண்டி, அவள் விரும்பிய வண்ணமே தன் மகளை அவளுக்குத் தாதியாக்கி, வெகுளியைத் தணித்துத் தன் நகரத்திற்கு அழைத்துச் சென்றான். பிறகு, அவ்விருமகளிரும் கருத்தொருமித்து வாழ்ந்து வந்தனர்.

அப்பால் அம்மகளிர் இருவரும் முன்போல் பூஞ்சோலைசென்று காலங்கழித்து வருவாராயினர். ஒரு நாள் யயாதிமன்னன் அங்கு மறுபடியும் தோன்றவே, முன்கண்டது முதல் அவனையே சிந்தித்திருந்த தேவயானி, அவனை அணுகி, நாணத்தால் தலைகுனிந்து நின்று தன்னை மணந்து கொள்ளும்படி மீண்டும் வேண்டினள். அவளுடைய வனப்பையும், அருகேயிருந்த

சர்மிஷ்டையின் அழகையும் கண்ட காவலன் பிரமித்தா னாயினும், சுக்கிராச்சாரியரின் சம்மதமின்றி அவளை மணக்க அஞ்சுவதாக அறிவித்தனன்.

தன் தந்தையை அழைப்பித்து அவரது சம்மதத்தைப் பெறுவதாகச் சொல்லி ஒரு தோழியைத் தன் தந்தைபால் அனுப்பினள் தேவயானி. சுக்கிரரும் தமது மகள் விரும்பிய வண்ணமே வந்து அவளை யயாதிக்கு மணம்புரிவித்தார். பின்பு, மன்னனுடன் மகளை யனுப்பும் பொழுது, சர்மிஷ்டையையும் உடன் அனுப்பி, அவளை அன்புடன் நடத்தி வரும்படி விரும்பினாராயினும், அவள்மீது இச்சை செலுத்தக் கூடாதென யயாதிக்கு அறிவித்தார்.

அவ்வாறே அரசன் தேவயானியுடன் சுகமேவாழ்ந்து வந்து நாளடைவில் இரண்டு புத்திரர்களை யடைந்தான். இது நிற்க, தேவயானியை வாய்க்கு வந்தவாறெல்லாம் முன்னம் ஏளனமாய்ப் பேசிய சர்மிஷ்டை பின்னர் தன் நிலைமையை நினைந்து பெரிதும் வருந்தியிருந்தனள். பெண்ணாய்ப் பிறந்தவர்கள் கணவனைப் பெறாது காலங் கழிக்கும்படி நேர்தல் கொடுமையினும் கொடுமை யல்லவா? என்றாலும், மக்கட்பேற்றையேனும் அடைய வேண்டுமென்ற எண்ணம் சர்மிஷ்டையினிடம் குடி கொண்டுவிட்டது. ஆயினும், அப்பேற்றை அநீதியாக அடைய அவள் மனமொப்பவில்லை.

இவ்வாறு நாட்கள் சில கழிந்தன. தன்னிடம் வந்து யார் எதை விரும்பினும் அங்ஙனமே தந்தருளுவதாக ஒருகாலத்தில் அரசன் பறையறைவித்திருந்தான். தான் கொண்டுள்ள கருத்தைப் பூர்த்தி செய்து

கொள்ள அதுவே தக்க தருணமென்றறிந்த சர்மிஷ்டை, யயாதி மன்னனையடைந்து, புத்திரதானத்தை விரும்பினள். யயாதிக்கோ ஒன்றுந் தோன்றவில்லை. ஏனெனில், சர்மிஷ்டையின்மீது காதல் செலுத்தக் கூடாதென்பது மாமன் இட்டிருக்கும் கட்டளை. சர்மிஷ்டையோ புத்திரதானத்தை வேண்டுகின்றாள். அவள் விரும்பியபடி தானமளிப்பின், மாமனது கட்டளைக்குப் பங்கம் நேர்கின்றது. தானமளியாது போயின், தான் கொண்டுள்ள நோன்பு பழுதுறுகின்றது. எனினும், மாமன் இட்ட கட்டளையைவிடத் தான் பூண்டுள்ள விரதத்தை மெய்ப்பித்தலே சிறந்ததென்று கருதிய காவலன், சர்மிஷ்டையின் இஷ்டப்படி அவளைமணந்து, மக்கட்பேறளித்தான்.

இதனைத் தேவயானி அறிந்தாளில்லை. ஆயினும் சர்மிஷ்டைக்கு ஓராண்மகவு தோன்றி யிருப்பதைக் கண்டு ஐயங்கொண்டு, அவளை விளித்து, "நீ ஆண் மகவை எவ்வாறடைந்தாய்?" என்று வினவினாள். அதற்கு "அன்னாய்! பரமதயாளுவான ஒரு முனிவரின் பேரருளால் புதல்வனையடைந்தேன்" என்று பதிலளித்தாள் சர்மிஷ்டை. தேவயானி அதனை மெய்யென்றே நம்பியிருந்தாள். பின்னர் நாலைந்தாண்டுகள் சென்றன. அதற்குள் யயாதியின் அருளால் மீண்டும் இரண்டு ஆண்மக்களைப் பெற்றெடுத்து உள்ளங் களித்தாள் சர்மிஷ்டை.

சர்மிஷ்டையின் புதல்வர் மூவரும் மன்னவனைப் போல் உருவும் அழகும் பெற்றிருப்பதைக் கண்ணுற்ற தேவயானிக்கு ஆழ்ந்த யோசனை உதித்துவிட்டது.

என்னவெனில், யயாதி மன்னன் சர்மிஷ்டையினிடம் நேசங்கொண்டிருக்க வேண்டுமென்பதே. என்றாலும் கண்ணாரக்காணுமல் ஒருவன்மீது கள்ளம் நினையாதே என்றபடி, தேவயானியும் ஒருவாறு ஐயம் நீங்கியிருந்தாளாயினும், ஒரு நாள் மாலைப் பொழுதில் அரசனும் சர்மிஷ்டையும் பூங்காவில் வேடிக்கையாக உலாவியிருப்பதைக் கண்டுவிட்டாள். உடனே அவளுக்குண்டான கோபம் பொங்கிவழியத்தலைப்பட்டது.

ஆதலின், சொன்ன சொல் தவறிய கணவனிடம் வாழ விருப்பற்றவளாகித் தன் பிதாவின் வீடு சேர்ந்தாள். இதனை யறிந்த இறைவனும் சுக்கிராச்சாரியாரது இல்லமடைந்தான். உடனே சுக்கிரர் யயாதியை நோக்கி "நீயோ என் கட்டளையை மீறி நடந்தாய். அவ்வாறு நடக்க உன் இளமையன்றோ காரணமாயிருந்தது? ஆதலின், இக்கணமே உன் இளமை உன்னை விட்டகலக்கடவது" என்று சாபமிட்டனர். அந்நிமிஷமே மன்னவனை மூப்பு மூடிக்கொண்டது.

திடீரென இளமை நீங்கி மூப்பினுல் போர்க்கப்பட்ட பார்த்திபன் பெரிதும் வருந்தி, அக்குருவை நோக்கி "ஐயனே! தாங்கள் விதித்திருந்த உத்தரவைக் கடந்து நடந்தேனுயினும், யான் சொல்லப் போகும் சமாதானத்தைக் கேட்டருள்க; யார் எதை விரும்பினும், அவ்வண்ணமே அளிப்பதாக விரதம் பூண்டகாலத்து, சர்மிஷ்டை என்னை அடைந்து புதல்வன் வேண்டுமென்றனள். அக்காலத்தும் தங்களுடைய கட்டளையை நான் மறந்து விட்டேனில்லை. ஆயினும், கொண்ட விரதம் பொய்த்துப் போகுமே என்றஞ்சி, அப்

பெண்ணின் விருப்பத்தைப் பூர்த்தி செய்தேன். ஆகவின், சிறியேன் செய்த பிழையைப் பொறுத்து, என்னை மன்னித்தல் வேண்டும்" என்று வேண்டி நின்றான். விற்பிடித்து நீர்கிழிய எய்த வடுப்போல் சான்றோர் சினம் கணப்பொழுதில் மாறிவிடுமாகையால், அரசனது வாய் மொழியைக் கேட்ட சுக்கிரர் சிறிது கோபந் தணிந்தார்.

தணிந்து காவலனை நோக்கி "அரசே! நான் கொடுத்த சாபத்தைப் போக்குவது முடியாது. ஆனாலும், அதை நீக்க ஒரு மார்க்கமுண்டு, மீண்டும் நீ இளமையுடன் வாழ விரும்பின், உன் மைந்தர்களில் எவரேனும் உனது கிழத்தனத்தைப் பெற்றுக்கொண்டு, இளமை தருவாராயின், இன்னும் சின்னாள் நீ இளமையுடன் களித்திருக்கலாம்" என்றருளினர். பின்பு, அரசன் தன் அரசியுடன் தேசமடைந்து, தேவயானியிடம் தோன்றிய தன் புதல்வர்களைக்கூவி,

"மக்களே! மோகம் மேலிட்டு, முனிவர் சொன்ன வார்த்தையை அசட்டை செய்ததனால், மூப்பு என்னை மூடிக்கொண்டது. ஆதலின், நீங்கள் என்மீது அன்பு கூர்ந்து என் கிழத்தனத்தை ஏற்றுக் கொண்டு, உங்களது யௌவனப் பருவத்தை அளிக்க வேண்டும்" என்று கேட்டான். இளமையைநல்கி, மூப்பை ஏற்றுக் கொள்ள அவ்விருவரும் இசையவில்லை.

ஆகவே, சர்மிஷ்டையின் மைந்தர்களை அரசன் அழைத்து அவ்வாறே வேண்ட, முதல் இரண்டு மைந்தர்களும் தந்தையின் வேண்டுகோளைத் தட்டி விட்டனர். ஆயினும் கடைசிப்பையனாகிய பூருவென்

பான் தகப்பனது பாதங்களில்விழுந்து " தந்தையே! இக்கணமே என் இளமையை நல்கி, தங்களது கிழத்தனத்தைக் கொள்கிறேன். தாங்கள் இன்புற்றிருப்பதைக் காண்பதினும் எனக்கு வேறு இன்பமுளதோ? இல்லை! இல்லை! தாங்களே எனது கடவுள். தாங்களே எனது நற்குரு. ஆதலின் தங்கள் பணியைத்தலைமேற்கொண்டு நடப்பதே என் கடமை.

" அவ்வாறு, இருப்பினன்றோ நான் நற்கதி பெறலாகும். ஈன்றுவளர்த்த தாய் தந்தைக்கு எவரே கைம்மாறு இயற்றிடுவார்? நூறு வயதளவும் அடிமைத்தொழில் பூண்டு, மூவுலகத்திலுள்ள பொருள்கள் பலவற்றையும், அளித்து முறையாக வழிபாடு இயற்றிவரினும், தாங்கள் ஒரு நாள் என்னைப் பரிவுடன் வளர்த்ததற்கு ஈடாகாதே! ஆதலின், என் இளமையே யன்றி உயிரைக் கேட்பினும், அவ்வாறே மனமுவந்து கொடுக்கச் சித்தமா யிருக்கின்றேன். அருமைத் தந்தையே! வருந்த வேண்டாம். தாங்கள் சுகித்திருப்பீர்களாக. அவ்வாறு தாங்கள் இன்பமுடன் வாழ்ந்து வருவதைவிட எனக்குப்·பரமானந்தம் வேறெதுவு மில்லை" என்று பகர்ந்தான்.

அதுகேட்ட மன்னவன் அடங்காமகிழ்ச்சி கொண்டு மகனை மார்புறத் தழுவி " என் குழந்தாய்! நீயன்றோ புத்திரன்! இத்தகைய புதல்வனைப் பெறுவதற்கு முற்சன்மத்தில் என்ன பாக்கியஞ்செய்தேனோ?" என்று அவனைக் கொண்டாடி, அவனது இளமையைப் பெற்று இன்பமுடன் வாழ்ந்திருந்தான்.

இளமைகொண்டு. தன் தந்தை இன்பம் அனு

பவிப்பதைக்கண்ட பூருவும் மனம் பூரித்திருந்தான். இதுநிற்க, பிதுர்வாக்கிய பரிபாலனத்தில் ஸ்ரீராமரும், பீஷ்மரும் சிறப்புற்றன ரென்பது யாவருமறிந்ததே. ஆயினும், பூருவுடன் அவர்களை ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, பிதுர்வாக்கிய பரிபாலனத்தில் பூருவை அவர்கள் ஒவ்வார் என்றே சொல்லலாம். ஏனெனில், தந்தையின் சொல்லை மெய்ப்பிக்கும் வண்ணம் ஸ்ரீராமர் நாட்டைத் துறந்து மனைவியுடன் காட்டடைந்தார். பீஷ்மரும் தமது தந்தை சந்தனுவுக்கு யோசனகந்தியை மணம் புரிவிக்க ஆயுள் பரியந்தம் பிரம்மசாரியாகவே இருப்பதாகச் சபதம் செய்து அவ்வாறே யிருந்தார். ஆயினும் அவ்விருவரும் தந்தையின் மூப்பைப்பெற்று இளமை நல்கினர்களில்லை. ஆதலினால் பிதுர்வாக்கிய பரிபாலனத்தில் பூருவே சிறந்தவனாவான்.

யயாதி பன்னெடுங்காலம் இளமையுடன் பரமசுகத்தை யனுபவித்த பின்னர், தவஞ்செய்ய விரும்பித் தன் அருமைப் புதல்வனும் பூருவையழைத்து அவனுக்கு இளமையை நல்கி, அவன் ஏற்றுக்கொண்டிருந்த மூப்பைப் பெற்றுக்கொண்டது மல்லாமல், அவனுக்கே முடிசூட்டி, மற்றை நான்கு மைந்தர்களையும் அவனுக்குட்பட்ட சிற்றரசர்களாக்கினன். பின்பு, மனத்தை யடக்கித் தவஞ்செய்வான் வேண்டிக் கானகமடைந்து, அருந்தவமியற்றி விண்ணுலகடைந்தனன். பூருவோ மனுநெறி பிறழாது நாட்டையாண்டு இன்பமுடன் வாழ்ந்து வந்தான்.

ஸௌபரி முனிவரின் சலனம்

அனுபவத்தால் ஆசை அதிகரிக்கும்

பொன்னாட்டினும் மேன்மைவாய்ந்த நம் பாரத கண்டத்தை முன்னம் ஆண்டுவந்த மன்னர்களில் மிகுந்த வீரதீரமும், நீதிமுறையும், அழியாப் பெரும் புகழும் படைத்தவன் மாந்தாதா என்னும் மன்னர் மன்னன். இப்பூமண்டலம் முழுவதும் அவனது ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. அக்காலத்தில் அவனது தலைநகராய் விளங்கியது அயோத்தி. அது ஸரயுவென வழங்கும் நதிக்கரையில் உள்ளது. அம்மன்னவனது மனைவியின் பெயர் இந்துமதி. அவ்வரசியின் பெயர் இயற்பெயராயிருப்பினும், (இந்து—சந்திரன், மதி—முகம்; சந்திரனைப்போன்ற முகத்தை யுடையவள் என்று பொருள் படுதலால்) காரணப் பெயரென்றே சொல்லத் தடையில்லை. மன்னவனும் மாதரசியும் எல்லாவித சம்பத்தையும் பூரணமாய்ப் பெற்றிருந்தார்கள். அவர்களுக்கு மூன்று புதல்வர்களும் ஐம்பது புதல்விகளும் உண்டு. அந்நங்கையர் பலரும் மங்கைப் பருவமடைந்ததைக் கண்டு அவர்களுக்கு மணம் முடிக்க நிச்சயித்தான் மன்னவன்.

இதுநிற்க, வேதத்தில் தேர்ச்சிபெற்று விளங்கிய ஸௌபரி யென்னும் முனிவர் நீரிலேயே மூழ்கி

யிருந்து பன்னீராண்டு தவம் புரிந்துவந்தார். அந்நீரி லேயே சம்மதன் என்னும் மீனென்று வசித்திருந்தது. அம்மச்சத்திற்கு எண்ணிறந்த குஞ்சுகள். அத்துறவி தவமியற்றிக் கொண்டிருந்த இடத்தின் அருகே அம் மீன் கணக்கில்லாத தன் குஞ்சுகளுடன் குலாவியிருந் தது. அதன் குஞ்சுகள் தாயின்மீது ஏறிவிழுந்து மகிழ்ச்சியுடன் விளையாடுவதை அம்முனிவர் கண்டார். கண்டதும் பின்வருமாறு சிந்திக்கலானார் ;—

"ஆ! இம்மீனின் பாக்கியமே பாக்கியம்! இதற்கோ கணக்கற்ற குஞ்சுகள் இருக்கின்றன. மக்கள் மெய் தீண்டல் உடற்கின்பம் என்றபடி, தன்மீது ஏறிவிழுந்து விளையாடும் குஞ்சுகளின் செயல்களினால், இம்மச்சம் பெருமகிழ்வுடன் வாழ்ந்து வருகின்றது. ஆகவே, நாமும் ஏன் இம்மீனைப்போல் குழந்தைகளுடன் கூடிக் களித்திருக்கக்கூடாது? மீனின் அதிர்ஷ்டவசத்தை நினைக்க நினைக்க, இல்லறமே பெரிதெனத் தோன்று கிறது. துறவறத்தினால் எய்தக்கூடிய பயனெல்லாம் இல்லறத்தைச் செவ்வனே நடத்திவரின் சித்திக்கும். ஆதலின் நாம் இப்பொழுதே இல்லறத்தைமேற்கொள்ள வேண்டும்."

இவ்வாறு நினைக்கவே அம்முனிவரின் தவத்தூய்மை சிதறிப்போய் விட்டதெனக் கூறத்தடையுமுண்டோ? இல்லறத்தைக் குறைவற நடத்தி, எண்ணிறந்த மக் களைப் பெற்று, இன்பமுடன் வாழவேண்டுமென்று தீர் மானித்துக்கொண்ட முனிவர் அப்பொய்கையினின்று வெளிக்கிளம்பி, நாடு நோக்கிச்சென்றார். செல்லும்வழி யில் அச்சமயம் அந்நாட்டை நீதியுடன் பரிபாலித்து

வரும் பார்த்திபன் மாந்தாதா என்பதை ஞானதிருஷ்டியினால் அறிந்துகொண்டார்.

முக்கால நிகழ்ச்சிகளையும் நினைத்தமாத்திரத்திலேயே அறிந்துகொள்ளும் சக்தி முனிவர்களுக்கு உண்டென்பது அனைவரும் அறிந்த விஷயம். காட்டைவிட்டு நாட்டையடைந்த ஸௌபரி அயோத்திநகர் சென்று அரசனது மணிபண்டபத்தில் புகுந்தார். முனிவரின் வரவைக் காவலாளிகள் காவலனுக்கு உணர்த்த, மாந்தாதா சரேலென வெளிப்பட்டு, ஸௌபரியை எதிர்கொண்டழைத்து அரண்மனையின் உள்ளே இட்டுச்சென்று, ஆசனத்திருத்தி, அவருக்குச் செய்யவேண்டிய உபசாரங்கள் அனைத்தையும் குறைவின்றி நடத்தினன்

பின், முனிவரை நோக்கி "ஆரியதிலகமே! தாங்கள் இன்று என்னை நாடிவந்தது நான் செய்த நற்றவமோ? அன்றேல் என் முன்னோர் செய்த பெரும்பேறோ! தாங்கள் இங்கு எழுந்தருளிய காரணம் யாதோ?" எனப் பணிவுடன் வினவினன். உடனே மன்னவனை முனிவர் ஆசீர்வதித்து "அரசர் சிகாமணியே! நான் ஒரு யாசகத்தை முன்னிட்டு உன்னை நாடி வந்தேன்" என்று சொல்லுமுன், "அவ்வாறேயாகுக. தாங்கள் விரும்புவது யாதென வெளியிடின், அவ்விதமே செய்யக் காத்திருக்கின்றேன்" என்று மகிழ்ச்சியுடன் பதிலளித்தான் பார்த்திபனும்.

அரசனது மறுமொழியைக்கேட்ட அந்தணர், இறைவனை நோக்கி, "இராஜதிலக! நான் விவாஹம் செய்துகொள்ளும் விருப்பமுள்ளேன், சூரியகுல அரசர்களைச்

சார்ந்த யாசகர்கள் ஏமாறிப்போனதே கிடையாது அதிலும் நீயோ சிறந்த நீதிமான். உனக்கோ ஐம்பது குமாரிகள் இருக்கின்றனர். அவர்களில் ஒருத்தியை எனக்குத் தானம் புரிதல் வேண்டும்" என்றார்.

இம்மொழிகளைச் செவியிலேற்ற மன்னவன் மனந் திடுக்கிட்டு விழிக்க நேர்ந்தது. ஏனெனில், அவ்விறைவனுடைய சிந்தனை பின்வருமாறு இருந்ததென்றே சொல்லவேண்டும்.

"முனிவர் இன்னது விரும்புகின்றார் என்பதை உணர்ந்து கொள்ளாமல் வாக்களித்து விட்டோம். அவரோ கண்டோர் அனைவரும் நகைக்கும்படி நரை திரை மூப்புடன் விளங்குகின்றார். நமது குமாரிகளோ முப்பத்திரண்டு இலட்சணங்களும் ஒருங்கே அமையப் பெற்றவர்கள். கைந்நிறைந்த கருந்தனத்தினும் கண் நிறைந்த கணவனே மேல் என்பது பழமொழி. ஆகவே, தொண்டு கிழவனுயிருக்கும் துறவியைமணந்துகொள்ள நம்மகளிர் மனமொப்பதெங்ஙனம்? பெண்ணுதவுங் காலை பிதா விரும்பும் வித்தையே என்னும் வசனம் மெய்தான். அது போலவே முனிவரும் ஸகல சாஸ்திர நிபுணர். ஆயினும், உற்றார் பெற்றார் அற்ற துறவியை அரசிளங்குமரிகள் மணாளனாகப் பெறுவரேல் பார்ப்போர் பலரும் பரிகசிப்பரன்றோ! என் செய்வோம்! ஒன்றுந் தோன்றவில்லையே! விரும்பிய வண்ணமே அளிப்பதாக முனிவருக்கு வாக்களித்து விட்டோம். அவ்வாய் மொழியை நிறைவேற்றாது போயின், முனிவரின் சாபத்தை அனுபவிக்க வேண்டியதல்லாமல், நங் குலத்தின் பெயரும் புகழும் பழுது

படும். சூரியகுலத்தில் தோன்றிய அரசன்—அதிலும் மாந்தாதா—சொன்ன சொல் தவறினனென உலகமனைத்தும் ஏசிப்பேசும். வாக்குறுதி தவறுவண்ணம் கன்னியரில் ஒருத்தியை முனிவருக்குத் தானஞ் செய்யின், மக்களுக்குச் சத்துரு மாதா பிதா என்னும் பழமொழி நம்மிடத்தில் மெய்யாகிப்போம். அதுவுமல்லாமல், பெண்ணின் வாழ்வும் பரிதபிக்கத் தக்கதாகும். இருதலைக் கொள்ளி எறும்பு போலல்லவா இச்சமயம் அகப்பட்டுக்கொண்டு வருந்த நேர்ந்தது.''

இவ்விதம் சிந்தித்து வருந்தி, மௌனஞ்சாதித்திருக்கும் கொற்றவனைத் துறவி நோக்கி, ''மன்னர் மன்ன! யாது யோசனை? வான் கிழமென நினைக்கிறாய் போலும்! ஒருபுதல்வியை எனக்கு விவாகஞ்செய்து கொடுத்தே தீரவேண்டும். முன்னும்போகாமல், பின்னும் போகாமல் சிந்தாகுலத்துடன் இருப்பதாகத் தோன்றுகிறது'' என்றார் :

அகத்தினழகு முகத்தில் தெரியுமல்லவா!

உடனே அரசனும் சொல்வான் :—

''ஐயனே! தாங்கள் கொண்டிருக்கும் விருப்பத்தைப் பூர்த்திசெய்ய எள்ளளவும் தாமதமில்லை. ஆயினும், எங்கள் குலமுறைப்படி, கன்னியரே கணவனைத் தேர்ந்து கொள்வது வழக்கமென்பதைத் தாங்களே நன்கு அறிவீர். அவ்வாறனுக்கே மணம் முடிப்பது தந்தையின் கடமை. ஆதலின் இச்சமயம் யாது செய்வதெனத் தோன்றவில்லை.''

பின், அம்முனிவர் புரவலனைப் பார்த்து ''அரசே! உங்கள் குலமுறையினின்று தவறவேண்டாம். நான் கன்

னிமாடஞ் செல்கின்றேன். என்னைக்கண்டதும் மணம் புரிந்துகொள்ள அக்கன்னியர் இசையின் அவ்வாறே செய்யத் தடையிராதே?" என்றியம்பினார். "தண்டூன்றி நடக்கும் தன்மை வாய்ந்த தொண்டுகிழவனைக் கணவனாகக் கொள்ள எந்தப்பெண்ணும் விரும்பாள். முனிவர்கூறிய யோசனை நமக்குந் தோன்றவில்லை. முனிவரது எண்ணம் பலிக்காது, நல்லவேளை!" என்று களித்த நீதிபரன், காவலாளிகளைக்கூவி, முனிவரைக் கன்னிமாடத்திற்கு அழைத்துச்செல்ல உத்தரவுசெய்தான்.

முனிவரும் கன்னிமாட மடைந்தார். அடைந்ததும், ஆடவரும் கண்டு காமுறும்படி, காமனைப்போலொத்த உருவந்தாங்கி, அக்கன்னியரின்முன்பு தோன்றினார். தோன்றவே அவர்கள் அனைவரும் கதிரவனைக்கண்ட தாமரைபோல் முகமலர்ந்து அடங்கா மகிழ்ச்சியுடன் முனிவரைச் சூழ்ந்துகொண்டனர்.

பின்பு, முனிவரின் கட்டழகில் ஈடுபட்ட அக்கன்னியர் அனைவரும் முனிவரையே நாயகனாயடைய ஈசனைத் துதித்தனர் என்றால், பொய்வேடம் புனைந்துசென்ற முனிவரின் எண்ணம் பலித்துவிட்டதென்பதை நண்பர்களே அறிந்துகொள்ளலாம்.

இனி "நான்தான் அவரை மணந்து கொள்வேன்! நீ அவரை இச்சித்தல் கூடாது" என்று ஒவ்வொரு பெண்ணும் பகர, அம்மங்கையர்க்குள் வாக்கு வாதம் தோன்றிவிட்டது. இந்த அதிசயத்தைக் கண்ணுற்ற காவலாளிகள் விரைந்து சென்று, அந்தப்புரத்தில் நடக்கும் ஆச்சரியங்களை அரசனுக்கு அறிவித்தனர். தன் புதல்வியரின் ஆசைப்பெருக்கை உணர்ந்துகொண்டு

"இதென்ன! விந்தையினும் விந்தை? கிணறுவெட்டப் பூதம் புறப்பட்டது போலாயிற்று. தொண்டுகிழவனை மணந்துகொள்ள மங்கையர் மனமொப்பார் என்று எண்ணியிருந்தேனே. முதன் முறை முனிவருக்குச் செய்த வாக்குறுதியை ஒருவாறு அகற்றிக்கொண்டும், மறுபடியும் கொடுத்த வாக்குறுதியைப் பூர்த்திசெய்யாதுபோயின், முனிவரிடம் சாபத்தை அனுபவிக்க நேரிடுமே. அன்றியும் பெண்கள் அனைவரும் அவரையே வரனாகக் கொண்டுவிட்டனர். அவர்களது எண்ணத்திற்கு மாறாக நடந்தால், அதுவும் தீங்காய் முடியும்" என்று மீண்டும் பிரமித்தான் வேந்தர் வேந்தன்!

ஆயினு மென்ன? முனிவரும் மக்களும் கோரியபடியே, தன்குமரிகள் அனைவரையும் அவருக்கே மணம் புரிவித்தான் மன்னவன்.

பின்பு, அந்த ஐம்பது அரசகுமாரிகளையும் ஸௌபரி தமது ஆசிரமத்துக்கு அழைத்துச்சென்று, தேவ சிற்பியாகிய விசுவகர்மாவை விளித்து, மாளிகைகள் நிருமிக்கும்படி கட்டளையிட்டார். உடனே விசுவகர்மாவும், அந்த அரசகுமாரிகளுக்குத் தனித்தனியே மாடமாளிகைகளும், அவைகளில் பூஞ்சோலைகளும், அப்பூஞ்சோலைகளின் நடுவே தாமரைத் தடாகங்களும், அவைகளின் மத்தியில் அழகுவாய்ந்த நீராழிமண்டபங்களும் நிருமித்தான். அம்மாளிகைகள் யாவும் இந்திரலோகத்தைக் காட்டிலும் சிறப்புற்று விளங்கின. தமது தவத்தின் வன்மையால், நந்தனமென்னும் மாநதியை அம்மாளிகைகளின் நடுவே ஓடும்படிசெய்தார் முனிவர்.

இவ்வாறு அப்பெண்களுக்கு வேண்டிய ஸகல ஸௌகரியங்களையும் அம்முனிவர் அமைத்து யாதொரு குறைவுமின்றி அவர்களுடன் போக போக்கியங்களை அனுபவித்து வந்தார். அப்பெண்களும் முனிவரும் அனுபவித்துவந்த வைபவங்களுக்கு, இந்திரபோகமும் ஈடாகாதென்று சொல்லலாம்.

ஈதிங்ஙனமிருக்க, ஒருநாள் அரசன் தன் புதல்விகளைப்பற்றிக் கவலைகொண்டு "நம்மக்களை முனிவருக்குக் கொடுத்து விட்டோமே! அரண்மனையி லிருந்தால், அவர்கள் பரமசுகத்துடன் வாழ்வார்களே; முனிவருக்கு வாழ்க்கைப்பட்டபின் அவர்களுடைய கதி என்னவாயிற்றோ? தம்மையே பாதுகாத்துக் கொள்ளும் வசதிகளில்லாத துறவி அப்பெண்களை எவ்வாறு நன்னிலைமையில் நடத்தி வரக்கூடும்?" என்று பலவாறாக ஆலோசித்து, அவர்களைக் காண விரும்பி அவர்கள் வசித்துவந்த வனத்தை நோக்கிச் சென்றான். சிறிதுதூரஞ் சென்றதும், தன் மாளிகையினும் பன்மடங்கு சிறப்புற்று விளங்கும் எண்ணிறந்த மாளிகைகளைக் கண்டு "ஈதேது விந்தையாயிருக்கின்றது? கானகத்தே பூஞ்சோலை சூழ்ந்த மாடமாளிகைகள் இருக்கக் காரணமென்ன?" என்று அதிசயித்து, அம் மாளிகைகளினுள்ளே சென்றான்.

தன் தந்தையின் வருகையைக் கண்டு களித்த ஒரு நங்கை ஓடிவந்து வணங்கி," எந்தாய் வருக! வருக!" என்று உப்பரிகைக்கு அழைத்துச் சென்றனள். உடனே மன்னவன் தன் மகளை அன்புடன் நோக்கி, "என் கண்ணே! உங்களை முனிவர்கையில் ஒப்படைத்துக்

கொடுத்ததுமுதல் உங்களது சிந்தையே என்மனத்தில் குடிகொண்டிருக்கின்றது. நீ இன்பமுடன் வாழ்ந்து வருகின்றாயோ ?" என்று வினவினன். வினவியதும், அம்மங்கை மன்னவனை நோக்கி " அன்புள்ள தந்தாய் ! எங்களைப்பற்றி ஏன் கவலை? இந்திராணியும் எங்களைப் போல வாழ்ந்திருக்கமாட்டாள் ! எங்களுக்கு உள்ள சௌகரியங்களைத் தாங்களே கண்ணாரப் பார்வையிடுங் கள்" என்றுரைத்து, உப்பரிகையின் ஒவ்வொரு பாகத் திற்கும் அவனை அழைத்துச் சென்று, அங்குள்ள எல்லாப் புதுமைகளையும் காட்டினள்.

அவைகளையெல்லாம் கண்ட காவலன் களிகூர்ந்து "குழந்தாய் ! உனக்கு ஏதேனும் மனக்குறையுளதோ?" என்று கேட்டான். அக்கேள்விக்கு " அப்பா ! எனக்கு எவ்விதமான குறைவுமில்லை. எக்காலமும் என் கணவன் என்னருகிலேயே இருந்து, என்னை மகிழச் செய்கின் ருர். நாள் முழுவதும் என் மாளிகையிலேயே தங்கி விடுவதால், என் சகோதரிகளிடம் அவர் அன்புகொள்ள வில்லை என்றே நினைக்க வேண்டியிருக்கின்றது. இதைத் தவிர, யான் பாக்கியவதிதான் " என்று பதில் உரைத் தாள்.

பின்பு மாந்தாதா அம்மாளிகையைவிட்டு, அடுத்த மாடஞ் சேர்ந்து, அங்கிருந்த மற்றொரு பெண்ணின் யோக க்ஷேமங்களை விசாரித்தான். அப்பொழுது அப் பெண்,

" தந்தையே ! தங்களது ஆசீர்வாதத்தால் நான் போகவதியாகவே வாழ்ந்து வருகின்றேன். ஆயினும் ஒரு குறைவுண்டு. அஃதென்ன வெனில், ' என்கணவன்

ஒரு கணமும் என்னை விட்டுப் பிரிவதில்லை. ஆகவே, எனது மற்ற ஸகோதரிகளை அவர் மறந்து விட்டார் போலும்! இக் குறையொன்றே என் மனத்தைப் புண் படுத்துகின்றது,' என்றனள்.

இவ்வசனங்களைக் கேட்டதும், மாந்தாதா மற்றொரு மாளிகை சென்று விசாரிக்க, அவளும் முன்கண்ட வாறே பதிலளித்தாள். இவ்வாறு எல்லாக் குமரிகளும் இயம்புவதைக் கேட்ட இறைவன் தன் மக்களுக்கு யாதொரு குறையுமில்லை யென்று எண்ணி அகங்களித் தான்.

தேவேந்திரனது தேவிக்கும் கிட்டாத போகங்களைத் தன் புதல்வியர் அனுபவித்து வருவதைக் கண்டறிந்த காவலனும் பெரிதும் மகிழ்ச்சியடைந்த பின்னர், ஸௌபரி முனிவரைக்கண்டு, வெகு நேரம் அவருடன் உரையாடி யிருந்தான். சில தினங்கள் அங்குத் தங்கி யிருந்து, கடைசியில் தன் நாடடைந்தான்.

இவ்வாறு முனிவரும் அவரது பத்தினிகளும் அஷ்ட ஐசுவர்யங்களுடன் வாழ்ந்துவரவே, நாளடைவில் அவர் கள் நூறு புதல்வர்களைப் பெற்றெடுத்தனர்.

எண்ணிறந்த குஞ்சுகளுடன் களித்திருந்த மீனின் பெருவாழ்வைக் கண்டு, துறவறத்தைக் கைவிட்டு இல்லறத்தை மேற்கொண்டு, நூறு குமாரர்களைப் பெற்றெடுத்த முனிவரின் மனமோ ஆனந்தக் கடலில் ஆழ்ந்திருந்தது. தம்மக்களின் மழலைச் சொற்களைக் கேளாதவர்களன்றோ குழலின் இசையும் வீணையின் நாதமும் இனியனவென்று கூறுவர். அம்மதலைகளின்

மழலை மொழிகளால் முனிவர் மனம் பூரித்து முடிவில் பின்வருமாறு சிந்திக்கலானர் :—

“நாம் எண்ணியபடி நூறு குமாரர்களை அடைந்தோம். அவர்கள் அனைவரும் அறிவும் ஆண்மையும் பொருந்தி நன்மக்களா யிருக்கவேண்டும். அவ்வாறில்லாது, துன்மார்க்கம் உள்ளவர்களாக இருத்தல்கூடாது. அப்படியாயின் உலகம் நம்மைப் பழிக்கும். அவர்கள் கல்வி கேள்விகளில் தேர்ச்சி பெறின், தக்கவிடத்தில் மணம் புரிவிக்கலாம். ஆதலின், அவர்களை அவ்வாறு தேர்ச்சிபெறச் செய்தல் நமது கடமை. நம்மைப்போலவே அவர்களும் நல்வாழ்வுடனிருந்து புத்திர சம்பத்தைப் பெற்றிருக்க நாம் கண்டு களிக்கவேண்டும்.”

இவ்வாறு அவர் யோசித்த பின்னர், ‘ஈசனுளன். விரையொன்று போட்டால் சுரையொன்று முளைக்குமா ?” என்று தேறியிருந்தார். பின்பு, நாளடைவில் மைந்தர் அனைவரும் யௌவனபருவமடைய அவர்களுக்கு ஏற்றபடி தக்கவிடங்களில் விவாஹம் நடத்தி, அவர்களும் மனைவிமக்களுடன் வாழ்வதைப் பார்த்து ஆனந்திக்கவேண்டும் என்றவிருப்பம் முனிவருக்குண்டாயது. ஆதலின், அதற்கு வேண்டிய முயற்சிகளில் கண்ணுங் கருத்துமாயிருந்தார். பின்பு, அக்குமரர் நூற்றுவருக்கும் வெகு விமரிசையுடன் விவாகம் நடந்தேறியது. நாளடைவில் அவர்களும் தங்கள் மனைவிகளுடன் கூடிக்களித்திருந்து, பலமக்களை யடைந்தனர்.

பேரப்பிள்ளைகள் பிறந்து ஊர்ந்து தவழ்ந்து தத்தி நடந்து வளர்ந்துவருவதைக் கண்ட முனிவர் பேரானந்தங் கொண்டார். இனி, அப்பேரன்மார்கள் அனைவர்க்

கும் மணம்புரிவித்து, கண்ணாரக்கண்டு களிக்கவேண்டுமென்ற எண்ணம் அவருக்கு உதித்தது. ஆகவே, அது விஷயமாய் மிகவும் முயன்று கொண்டிருக்கையில், முனிவருக்கோ ஆழ்ந்த யோசனை கிளம்பத் தலைப்பட்டது.

அஃதென்னவெனில் :—

“ துறவறத்தைக் கைவிட்டு, இல்லறத்தை மேற்கொண்டு, நல்வாழ்வு பெற்று, புத்திரர்களை அடைந்தோம். பின்பு அவர்களுக்கு மணமுடிக்க விரும்பி அவ்வாறே செய்வித்தோம். அவர்களும் களத்திரங்களுடன் கூடியிருந்து குழந்தைகளைப் பெற்றெடுத்தனர். அக் குழந்தைகளின் தளர்நடையைக்கண்டு மகிழ்ச்சியுற்றோம். இப்பொழுதோ, அவர்களும் மனைவிகளையடைந்து இன்பமுடன் வாழ்வதைப் பார்க்க ஆசைப்படுகின்றோம். இவ்விதமே, நம் மனோரதங்கள் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே யிருக்கின்றன. இவைகளையெல்லாம் ஆராய்ந்து பார்த்தால், நம்மிடம் குடிகொண்டிருக்கும் ஆசை நிமிஷத்திற்கு நிமிஷம் அதிகரித்துக் கொண்டேவருவதாகத் தெரிகின்றது. ஆசைக்கோ அளவில்லை! ஆசை யென்னும் பெருங்காற்றில் பஞ்சுபோல் நமது மனம் ஊசலாடுகின்றது. அதனால், கற்றதும்கேட்டதும் பயனற்றுப் போகின்றன. இவ்வாறாயின், நாம் நற்கதி பெறுவதெப்படி? ஒரு பெண்ணைக் கொள்வதே துக்கத்துக்குக் காரணமாயிருக்க, ஐம்பது மனைவிகளையடைந்து, அபார ஸம்ஸாரத்தை உண்டுபண்ணிக்கொண்ட முழுமூடர் நம்மைப்போல் உலகத்தில் எவரேனும் உளரோ? இல்லை. இல்லை. இனி என்செய்வது?

ஒன்றுந்தோன்றவில்லையே! ஆசையொருபக்கம் இழுக்க, பாசம் ஒரு பக்கம் வலிக்க, கவலையொருபக்கம் அலைக்க, நானாவிதங்களிலும் துன்பத்திற்கு ஆளானோம். மச்சத்தின் வைபவத்தைக் கண்டு, மதிமயங்கி, மோகங்கொண்டு, நிஷ்டை குலைந்து, ஸம்ஸாரம் என்னும் ஸாகரத்தில் உழன்று, தத்தளிக்கவும் விதிநேர்ந்துவிட்டது. இவைகளுக்கெல்லாம் மச்சமன்றோ காரணம்? கல்விக்கு இருவர், துறவுக்கு ஒருவர் என்றவண்ணம் நடவாது போயினோம். இதைவிடப் புத்தியீனம் வேறொன்றுமில்லை. குடும்பக் கவலையில் மூழ்கிக் கிடப்பின், மோட்சமென்னும் அழியாப்பதவி யடைவது எங்ஙனம்? குடும்ப பந்தத்தில் உழன்று கொண்டிருப்பின், மோட்சம் கிட்டாது. ஆதலின், அத்தொல்லையைத் தொலைத்து, மனித ஸஞ்சாரமற்ற கானகமடைந்து, கந்தமூலங்களையும் அருந்தாமல், காற்றை யடக்கி அழியாப்பேறாகிய மோட்சத்தை யடைவதே மேலானது.''

இவ்வாறு முனிவர் தீர்மானித்துக்கொண்டு தமது குடும்பத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் செய்வித்த உடனே கானகஞ் சேர்ந்து கடுந்தவமியற்றி, வீடுபேற்றை யடைந்தார்.

ஸைப்பியை சரித்திரம்

கற்பின் உறுதி

புண்ணிய நதிகளிற் சிறந்து விளங்கும் கங்காநதி நம் இந்திய நாட்டின் வடபாகத்திலுள்ளதென்பதை அனைவரும் அறிவர். அம்மாநதி பாயும் நாடு முற்காலத்தில் மகதநாடென்று வழங்கிவந்தது. பூர்வகாலத்தில் சததனு என்னுமரசன் அந்நாட்டை ஆண்டுவந்தான். அவன் மிகுந்த கீர்த்திபெற்றவன். சிறந்த நீதிமான். மன்னுயிரைத் தன்னுயிரெனக் கருதுபவன். ஆகலின், அக்காலத்திலிருந்த அரசர்கள் யாவரினும் அவனே சிறந்து விளங்கினான். அவன் மனைவியின் பெயர் ஸைப்பியை. அழகில் இரதிதேவியும் அவளுக்கு ஈடாகாள். கற்பில் அருந்ததிக்கு நிகராவாள். குணத்தில் நாளாயணியை ஒத்தவள். சுருங்கச்சொல்லின், தன் கணவனையே தெய்வமெனக்கொண்டு, அனவரதமும் மனமுவப்பப் பணிவிடை புரிதலையே தன் கடமையாகக்கொண்டவள்.

ஒத்த அன்பும் அழகும் குணமும் பொருந்திய தம்பதிகள் வாய்ப்பது அருமையினுமருமை; அவைகளிற் சிறந்த சததனுவும் ஸைப்பியையும் பூவும் மணமும்போல் பெருமையுடன் வாழ்ந்துவந்தனர். மேலும், எல்லாம் வல்ல இறைவனிடத்து அவர்கள் மெய்யன்பு பூண்டு தானதர்மம், அனுஷ்டானம் முதலியவைகளை

எள்ளளவும் குறைவின்றி நடத்தி வந்தார்கள். இவ்வாறு அரசனும் அரசியும் வாழ்ந்துவருகையில், கார்த்திகையும் ஏகாதசியும் கூடிய ஒருதினத்தில் கங்காநதிக்கு நீராடச் சென்றனர். அந்நதியில் நீராடித் திரும்புகையில், அவ்வழியே ஒரு பாஷண்டி வந்தான். வேதமார்க்கத்தில் தவறியவனுக்குப் பாஷண்டி என்று பெயர்.

வேத விதிப்படி நடப்போர் பாஷண்டியுடன் உரையாடுவது தவறென்று பெரியோர் கூறுகின்றனர். மேலும், அவனைக்கண்ணுரக்காண்பதும் பாவமென்பது நம் முன்னோர்களின் கொள்கை. நிற்க, சததனுவுக்கு வில்வித்தை கற்றுக்கொடுத்த ஆசிரியனுக்கு அப்பாஷண்டி அத்தியந்த நண்பன். ஆகவே பாஷண்டியுடன் பேசக்கூடாதென்ற விதியை வேந்தன் அறிந்திருந்தும், தன் குருவின் நண்பனைக்கண்டு பேசாதுபோதல் முறைமையன்றென மதித்து, அப்பாஷண்டியுடன் வார்த்தை யாடாது போக ஒருப்பட்டானில்லை. ஆதலின் அவ்விறைவன் பாஷண்டியுடன் சிறிதுநேரம் உரையாடியிருந்தான். அவன் மனைவியோ பாஷண்டியைக் கண்ணெதிரே காண்பதும் வேதவிலக்கென்று உணர்ந்தவளாதலின், அவனைக்கண்ட தோஷம் நீங்குமாறு சூர்ய தரிசனம் செய்தனள்.

பின்னர், அம்மன்னவனும் மாதரசியும் மாளிகைசேர்ந்து இன்பமாய் வாழ்ந்துவந்தார்கள். காலக்கிரமத்தில் அக்காவலன் காலகதி யடைந்தான்.

நிற்க, "காதலர் இறப்பின் கனையெரி பொத்தி, ஊது உலைக்குருகின் உயிர்த்து அகத்து அடங்காது, இன்னுயிர் ஈவர்; ஈயாராயின், நன்னீர்ப் பொய்கையின் நளி

யெரி புகுவர், நளியெரி புகாராயின், அன்பரோடு உடன் உறை வாழ்க்கைக்கு நோற்று உடம்படுவர், பத்தினிப் பெண்டிர்" என்பது முதுமொழி.

(அதாவது கணவன் இறந்துபோகவே, உடம்பில் மிருந்த சூடுண்டாவதனால், கொல்லனது உலைக்களத்தி லுள்ள துருத்தியைப்போல் பெருமூச்செறிந்து, அதனைத்தாங்க முடியாது உயிர்விடுவர்; அவ்வாறு உயிர் துறவாராயின், நல்ல நீரையுடைய தடாகத்தைப்போல அக்கினியை நினைத்துக் கணவனோடு உயிர் விடுவர்; அவ்வாறு தீயில் ஆவியைப் போக்காது போயின், மறுபிறப்பில் அக்கணவனையே அடையவேண்டுமென்று தவம்புரிந்து உடலைப் போக்கிக்கொள்வர். யாரெனில், கற்பரசிகள்!)

ஆதலின் கணவன் இறந்துபோன பெருந்துக்கத்தைச் சகிக்கமாட்டாதவளாகிய ஸைப்பியை தன் கணவனுடன் ஆவிதுறந்தனள்.

தினந்தோறும் காலையில் கதிரவன் உதித்து, மாலையில் மறைந்து விடுவதுபோல, உலகத்திலுள்ள எல்லா ஜீவராசிகளும் பிறந்தும் இறந்தும் வருவதை யாவரும் கண்ணாரக்கண்டு வருகின்றனர். மேலும், முற்பிறப்பில் ஒருவன் செய்த பாவபுண்ணியங்களுக்கு ஏற்றவாறு மறுபடியும் அவன் பிறக்கின்றான் என்பது நம்முன்னோர்களின் சித்தாந்தம். ஏகாதசியாகிய உபவாஸ (பட்டினி) தினத்தன்று ஒரு பாஷண்டியுடன் சததனு பேசியது தர்மவிரோதமானதால் அவன் அத்தீவினைக்கு ஏற்றபடி மறுபிறப்பில் நாயாகத்தோன்றினான். தீவினை யென்பதைக் கனவிலும் கண்டறியாத ஸைப்பியை

மறுஜன்மத்தில் காசிராஜனது புத்திரியாய்ப் பிறந்தனள்.

வயது ஆக ஆக, அப்பெண் புத்தியிலும் ஒழுக்கத்திலும் முதிர்ச்சி அடைவதைக் கண்ட காசி மன்னன் தக்க ஆசிரியரை நியமித்து, கல்விகேள்விகளில் அவளைத் தேர்ச்சிபெறச் செய்தான். நாளடைவில் அப்பெண் மங்கைப்பருவம் அடைந்தனள். அதனைக் கண்ட அரசன் அவளுக்கு மணவினை முடிக்க முயற்சி செய்து வந்தான். புத்திரியோ அதற்கு உடன்படவில்லை. தன் மகளிடத்து மிக்க அன்புகொண்ட அரசன் அவளது நோக்கத்திற்கு மாறாக நடப்பதெப்படி? கல்வி கேள்விகளிற் சிறந்து விளங்கும் தன் மகள் ஏதோ நோக்கங் கொண்டு தற்காலம் மணமுடித்துக்கொள்ள மனமொப்பவில்லையென்றே மன்னவன் மதித்திருந்தான்.

ஈதிங்ஙனமிருக்க, முன்ஜன்மத்திலிருந்த உத்தம கணவனையே மறுபிறப்பிலும் அடையவேண்டுமென்று பத்தினிப் பெண்கள் விரும்புவரன்றோ? ஆதலின், அந்தச் சததனுவையே இப்பிறவியிலும் பர்த்தாவாகப் பெறவேண்டுமென்பதே அவள் கொண்டிருந்த விருப்பம்.

தனக்குள்ள ஞானத்தின் பலத்தால், தன் கணவன் நாய்ப் பிறவி எடுத்துள்ளான் என்பதை அவள் அறிந்து கொண்டாள். ஆதலின், அப்பெண்மணியின் கற்புநிலைமை மிகவும் ஆச்சரியப்படத் தக்கதன்றோ? முற்காலத்திருந்த ஸீதாதேவி, ஸாவித்திரி, முதலியவர்களின் கற்புக்கு அப்பெண்ணின் கற்பு ஒரு சிறிதும் குறையாதென்று சொல்லத் தடையில்லை. தன்

நாதன் நாயாய்ப் பிறந்து வளர்ந்துவரும் விதிசை யென்னும் நகரத்திற்கு அப்பெண் உடனே பயணமாகி, நாயைத் தன்பர்த்தாவென்றே துதித்து, நாள்தோறும் வேளை தப்பாது உணவருத்தி அதனைக் காப்பாற்றி வந்தனள்.

ஒருகவளம் அன்னமிட்டவரைக் கண்டு வெகு நாளாயினும மறுபடி அவரைக் கண்டவுடன் நாய் தன்வாலைக் குழைத்துக்கொண்டு அவரிடம் அன்பு பாராட்டுமல்லவா? மேலும் நன்றியறிதலிற் சிறந்து விளங்குவது நாய்தான். ஆகவே, வேளை தப்பாமல் தனக்கு அன்னம் அளித்துக் காத்துவரும் அப்பெண்ணினிடத்து அந் நாய் மிக்க அன்பு பாராட்டி வந்ததல்லாமல் பணிவான வேலைகளையெல்லாம் குறிப்பறிந்து அவளுக்குச்செய்து வரத்தலைப்பட்டது.

அதனைக்கண்டு மனம்பொறுத அக்கன்னிகை, நாயை நோக்கிக் கும்பிட்டு "ஐயா! முற் பிறப்பில் நீர் என் கணவரன்றோ? ஒருநாள்நாமிருவரும் விரத தினத்தன்று கங்கைசென்று நீராடிவருகையில், பாஷண்டியுடன் நீர் வார்த்தையாடியதால், இப்பிறவி கொண்டீர், அதனை யறிந்த நான் உம்மை நாடியடைந்து, போஷித்து வருகின்றேன். இந்த உண்மையை உணர்ந்து கொள்ளாது, நீர் என்னைப்பணிவுடன் வணங்கலாமா? வணங்கினும், நான் அதனை ஏற்றுக்கொள்ளுதல் எவ்வாறு பொருந்தும்? ஐயோ! நான் என்செய்வேன்! என் தலைவிதி இவ்வாறாயினதே!" என்று பலவாறு பிரலாபித்து, அந் நாயைக் கட்டிக்கொண்டழுது கெஞ்சம் புண்ணுனாள்.

இவ்வசனங்களைச் செவியுற்றதும் நாய் அடங்காத் துயரங்கொண்டு, சிறிதுநேரம் சிந்தித்துப்பார்த்து, அப் பெண்ணின் வாய்மொழி உண்மையெனத் தெரிந்து கொண்டது. உடனே அதற்குண்டான துயரம் சொல்லி முடியாது. சீ என்ற வார்த்தையைக்கூடத் தாங்கமுடியாமல் நாய்கள் ரோசங்கொண்டு வருந்தித் திரும்பிப் போகின்றன வென்றால், அந்நாய் அடங்காத்துக்கத்தில் ஆழ்ந்ததென்பது வியப்பல்லவே! பின், அது சரேலென்று நகர்ப்புறம் சேர்ந்து, அங்கிருந்த ஒரு மலையின் மீதேறிக் கீழே விழுந்து, தன் ஆவியைப் போக்கிக் கொண்டது.

எனினும், பாஷண்டியுடன் விரத தினத்தன்று பேசியதனாலுண்டான பாபம் அந்நாயைத் தொடராது விடுமோ? இப்பூவுலகத்திலுள்ள யாவரும் மேன்மையுடன் வாழ விரும்புவரேயன்றித் தாழ்மையுடன் வாழ மனமிசையார். ஆயினும், ஒரு பசுமந்தையில் ஒரு கன்றைவிட்டால், அது தன் தாயை நாடிக் கொள்வதுபோலவே ஒவ்வொருவர் செய்தவினையும் பலபிறவிகளிலும், அவரவரையே பின்பற்றிக் கொள்ளுமென்பது நிச்சயம்.

ஆதலினால், அந்நாய் மறுபடியும் நரியாய்த் தோன்றியது. பின்னர், தன் கணவன் நரியாய்ப் பிறந்திருப்பதை ஞானதிருஷ்டியினால் அறிந்துகொண்ட அப் பெண், சிறிதும் தாமதியாது கோலாகலமென்னும் பர்வதத்தை யடைந்து அங்கே நரியைக் கண்டனள்.

கண்டதும் "ஐயகோ! பந்தமுள்ள மானிடரை விதி விடுமோ, ஆலவாய்ப் பதியுளானே" என்ற வாக்கின்

படி விதியோ நம்மை விட்டிலது! தேவர்களும் விதியை விலக்க முடியாதாயின், கேவலம் மாந்தரால் யாது செய்யமுடியும்? விதியை யெண்ணி யெண்ணி நெஞ்சம் புண்ணுவதே மாந்தர் தொழில்" என்று அப்பதிவிரதை பலவாறு நினைத்து வருந்தி, நரியைப்பார்த்து "ஐயனே! நீர் நாயாயிருந்த காலத்து, அதற்கு முற்பிறப்பில் பாஷண்டியுடன் பேசிய பாவத்தால் நீர் நாய்ப்பிறவி அடைந்தீரென்று நான் அறிவுறுத்தினேன், அதனை ஆற்றமுடியாது நீர் உடனே உயிரை மாய்த்துக் கொண்டீர். ஆயினுமென்ன? அப்பழவினை உம்மை விட்டதோ? இல்லை. நிழல் ஒருவனை விடாது பின்பற்றிவருவதுபோலவே, நீர் செய்த வினையும் விடேன் விடேன் என்று உம்மையணுகி யுள்ளது என்செய்வேன்! தெய்வமே! ஏழைமுகம் பார்த்திரங்கிக் கருணைகூரலாகாதோ" என்று பிரலாபித்தாள்.

அச்சமயம் நரிக்குத் தோன்றிய துக்கமோ செப்புந்தரமன்று. அறிந்தறிந்து பாவத்தைச்செய்யின், அழுதழுது அனுபவித்தே தீரவேண்டும் அல்லவா? நரியோ பெரிதும் வருந்தி, அந்நிமிஷம் முதல் இரையெடாது கிடந்து ஆவியைத் தொலைத்தது.

தொலைத்துமென்ன? 'யாரை விட்டது காலம்?' என்று பெண்மணிகள் சொல்வது போலவே அந்நரி அக்காட்டிலேயே ஒரு செந்நாயாய் ஜனித்தது. அக்காலத்தும் தன்னுடைய கணவன் செந்நாயாய்த் தோன்றியிருப்பதை அந்நங்கை தெரிந்துகொண்டாள். அவ்வளவுதான் தாமதம்.

உடனே செந்நாய் இருக்குமிடம் சென்று அதனைக் கட்டிக்கொண்டு ஓயாது அழுதாள்.

போக போக்கியங்களுடன் உலகில் சுகித்திருக்க விரும்பாதார் மருந்துக்கும் கிடைப்பது அரிது! ஆயினும், விளாம்பழத்தை உருண்டையாகச் செய்தவர் யார்? களாப்பழத்திற்குக் கருமை யளித்தது எவர்? அங்ஙனமே அவரவர் செய்தவினைக்கு ஏற்றபடி வாழ்வு ஏற்படும்.

அம்மங்கை செந்நாயை நோக்கி "என் அரசே! இதுவோ என் தலைவிதி. என் தலைவனாயிருந்த நீர் நாயாகி, நரியாகி, மீண்டும் செந்நாயாக, நானும் உம்மை நாடியடைந்து, உமது பூர்வ ஜன்மத்தை எடுத்துச் சொல்ல நேரிட்டு விட்டது" என்று நினைப்பூட்டுவதற்குள், செந்நாய் தன் ஆயுளை ஒழித்துக் கொண்டது.

அச்செந்நாய் மறுபடியும் கழுகாயும் அதன் பின்னர்க் காகமாயும் உருவெடுக்க, அப்பொழுதும் அப்பத்தினி முற்பிறவியின் விருத்தாந்தங்களை அறிவித்தாள். அக்கணமே அது மரித்து, முடிவில் மயிலுருவம் பெற்றது.

உடனே, அழகிற்சிறந்துவிளங்கிய அம்மயிலைத் தன் மாடத்திற்கு எடுத்துச்சென்றாள் அப்பெண்மணி. தன் கணவனுடன் கூடிக் குலாவியிருப்பதைவிட, தேவருலகஞ் சென்று வாழ்வதையும் உத்தமிகள் பெரிதாக நினைக்க மாட்டார்களன்றோ? ஆதலின், அவ்வாறே யிருக்க அப்பெண் இச்சிப்பது ஸகஜமே.

எனினும், முன்னை விதியோ குறுக்கிட்டுக் கொண்டி

ருக்கிறது. என்றாலும், அவள் அம்மயிலேயே கணவனைக் கொண்டுபோற்றி வந்தாள். இஃது இவ்வாறாக, அப்பெண்ணின் தந்தையான காசி மன்னன் அசுவமேத யாகம் புரிந்தான். அந்த யாகமுடிவில் அவப்ரததீர்த்தத்தில் நீராட்டி, நாய்ப் பிறவிமுதல் மயில்பிறவி ஈறாக உள்ள எல்லாப் பிறவிகளையும் அதற்கு உணர்த்தினாள்.

அதனைக்கேட்டதும், மயில் துக்கசாகரத்தில் ஆழ்ந்து பிராணனைவிட்டு, அக்காலத்தே மேன்மையுடன் வாழ்ந்துவந்த ஜநக மகாராஜனது மகனாய்த் தோன்றியது, அக்குமரன் பெயர் சுந்தரன்.

இவ்வாறு தன் கணவன் ஜநகனது புதல்வனாய்ப் பிறந்து வளர்ந்து வருவதை அப்பெண் அறியலானாள். ஆதலின், தன் தந்தையைக் கிட்டி "எந்தாய்! முன்னம் எனக்கு மணம் முடிப்பதாகத் தாங்கள் நினைத்தீர்கள், அக்காலத்தே, நான் அதனை யேற்றுக் கொள்ளவில்லை. ஆயினும், அதுபொருட்டு என்னை மன்னிக்க வேண்டுகின்றேன். இக்காலையில் தங்களை வேண்டிக் கொள்வது ஒன்றுளது. அஃதென்ன வெனில், என் சுயம்வரத்தின் பொருட்டு எல்லா மன்னர்களுக்கும் நிருபம் வரைய வேண்டியதே" என்று கேட்டுக் கொண்டாள்.

மணம் வேண்டாமென்று முன்பு தன்குமரி சொன்னதை அன்புடன் ஏற்றுக்கொண்ட அரசன், இப்பொழுது தன் பெண் மணமுடித்துக் கொள்ள விரும்புவதைக் கேட்டதும் அடங்காமகிழ்ச்சி கொண்டான்

ஆதலின் அரசர்கள் அனைவருக்கும் சுயம்வர ஓலை அனுப்பினான். உலகத்திலுள்ள அரசிளங்குமரர் பலரும் சுயம்வரத்தை நாடிவந்து குறிப்பிட்ட முகூர்த்தத்தில் மணமண்டப மடைந்தனர். விதேக நாட்டை வெகு நீதியுடன் பரிபாலித்து வரும் ஜநகமகாராஜனது குமாரனும் வந்திருந்தான். அச்சுயம்வரத்தில் அப்பெண் அவனையே கணவனாக வரித்தாள். பின்பு, யாவரும் கண்டதிசயிக்கும்படி சுந்தரனுக்கும் அக்கன்னிகைக்கும் விவாஹம் நடந்தேறியது.

தன் காதலனுக்கு ஏதேனும் துன்பம் நேர்ந்த காலத்து, அவனுடனிருந்து, தானும் துயரெய்தி வாடி, தனக்குண்டாகும் துயரத்தை ஒரு பொருளாக மதியாதிருப்பதே மனைவியின் கடமையாகும். அவ்வாறு கற்புறுதி கொண்ட பெண்மகளே தெய்வமெனப்படுவர், அவர்களினும் கைகண்ட தெய்வம் வேறில்லை. ஏனெனில் அத்தகைய கற்பு வாய்ந்த பெண்மணிகள் வசித்துவரும் நாட்டிலே காலங்களில் மழைபெய்தல் தவறாது. பல்வகை வளங்களும் சுரக்கும், உலகத்தைக் காத்துவரும் கொற்றவனது செங்கோலும் கோணாது. இவ்வசனங்கள் வேதப் பிரமாணங்களாகும். நிற்க,

அக்குமாரனும் கன்னிகையும் நெடுங்காலம் இன்பமுடன் வாழ்ந்து வந்தனர். அவ்வாறிருக்கையில் ஒருநாள் சுந்தரனுடைய தந்தை விண்ணுலகேகினான். ஆதலின், சுந்தரன் தன் தந்தையின் நாட்டுக்கு அதிபதியாகி, மனுமுறை தவறாது, செங்கோல் செலுத்தி வந்து அநேக நாடுகளை வென்று, தன்வசப்படுத்திக் கொண்டு, பலவித தானதர்மங்களையும் யாகங்களையும்

தன் அரசியுடன் நடத்தி வந்தான். காலக்கிரமத்தில் அம்மன்னவன் மண்ணுலகைத் துறந்து விண்ணுலகடைந்தான். கற்புடைய மங்கையர்க்கெல்லாம் திலகம் போன்ற ஸைப்பியையும் தன் பர்த்தாவுடன் தேவருலகு சென்றனள். பின்பு, அத்தம்பதிகள் இந்திரலோகத்திற்கும் மேம்பட்ட பரமபத மடைந்தனர்.

ஒரு ஜன்மத்தில், தன் கணவனாயிருந்தவன் மறு பிறவிகளில் நாயாகவும் நரியாகவும் உற்பவித்த காலையிலும், அவனையே கணவனெனக் கொண்டு வழிபட்டு, அவனை மனிதப்பிறவி யடையும்படி நல்லறிவு புகட்டி, அங்ஙனமே அடையும்படி செய்து அவனையே புருஷனாகக் கொண்ட அப்பெண்மணியின் கலங்காக் கற்பு நிலைமையைக் கேட்டபின், களிப்பு எய்தாதார் எவரேனும் இருப்பாரோ? இரார்! இரார்!! ஆதலின் இக்கதையைப் படிக்க நேரும் பெண்மக்கள் அனைவரும் கற்பையே பெருந்தனமாகக் கொள்வார்களாக.

கௌசிகனும் நளாயினியும்

கற்பின் பெருமை

முன்னொரு காலத்திலே நம் பாரத கண்டத்தில் கோதாவரி தீரத்தில் பிரதிஷ்டானம் என்னும் நகர் ஒன்று இருந்தது. அந்நகரில் கௌசிகன் என்னும் நாமம் பூண்ட வேதியர் ஒருவர் இருந்தார். அவரது மனையாளுக்கு நளாயினி யென்றும் இந்திரசேனை என்றும் பெயருண்டு. அம்மங்கை தன் கணவனையே தெய்வமென மதித்தவள். அனவரதமும் தன் புருஷன் மனமகிழும் வண்ணம் பணிவிடை புரிதலே தவமெனக் கொண்டவள். பதியின் சொல்லைத் தட்டாது நடப்பதில் சிறந்தவள்.

இக்காலத்து சில நாரியர்களைப்போல் கோவிலென்றும் குளமென்றும் தேவரென்றும் திருநாளென்றும் மனம்போன போக்கெல்லாம் போகாது ஒழுகுபவள். 'கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி' என்னும் முதுமொழிக்கும் 'கல்லென்றாலும் கணவன், புல்லென்றாலும் புருஷன்' என்னும் பழமொழிக்கும் இலக்கணமாக விளங்கியவள்.

ஆதலின், நாடும் ஊரும் அந்நங்கையை மிகப் புகழ்ந்து ஏத்தின என்று சொல்லத் தடையுமுண்டோ? அப்பெண்மணியின் கற்பின் உறுதியையும்

அன்பின் முதிர்ச்சியையும் கண்டு தேவரும் களித்த னர். இது நிற்க,

தம் மனைவியின் கலங்கா நிலைமையை இன்னும் பரீட்சித்தறிய விரும்பிய அவ்வந்தணர் எக்காலமும் தமதுடம்பில் மிருந்த குஷ்டநோயும், அது காரண மாகச் சிதைந்த வடிவமும், மிக்க கிழத்தனமும், எக்கணமும் பெருங்கோபமும், சரீரத்தில் துர்க்கந் தமும், உடையவராய்த் தம்மைக் காட்டி வந்தார். முற்பிறவிகளிற் செய்த தீவினையின் பயனால், அவர் குஷ்டநோய் கொள்ள நேர்ந்ததெனவும் சிலர் சொல்வர். எங்ஙனமாயினும், அவர் அந்நோய் கொண்டிருந்தா ரென்பது மெய்யாகும்.

அவ்வாறு தன் கணவன் கொடிய நோயால் மிக வருந்தும்போது, கொஞ்சமேனும் அருவருப்புக் கொள் ளாது, கால் கழுவுதல், அடிவருடல், உடம்பினைத் தைவரல், எண்ணெய் பூசுதல், ஆடையுடுப்பித்தல், உண்டியுதவல், உதிரம் சீழ் முதலியவற்றின் பெருக்கி னைப் பல்காலும் கழுவுதல், ஆகிய பணிவிடைகள் அனைத்தையும் எள்ளளவேனும் குறைவின்றி அம் மங்கை அன்புடன் புரிந்து வந்தனள்.

அப்பெண்கள் நாயகம் தன் நாயகனிடத்துக்கொண்ட அன்பு இம்மட்டோ? இல்லை! இல்லை!! தன் புருஷன் உண்டபின் தான் புசித்து, அவர் மஞ்சமடைந்ததும் பலவித சைத்தியோபசாரங்கள் பண்ணி, அவர் துயி ன்ற பின்னரே தான் துயின்று, அவர் விழித்தெழு முன்பே நித்திரை நீங்கி யெழுந்து, யாது பணிப்பரோ எனவும் எதிர்பார்த்திருப்பாள்.

அன்றியும், "கொண்ட கணவன் குரூபியாயி
னும், பண்டு தான்செய்த பலனெனவே கண்டுகொண்டு,
குற்றமென எண்ணி மனங்கோணாது அவன் பணியைப்
பற்றி மிகச் செய்வாள் பரிந்து" என்னும் தனிப்பாட
லுக்கு நிகராக அந்நங்கையைச் சொல்லலாம்.

இங்ஙனம் கற்புடைய மங்கையர்க் கெல்லாம் திலகம்
போல் விளங்கி வருகையில் ஒருநாள், அவ்வேதியர்
பிரான் தம்மனையாளை விளித்து "அடி, பெண்ணே!
ராஜவீதியில் வசித்துவரும் விலைமாதின் வீட்டிற்குச்
செல்ல என்மனம் ஆசையுறுகின்றது. ஆதலின் என்னை
அங்குத் தூக்கிச்செல்லவேண்டும். இல்லையேல், எனது
ஆவி பறந்துபோம். பின்னர் இவ்வுடல் ஒன்றனையே
நீ நோக்கவேண்டும்" என்றிசைத்தனர்.

உடனே நளாயினி தன் நாயகனை ஆடையணி
களால் அலங்கரித்து, அம்மாதினுக்குக் கொடுக்க
வேண்டிய பணத்தினையும் கைக்கொண்டு, தோளின்மீது
அவரை எடுத்துக்கொண்டு மெல்ல நடந்து, மாலைப்
பொழுதில் அவ்வீடு சேர்ந்தனள். பின்னர் இரவின்
கடையாமத்தில் முன்போலவே தன் கணவனைத் தூக்
கிக்கொண்டு வீடு நோக்கித் திரும்பினள்.

இஃதிங்ஙனமிருக்க, மாண்டவ்யர் என்னும் தவமுனி
வர் ஐம்புலன்களையும் அடக்கி, சித்தத்தைச் சிவன்
பால் நிறுத்தி, யோகம் செய்துவந்தார். ஒருநாள் அந்
நகரின் அரண்மனையிற் கள்வர் புகுந்து கொள்ளையடி
பதைக் கண்ட காவலாளிகள் அவர்களைத் துரத்தவே
கள்வர் ஓட்டம்பிடித்துச் செல்லும்வழியில், அம்முனிவ
ரின் பர்ணசாலையில் நுழைந்து, அரண்மனையில் திருடிய

தனத்தை அங்கு எறிந்துவிட்டு அக்காவலர்க்குப் போக்குக்காட்டி, வேறு வழியாய்ச் சென்று மறைந்துவிட்டனர்.

அம்முனிவர் மெய்ம்மறந்து தியானத்திலிருந்தமையால் இச்சம்பவத்தை அறியவில்லை. காவலாளிகளோ துறவியைக்கிட்டி, அவருடைய தவச்சாலையில் நகை நாணயங்கள் கிடப்பதைக் கண்டு, "இம்முனியே கள்வர் தலைவன். பார்த்தால் சிவவேடம், செய்யும் தொழிலோ கொள்ளையாடுவது. ஆதலின் இவன்மாயத் துறவியே" என்று நினைத்து, அவரை அரசசபைக்கு அழைத்துச் சென்றனர்.

கையுங் களவுமாக முனிவர் பிடிபட்டதைக் கண்ட மன்னவன் முன்பின் யோசியாமல் அவரைக் கழுவிலேற்றிவிட்டான்.

நளாயினி செல்லும் வழியில் அக்கழுமரம் இருந்தது. அச்சமயம் மிக்க இருள் மூடியிருந்ததனால், கழுமரமாவது, அதன்மீது மாண்டவ்யர் இருப்பதாவது, அக்காரிகைக்குத் தெரியவில்லை. ஆதலினால் கௌசிகனுடைய உடல் மாண்டவ்யரின் பாதங்களில் தாக்கியது. அதனால் மிகவும் வேதனையடைந்த மாண்டவ்யர் "ஆபத்திலகப்பட்டு வருந்தியிருக்கும் என்னை இடரி நோகச் செய்தோர் கதிரவன் உதயமாகுமுன் காலஞ்செல்லக் கடவர்" என்று சாபமிட்டனர்.

அப்பொழுது நளாயினி அச்சாபமொழியைக் கேட்டு "அந்தோ! அந்தகாரம் மூடியிருந்ததனால், முனிவர் இருந்ததை அறியாது போயினேன். அவருக்குத் துன்பம் உண்டாகும்படியான பிழையை யான் மன

மறிந்து செய்தேனில்லை. அவரோ மிகவும் வேதனை அடைகின்றார். ஆதலின் யாது செய்வேன்?" என்று மனமிரங்கி வருந்தி, "அறியாமற் செய்த பிழையை அவர் உணாராது, தினகரன் உதிக்குமுன் என் கணவன் நாசமடையும்படி சபித்து விட்டனரே! தெய்வமே! இதுவும் என் தலைவிதியோ? அங்ஙனமாயின், கதிரவன் உதயமாயினன்றோ நம்புருஷன் மரணமடைய நேரும்? ஆதலின் பகலவன் தோன்றாதிருக்கக் கடவது" என்று தானும் சபித்துவிட்டு வீடடைந்தனள்.

இது இவ்வாறாக, வேதம் பொய்த்தாலும், நாதன் அருள் பொய்த்தாலும், கற்புடைய மங்கையர் கூறிய மொழி பழுதுறுமோ? அதிலும், காதலன் இன்புறுவதையே தன் இன்பமாகக் கொண்டு அனவரதமும் அவன் மனமகிழும் வண்ணம் பணிவிடைகள் புரிந்து வரும் கற்பரசியாம் நளாயினியின் வார்த்தை பொய்த்துப்போமோ? ஒருக்காலும் இல்லை.

ஆகவே, அப்பெருங் கற்பினள் சொல்லிய உறுதியைத் தாண்டமுடியாத தினகரனும் உதித்தானில்லை. உடனே, உலகமெல்லாம் இருள் சூழ்ந்து என்றும் இரவாகவே யிருந்தது. இவ்வாறே பலநாட்களாயின. அந்தோ! இரவிது, பகலிது, என்னும் வேற்றுமையின் றிப் போய்விட்டது. அக்கதிரவன் எழாது போகவே, பூசுரர் பலரும் ஜப தபங்கள்செய்ய முடியவில்லை. உலகத்திலுள்ள ஜீவராசிகள் மிகவும் வருந்தின. ஆதலினால் தேவர் அனைவரும் ஒருங்கே திரண்டு யோசிப்பாராயினர்.

"மழையின்றி மாநிலத்தார்க்கில்லை, மழையும் தவ

மின்றில் வழியில்லை." ஆதலினால், சூரியோதய மாகாத பொழுது, அந்தணர்கள் எவ்வாறுவேள்வி இயற்றுவர்? அவர்கள் வேள்வி புரியாது போயின், மழை பெய்வ தெங்கே? மழை பெய்யாதாயின், ஜீவராசிகள் அனைத் தும் உயிர் வாழ்வதெங்ஙனம்? உலகம் முழுவதும் அந்தகாரம் மூடிக்கிடக்கின்றதே! மேலும், உலகில் தர்மம் எவ்வாறு நடைபெறும்? பைங்கூழ்கள் குளிரால் வாடி உஷ்ண மில்லாமையின் நசித்துப்போகின்றனவே? என்செய்வோம்? அம்மங்கையர்க்கரசியின் சொல்லுக்கு அஞ்சியே பகலவன் மறைந்திருக்கிறான். மும்மூர்த்தி களும் உத்தம பத்தினிகளின் சொல்லைமீறி நடக்க முடியாதென்றால், கதிரவன் என்ன செய்வான்? அவன் உதயமானால், நளாயினியின் மங்கலம் கழிந்துபோம். இப்பேராபத்தினின்றும நீங்குவதெவ்வாறு?

இவ்வண்ணம் இமையோர் சிந்தித்து வருந்துவதை அறிந்த மலரவன் அவர்களை அழைத்து "கற்பரசி யின் சாபத்தினால் கதிரவன் காணப்படான். அதனால் உங்களுக்கும் மானிடர்க்கும் துன்பம் ஒழியாது. ஆயி னும், அத்திரி மகாமுனியின் பத்தினியாகிய அனு ஸூயையபாற் சென்று குறையிரப்பின், ஞாயிறுதோன்ற வழிபிறக்கும். ஆகவே, அம்மங்கையர்க் கரசியை யடைந்து வேண்டிக்கொள்ளுங்கள்" என்று வழி காட் டினார்.

உடனே, தேவர்கள் விரைந்து சென்று, அவ் வம்மையைத் துதித்தனர். இமையோரின் வேண்டு கோளைக் குறிப்பினால் தெரிந்துகொண்ட அனு ஸூயை அக்கணமே அவர்களுடன் கௌசிகன் மனை

விபாற் போயினள். மாமுனியின் மனையாளை அவ்வேதியர் மனைவி அன்புடன் வரவேற்று, உபசரித்து, ஓர் ஆசனத் திருத்த, இருவரும் தங்கள் தங்கள் யோகக்ஷேமங்களை விசாரிக்கத் தலைப்பட்டனர். அவ்விசாரணையில், மாதர் ஆடவர் இவர்களின் ஒழுக்கங்களைப் பற்றி இவ்விருவரும் உரையாடி யிருந்ததைச் சுருக்கமாக இங்கு எடுத்துரைப்போம் :—

ஆடவர்க்கு ஐவகைக் கடன்கள் உள. அவையாவன : தேவர் கடன், பிதிரர் கடன், முனிவர் கடன் முதலியன. அக்கடன்கள் யாவற்றையும் இல்லறத்தால் தீர்த்தல் அவசியம். அக்கடனைத் தீர்ப்பதற்குப் பொருள் வேண்டியதாதலின், வருணாசிரம தர்மத்தில் தவறாது, தனத்தைத் தேடவேண்டும். அவ்வாறு தேடிய நிதியத்தை நல்வழியிற் செலவிடுதல் வேண்டும். மேலும், சத்தியம், தவம், கொடை, அருள், இவற்றோடு பொருந்தி உயிர்வாழ்தலை மறத்தலாகாது. எக்காலமும் நல்வினையையே நாடிப் புரியவேண்டும். இங்ஙனம் அறங்கோணாது ஒழுகிவருவோன் புண்ணிய உலகத்தினையே பெறுவான். ஆடவர் இவ்வண்ணம் அரிது முயன்று தேடிய நல்வினைகளில் பாதிப்பங்கு மனைவிகளைச் சேரும். ஆதலின், மாதர்க்கு வேறு வேள்வியில்லை. நோன்பும் வேறு கிடையாது. கொழுநனை ஓம்பிப் பாதுகாத்தலே மங்கையரின் கடமை. நாயகன் புரியும் எவ்வித நற்கருமங்களிலும் சரிபங்கு மனைவியைச் சேர்வதால், அம்மனைவி தன் கேள்வனையே தெய்வமெனக்கொண்டு பூசித்து வருதலில் ஒருசிறிதும் தவறலாகாது.

இவ்விதம் அவ்விருமங்கையரும் பேசியிருந்த பின்னர், முடிவில், கௌசிகன் மனைவி அனுஸூயையை நோக்கி "அம்மா, நீங்கள் என் சிறுகுடிசைக்கு எழுந்தருளிய காரணம் யாதோ? என்னாலாயினும், என் கணவனாலாயினும், தீரவேண்டிய காரியம் ஏதேனுமிருப்பின், உடனே தெரிவியுங்கள். அவ்வாறே செய்யத் தடையிராது" என்று வணக்கமாய் உரைத்தனள்.

அனுஸூயை: "பெண்கள் நாயகமே! நீயிட்ட சாபத்தினால் பகற்பொழுதே இல்லாது போய் விட்டது. ஆகவே உலகத்தில் நடக்கவேண்டிய தர்மங்கள் யாவும் நின்றுபோயின. அது பொருட்டு இந்திரன் முதல் இமையோர் பலரும் என்பால் குறையிரக்க, நானும் தேவர்களும் உன்னை நாடிவந்தோம். பகற்போதின்மையால் வேள்விமுதலியன நின்றுவிட்டன. அதனால் வானவரும் உண்டியில்லாது இளைத்துப் போகின்றனர். பகலே இல்லாதொழிந்தால், எத்தொழில்தான் நடக்கும்? கதிரவன் இல்லாவிடின், மழை பெய்யுமா? மழையின்றாகில், உலகம் பிழைக்குமா? உலக மனைத்திற்கும் உண்டாயிருக்கும் பேரிடரைப் போக்கவேண்டுமென்றே உன் கருணையை விரும்புகின்றோம். உன்சொல்லால் உதயமாகாது போயினான் கதிரவன். தயவுசெய்து அவன் உதிக்கும்படி உத்தரவளித்தல் வேண்டும்."

நளாயினி: "பெரும்புகழ்க் கற்பினையுடைய செல்வமே! மனமார நான்குற்றஞ் செய்யாதிருந்தும், பெருஞ்சினம்பூத்த மாண்டவ்யர், கதிரவன் உதயமானதும் என் தலைவன் இறந்துவிடும்படி சபித்து விட்டனரே, என் செய்வேன்!"

அனுஸூயை: "கற்பலங்காரமே! யான் விளம்புவதைக்கவனித்துக் கேட்பாயாக. உன் கணவன் சுந்தர வடிவுகொண்டு, பிழைத்திருக்கும்படி செய்வது, என் பொறுப்பு. கற்புடைய மங்கையரின் மகிமையைப் பரவச் செய்வதே என் நோக்கம். ஆதலால், நின்னை இரங்கிக் கேட்கின்றேன். தயைசெய்து, நீயிட்ட சாபத்தை மாற்றிடுவாய் அம்மணி! என் வார்த்தை பழுதுபடாது; உன் வாழ்வில் மிகவும் கருத்துடையவள் யான்."

அனுஸூயை இவ்வாறு சொன்னதும் அவள் வார்த்தையை மதித்த நளாயினி, உடனே கைகளில் நீரையேந்தித் தியானித்து, சூர்யோதயமாகும்படி விரும்பினள். கண்ணிமைப் பொழுதில் கதிரவனும் ஆயிரங்கிரணங்களுடன்கீழ்த்திசையில் தோன்றினன். உடனே தேவர்களும் முனிவர்களும் மற்றுமுள்ளோரும் அக மிக மகிழ்ந்தனர். இது நிற்க,

நளாயினியின் கணவனது ஆவி அக்கணமே உடலை விட்டோடத் தலைப்பட்டது. அவரும் நிலத்திற் சாய்ந்தனர். அருகே நின்ற மனைவி அவரைத் தாங்கிக் கொண்டு தவித்தனள். இக்கோர சம்பவத்தைக்கண்ட அனுஸூயை சொல்வாள்;

"ஸௌபாக்கியவதி! வருந்தாதே! உன் கணவன் மாண்டுபோனதாக எண்ணாதே! அரை நொடியில் அவர் ஆவிபெற்று மன்மதவடிவுடன் விளங்குவதைக் காண்பாய். நான் என் கணவனிடம் பக்தி பூண்டிருப்பதும், நீ உன் கணவனையே தெய்வமெனக்கொண்டு வாழ்ந்துவருவதும், மெய்யல்லவோ? மெய்யேயாதலின்,

இவ் வேதியர்பிரான் நோயொழிந்து, ஆசிபெற்று, இளமையுடன் மன்மத வடிவுகொண்டு சுகஜீவியாக வாழ்ந்திருக்க வேண்டும். நளாயினியினது கற்பின் பெருமையும் அப்பொழுதுதான் வெளியாகும்.''

இவ்வாறு மூன்று முறை கூறியதும், அவ்வேதியர் பிழைத்தெழுந்ததுடன், நோயுமொழிந்து, இளமையுடன் முழுவனப்பும் பெற்று விளங்கினுர். உடனே பொன்மழையும் பூமழையும் பொழிந்தன? தேவ துந்துபிமுழங்கியது, சுரர்கள் ஆடினர்; நரர்கள் பாடினர்; முனிவர்கள் ஆசிகூறினர்; தெய்வமங்கையர் வாழ்த்தினர். அக்காலம் நளாயினியின் கற்பைப்பற்றிப் புகழாதார் ஒருவரேனுமில்லை.

பின்னர், அனைவரும் அத்தம்பதிகளை வாழ்த்தித் தத்தம் இடஞ்செல்ல, அவ்விருவரும் நெடுங்காலம் பெருமகிழ்வுடன் வாழ்ந்து வந்தார்கள்.

இந்தப் பதிவிரதா சிரோன்மணியே மறுபிறவியில் பாண்டவர்களது பத்தினியாகப் பிறந்து விளங்கிய பாஞ்சாலி யென்பர்.

மார்க்கண்டேயர் சரித்திரம்

பக்தியினால் விதியை வென்ற மகிமை

இப் பரதகண்டத்தே கடகம் என்னும் ஒரு திவ்ய க்ஷேத்திரமுண்டு. அப்பதியில் மிருகண்டேயர் என்னும் ஓர் அந்தணர் வேதியருட் சிறந்து விளங்கினார். அவர் இப்பூமியில் அவதரித்த பொழுதே, எல்லாம் வல்ல இறைவனிடம் மெய்யன்பு பூண்டவராதலின், எக் காலத்தும் ஈசனைத் துதிப்பதிலேயே காலங் கழித்து வந்தார். அவர் மனம் இல்லறத்தில் எள்ளளவும் பற்ற வில்லை.

எனினும், பெரியோர் சிலர் அவ்வேதியர் பிரானை யணுகி "ஐயனே! தாங்கள் வெகுகாலம் பிரமசரிய விரதத்தை மேற்கொண்டிருந்தீர். இனி, அதற்கடுத்த இல்லற தர்மத்தை ஏற்றுக்கொண்டு இனிது வாழ்வதே சாலச் சிறந்தது. ஏனெனில், அருங்குணம் வாய்ந்த தங்கள் வம்சம் இப்பூவுலகில் என்றும் அழியாது தழைத்திருக்க வேண்டுமென்பதே எங்களது வேண்டு கோள். 'இல்லறமல்லது நல்லறமன்று' என்னும்பண்டை மொழியைத் தாங்களே நன்கறிவீர். ஆதலின் எங்கள் கோரிக்கை பழுதுறா வண்ணம் செய்வதே உரியதாகும்" என்று கூறினர்.

அதற்கு அவ்வந்தணர் பெருமான் சொல்வர் :—

"பெரியோர்களே! சரணம்! தாங்கள் கூறும் அனைத்தும் மெய்யே! ஆயினும், அருந்தவமியற்றின், வேண்டியவற்றை வேண்டியவாறே பெறலாகும். ஆகவே, என் மனம் துறவில் இறங்கிவிட்டது. மேலும் தாரத்தைத் தேடிக்கொள்ளின், தனத்தைத் தேடவேண்டும். தனத்தைத் தேடவே, பலதுன்பங்களும் பழியும் பாவமும் வந்து சேரும். பின்னர், இல்வாழ்க்கை யென்னும் பங்கத்தில் ஆழ்ந்து கரைகாணு மானுமியைப்போல் பதறித்துடிக்க நேருமல்லவா? அதுபற்றியே, நான் இல்வாழ்வை வெறுக்கத் துணிந்தேன்."

இவ்வாறு முனிவர் சொல்லக்கேட்ட மறைவலாளர் "அந்தணர் பெரும! தாங்கள் எடுத்துரைத்தது உண்மையே. ஆயினும், இல்வாழ்வைச் செவ்வனே நடத்தின், தவத்தினுல் அடையக்கூடிய பலன்கள் அனைத்தும் கைகூடுமென்றுமுன்னோர் மொழிந்திருக்கின்றனர். தாங்கள் இல்லற தர்மத்தில் ஒழுகுவதை நாங்கள் காண விரும்புகின்றோம்" என்று வற்புறுத்திக் கூற, மிருகண்டேயரும் அம்மொழிக்கிணங்கி விட்டார்.

ஆகவே, அப்பெரியோரனைவரும் மிக்க களிப்படைந்தவர்களாய், உடனே அங்கிருந்து பயணமாகி, முற்கல முனிவரின் புதல்வியாகிய மருத்துவதி என்னும் பெண்மணியை அவ்வேதியருக்கு ஏற்ற மணமகளெனக்கருதி, அவ்வாறே அந்நங்கையை மிருகண்டேயருக்கு வெகு சிறப்புடன் மணமுடித்தனர்.

பின்னர், அத்தம்பதிகள் இருவரும் உடலிரண்டு உயிரொன்று என, இன்பமாக இல்லறத்தை நடத்தி

வந்தார்கள். அப்பொழுது அவ்வேதியர் பிரான் சிந்திப்பராயினர் :—

பெரியோர்களின் வேண்டுகோளுக் கிணங்கி, இல்வாழ்வை இச்சித்து அதனை மேற்கொண்டோம். இனி "மக்கள்மெய்தீண்டல் உடற்கின்பம், மற்று அவர்சொற் கேட்டல் செவிக்கின்பம்" என்பது முதுமொழியாகும். அன்றியும், தம்பொருளென்ப தம் மக்கள் ; ஆகலின் நற்புதல்வனை யடைதல் வேண்டும். அவ்வாறு நற்குணங்களையுடைய மைந்தனை அடைந்தால், எழுபிறப்பிலும் தீயவைதீண்டா? நமது வம்சமும் இந்நிலவுலகில் செழித்தோங்கும். புத்திரப்பேற்றினும் பெரும்பேறு யாதொன்றுமில்லை. ஆகவே, அத்தகைய பேறெய்தி இன்பமுடன் இருத்தல் வேண்டும்.

இவ்வாறு நிச்சயித்த அந்தணர் தம் மனைவியுடன் அன்று முதல் அம்பிகை பாகனை நோக்கி, மக்கட்பேறு பெற அருந்தவம் இயற்றி வந்தார். அத்தம்பதிகளின் மனத்தூய்மையையும் தவத்தின் அருமையையும் கண்டு களித்த சிவபெருமான் அவர்களின் முன்பு தோன்றி, "இல்லறத்துறவியே! நீயும் நின் மனைவியும் செய்து வந்த தவத்தை யறிந்து களிகூர்ந்தேன். நீங்கள் வேண்டுவதென்னை ?" எனலும், அத்தம்பதிகள் அக்கணமே பரமனது பாதாரவிந்தங்களில் பக்தியுடன் வீழ்ந்து பணிந்து, "அனைத்துயிரையும் படைத்துக் காக்கும் பரமனே! சரணம், இமையோர் தலைவ! சரணம், இன்னல்தீர்த்து இன்பமளிக்கும் இறைவ! சரணம், புத்திரப் பேறில்லாதார் நற்கதி சேரார் என்ற பெரியோர் கூறு

வதால், புதல்வனொருவனையடைய விரும்பினோம். ஆதலின் எங்கள்மீது இரங்கி, ஓர் ஆண்மகவை அளித்தல் வேண்டும்'' என்று பிரார்த்தித்தனர்.

உடனே சிவபெருமான் புன்னகை கொண்டு வினவுவார் :—

''உங்களுடைய கோரிக்கையை ஈடேற்றவே நான் தோன்றினேன். நீங்கள் விரும்பும் வண்ணம் புதல்வனையளிக்கத் தடையில்லை. ஆயினும், தீமைக்கு உறைவிடமாய், இன்னலுக்கு விளை நிலமாய், ஒரு சிறிதும் அறிவில்லாமக்கள் நூற்றுவரையடைய விருப்பமா? இன்றேல், நன்மையே வடிவெடுத்ததுபோல், உருவும் அழகும் ஒருங்கே யமையப்பெற்று, பக்தனாய் விளங்கும் பதினாறுவயதுள்ள பாலனைப் பெற விருப்பமா? இவ்விரண்டில் உங்களது எண்ணம் யாது?''

சிறிதும் அறிவில்லாத பலபுதல்வரை அடைதலினும் ஒரு நற்புதல்வனைப் பெறுதல் நன்றாகுமாதலின், அருங்குணத்தின் அவதாரமாய் விளங்கும் அவ்விருவரும் துஷ்டப் பிள்ளைகளைப் பெற நாடுவரோ? ஒருக்காலும் நாடார்! ஆகவே ஈசனை நோக்கி ''எங்கள் கலியை நீக்கவந்த காலகண்டனே!, அற்ப ஆயுள் உடையனாயிருப்பினும், நற்குணங்கள் நிறைந்த ஒரு மைந்தனைத் தந்தருளவேண்டும்'' என்று அத்தம்பதிகள் குறையிரந்தனர். இம் மொழிகளைச் செவியிலேற்ற சிவபெருமான் ''நீங்கள் இருவரும் நற்புதல்வனைப் பெற்று நன்மையுடன் வாழ்வீராக'' என்று வரமளித்து மறைந்துபோனார்.

பின்னர் அவ்வந்தணர் தம் மனைவியுடன் களிப்

பெய்தி, சிவபிரானது அருள் சித்திக்குங் காலத்தைப் பேராவலுடன் எதிர்பார்த்திருந்தார்.

அவ்வாறிருக்க, நாளடைவில் மருத்துவதியென்னும் கற்பரசி கருவுற்று, நல் முகூர்த்தம் ஒன்றில் அழகே உருவெடுத்தாற் போன்ற ஓர் ஆண்மகவைப் பெற்றெடுத்தனள். இதனையறிந்த வேதியர் அனைவரும் ஒருங்கே திரண்டு வந்து, மிருகண்டேயரையடைந்து, அவர் மக்கட்பேறு பெற்றதைக் குறித்துப் பரமானந்தங் கொண்டு, அக்குழந்தைக்கு ஆசிகூறினர்.

சிவபெருமானருளால் தமக்கு மகவு தோன்றியதற்கு மிருகண்டேயரும் மகிழ்வெய்தி, வேத விதிப்படி தான தர்மம் முதலியவற்றைச் செய்ய, அறிவிற் சிறந்தபெரியோர் அப்பாலனுக்கு மார்க்கண்டேயன் என்று நாமகரணஞ் செய்தனர்.

பின்னர் வேதியரும் அவர் மனைவியும் தம் மைந்தனை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து மிகுந்த அருமை பாராட்டி வந்தார்கள். அப்பெற்றோர் பாலமுதூட்டிப் பரிவுடன் மைந்தனை வளர்த்துவருகையில், அக்குமாரனும் செல்வமாய் வளர்ந்து வந்தான். 'விளையும் பயிர் முளையிலே' என்ற வண்ணம், ஈசன் அருளால் தோன்றிய அப்பாலன் இயற்கையறிவில் விளங்கிவருவதைக்கண்ட பலரும் அவனைத் தம் மகனே போல் பாவித்து அருமையாகக் கொண்டாடி வந்தனர்.

அப்பாலன் உரிய பருவமடைந்ததும், அவனுக்கு அக்ஷராப்பியாசம் செய்விக்கவே, முழுமுதற் கடவுளது

அருளினால் தோன்றிய மைந்தனுதலின் ஆசிரியர் போதிக்குமுன், மார்க்கண்டேயன் தானே எவ்விஷயங்களையும் உணர்ந்து, ஆசானை மனங் களிக்கச் செய்தனன். மேலும், வயது நிரம்ப நிரம்ப, எல்லாவிதமான கலைகளிலும் தேர்ச்சிபெற்று விளங்கினான்.

அம்மைந்தனது இயற்கையறிவையும் மதிநுட்பத்தையும் அறிந்த அனைவரும், அவனைப் பிரகஸ்பதி என்றே மதித்துப் போற்றிவந்தனர். இது நிற்க,

வேத மோதிலென்? சாஸ்திரம் கேட்கிலென்? நீதி நூல்பல நித்தம் பயின்றிலென்? ஈசனை மனமார வந்தித்து வருவார்க்கன்றி, மற்றையோர்க்கு அவ்வனைத்தும் பயன்படா என்று கருதிய அப்புதல்வன், உமையொருபாகனிடத்து அன்புபூண்டு, எக்காலமும் அப்பெருமானைத் தொழுது வணங்குவதே, தன் கடமையாகக் கொண்டனன்.

இவ்வாறு, மைந்தன் புத்தியிலும் சிவபத்தியிலும் சிறந்து விளங்குவதைக்கண்ட பெற்றோர் மிகவும் மனமகிழ்ந்திருந்தனர். ஆயினும், அவர்கள் எந்நிலையும் ஒருவிதமான மனக்கவலைக்கு ஆளாகி உள்ளஞ் சோர்ந்து, உணர்வழிந்திருப்பதை யறிந்த மார்க்கண்டேயர் தமது இரு முது குரவரைக்கிட்டி அவர்களது பாதத்தில் வணங்கி நின்று, "தங்களை உற்று நோக்கின், ஏதோ மனோவியாகூலத்தால் பீடிக்கப் படுவதாகத் தோன்றுகிறது. அவ்வாறு கவலையுறக் காரணமேதோ? அத்துயரை எனக்கு அறிவிக்கலாகுமோ? எனக்கு அறிவித்தால், என்னாலான வழிதேடி, இக்

கணமே அதனைப் போக்குவேன்" என்று விநயத்துடன் கூறினார்.

அதற்கு மிருகண்டேயமுனிவர் தமது குமாரனைநோக்கி "அப்பனே! எங்கள் துயரை நாங்கள் என்னென்று சொல்வோம்? அத்துயரைப் போக்க யாராலாகும்? நீ வற்புறுத்திக்கேட்பதனால், அதனை உன்னிடம் உரையாது யாரிடம் உரைக்கப் போகின்றோம்? நாங்கள் வெகு காலமாக மக்கட் பேறில்லாது வாடியிருந்து, முடிவில், முக்கண்ணனருளால், உன்னை மைந்தனாகப் பெற்று மகிழ்ந்தோம். மகிழ்ந்துமென்ன? உனக்கோ இச்சமயம் வயது பதினைந்து நிரம்பிவிட்டது. அப்பெருமான் அருளிய வண்ணம், நீ இன்னும் ஒரு வருஷமே இந்நிலவுலகில் ஜீவித்திருப்பாய்; பின்னர் நீயெங்கே! நாங்களெங்கே! இதுபொருட்டே நாங்கள் மிகவும் வருந்துகின்றோம். கைக்கெட்டினது வாய்க்கெட்டாதது போல், தள்ளாத பருவத்தை யடைந்திருக்கும் நாங்கள், உன்னைப் பறிகொடுத்து எங்ஙனம் உயிர்வாழ்வோம்?" என்று பெருமூச்செறிந்து பகர்ந்தனர்.

அதற்கு மார்க்கண்டேயர் சொல்வார் :—

"தந்தையே! உலகில் ஒருவர் பிறப்பதும் இறப்பதும் இரவில் கண்துயின்று காலையில் விழிப்பது போலாகும்! அங்ஙனமிருக்க, ஒருவன் பிறக்கும் பொழுது மட்டும் களிப்புடனிருந்து, இறக்கும்பொழுது வருந்தலாகுமோ? அயன் முதல் தேவர் பலர்க்கும் காலவரையறை விதிக்கப் பட்டிருக்கிறதென்றால், மனிதர் எம்மாத்திரம்? ஆயினும், தள்ளாத பருவத்தில் மைந்

தனையிழப்பது மிகவும் பரிதபிக்கத் தகுந்ததேயாகும். ஆதலினால், எம்பெருமானாகிய அம்பிகை பாகனிடம் உண்மையான பக்திபூண்டு, உங்கள் கவலையைப்போக்க முயலுவேன். நோற்றலின் ஆற்றல் தலைப்பட்டவர் கூற்றுவனையும் வென்றுவிடலாமென்று பெரியோர் கூறியுள்ளது உண்மையேயாம். எனவே, யான் அக்கருணாநிதியை இந்த ஒரு வருஷகாலமும் பக்தியுடன் பூசித்துவரின், தீர்க்காயுள் பெற்று உங்கள் மனத்தைப் பூரிக்கச் செய்யலாமென்றே உன்னுகின்றேன். ஆதலின், நீங்கள் திருவுளம்பற்றி, ஆசீர்வதித்து எனக்கு உத்தரவளித்தால், இக்ஷணமே புறப்பட்டுச்சென்று சிவதலங்கள் அனைத்தையும் தரிசித்துவந்து உங்கள் கோரிக்கையை ஈடேற்றுவேன்."

அவ்வாறே மார்க்கண்டேயர் தம் பெற்றோரிடம் விடைபெற்றுச் சென்று, சிறந்த சிவதலங்களையடைந்து ஆங்காங்குள்ள மூர்த்திகளை உள்ளன்புடன் துதித்து, முடிவில் *திருமணிகர்ணிகையென்னும் தலஞ்சேர்ந்து, அந்த ஆலயத்தின் ஒருபுறத்தே சிவலிங்கப்பிரதிஷ்டை செய்து, அல்லும் பகலும் அம் மூர்த்தியைத் தொழுது வருவாராயினர்.

மார்க்கண்டேயரது தீவிர பக்தியையும் உள்ளன்பையும் உணர்ந்த பரமசிவன் உடனே அவர் முன்னே தோன்றி "தபோதனா! உன் தவத்திற்கு மெச்சினேன். அத்தவத்தின் பயனாக நீ விரும்புவதென்னை?" எனலும், மார்க்கண்டேயர் மிகவும் மனமகிழ்ந்து, அப்பெரு

* இந்த வரலாறு சோழவளநாட்டிலுள்ள திருக்கடவூரில் நடந்ததாகவும் சொல்லுவர்.

மானைப் பலவாறு துதித்து, முடிவில் "அல்லல் தீர்க்கும் ஐயனே! அடியேன் யமனுடைய கையில் அகப்பட்டு வருந்தாது, என்பெற்றோர் களித்திருக்கும் வண்ணம் அருள்புரியவேண்டும்"-என்று வேண்டினார்.

முதல்வனும் அவ்வாறே வரமருளிப்போயினார். ஈசனிடத்து மெய்யன்புபூண்டு பக்தி செய்துவரின், கிட்டாத காரியம் ஏதேனுமுண்டோ? நிற்க,

மார்க்கண்டேயர் மீண்டும் பலதலங்களையும் தரிசித்து முடிவில் தமது இல்லமடைந்தார்; அடைந்ததும் அவருக்கு வயது பதினாறு நிரம்பியது. உடனே யமதூதனொருவன் வந்து அவரது ஆவியைக்கவர யத்தனித்தான்.

அச்சமயம் மார்க்கண்டேயர் சிவபூசை செய்துகொண்டு தமது மனத்தை ஈசனுக்கு வசமாக்கி மெய்ம்மறந்திருந்தார். ஆகவே, மார்க்கண்டேயரை யணுகவும் பயந்த அத்தூதன் வந்த வழியே திரும்பிப்போய், யமனைக்குறுகி "ஆண்டவனே! தங்கள் விதித்தபடி மார்க்கண்டேயரது ஆவியைக் கொண்டுவரப் போனேன். அவரோ நம்பெருமானிடம் பக்தி பூண்டிருக்கிறார். மேலும் குற்றமற்ற மனமுடையவர்; பேரறிவு படைத்தவர். வேதியர் திலகமாய் விளங்குபவர்; அதுபற்றி யான் பயந்து ஓடிவந்து விட்டேன்" என்று இயம்பினான்.

உடனே தனது கணக்கர் மூலமாய், மார்க்கண்டேயருக்கு வயது பதினாறேயென்று தேர்ந்து, அவரது ஆயுளைக் கொண்டுவரும்படி தனது தூதர் தலைவனை ஏவினான் தென்திசைத் தலைவன்.

அவ்வாறே அத்தூதர் தலைவன் மார்க்கண்டேயரை யடைந்து கூறுவான் :—

"வையம் போற்றும் ஐயனே! தங்களுக்கு ஆயுள் பதினாறேயென்று முன்னமே விதிக்கப்பட்டுளது. இச்சமயம் அவ்வாண்டுகள் பதினாறும் கழிந்து போயின. தாங்கள் சிவபக்தியிற் சிறந்து விளங்குவதையறிந்த காலன் (யமன்) தங்களைப் பார்த்து, ஆனந்திக்கவேண்டுமென்று தங்களை அழைத்துவர எனக்குக் கட்டளையிட்டார். அவ்வாறே யான் தங்களை யடைந்தேன். ஆதலின், தாங்கள் இக்கணமே என்னுடன் வரவேண்டும்."

அப்பொழுது மார்க்கண்டேயர் மெய்ம்மறந்து சிவபிரானைத் தியானித்திருந்ததனால், காலதூதன் கூறிய வசனங்களைக் கவனிக்கவில்லை. ஆகவே, அத்தூதர் தலைவனும் மார்க்கண்டேயரை அணுகப்பயந்து யமனிடஞ்சென்று "ஐயனே! அச்சிவபக்தனை அணுகி, அவரது ஆயுளைக் கவர்ந்து வருதல், எவராலு மாகாது" என்று கூறினான்.

கூறியதும், யமன் நெற்றியில் புருவமேற வெகுண்டு, கண்களில் தீப்பொறி பறக்க, தனது வாகனமாகிய எருமைக்கடாவின் மீதேறி, "இதோ அப்பாலனது ஆவியை யானே கவர்ந்து வருவேன்" என்று சபதங் கூறிப் புறப்பட்டான். அவ்வாறே கோபாக்கினியுடன் காலன் தம்முன் வந்து தோன்றி நிற்பதையும் மார்க்கண்டேயர் அறிந்தாரில்லை. ஏனெனில், அவரது சித்தம் சிவன்பால் குடியிருந்தது. பின்னர்,

யமன் :—"பிள்ளாய்! ஊழ்வினையின் பயனைப்போக்

விடுதல் அருமையினும் அருமை! முன்னம் சிவபெருமானும் உனக்கு ஆயுள் பதினாறென்றே விதித்திருக்கின்றான். அதனைக் கடந்து நீ உயிர் வாழ்தல் முடியாது. நீயோ சிவபிரானிடத்து அன்புகொண்டு நியமந்தவறாது பூஜைசெய்து வருவதனால், அப்பூசனையின் பயன் உனது பாவங்களைப் போக்குமே யல்லாது, ஆயுளை வளரச் செய்யாது. இந்திரனும் ஒருகாலத்தில் ஆவி துறக்கின்றானென்றால் நீ எம்மாத்திரம்? மும்மூர்த்திகளும் உன் முன் தோன்றி, உன்னைப் பாதுகாப்பதாயிருந்தாலும், உன் ஆவி போவதைத்தடுக்க அவர்களாலாகாது. வீண் மனோரதம் வேண்டாம். இதோ நான் எனது பாசக்கயிற்றை வீசுவேன்."

மார்க்கண்டேயர் :—“ யானோ சிவபிரானிடம் பக்தி பூண்டுள்ளேன். இனி, நான் வேறு, அவர் வேறு, என்பதில்லை. என்னை நீ அவரிடமிருந்து பிரிக்கப் பார்ப்பது கற்பாறையில் கயிறு கிழிப்பதுபோலாகும். எக்காலத்தும் அழியாத ஈசன் எனக்கு அருள் புரிந்திருக்க, நான் உன்னுடன் வரவேண்டுமென நீ விரும்புவது அறிவின்மையாகும். தண்ணீரினின்று தண்மையைப் பிரிக்க முடியாதது போலவே, என்னைச் சிவபெருமான் பக்கலிலிருந்து நீ பிரித்துக்கொண்டு போக முடியாது.''

இவ்வாறு மார்க்கண்டேயர் விளம்பியும், யமன் அம்மொழியைக் காதுகொடுத்துக் கேட்கவில்லை. கதிரவனது மிகக்கடுமையான உஷ்ணத்தைச் சகித்துக் கொண்டு அவன் முன்பு நின்றாலும், அவனதுவெப்பம் தாக்கிச் சூடு கொண்டிருக்கும் மணலின்மீது நிற்க யாராலாகும்? அவ்வண்ணமே, ஈசனெதிர் நின்றாலும்

ஈசனருள் பெற்றியர்ந்த ஞானிகளின் முன்பு நின்று, அவர்களைப் பங்கப்படுத்த யமனாலாகுமோ? ஒருநாளும் ஆகாது!

அவ்வாறிருக்க, அடியார்களது அருமை பெருமைகளை உணராத காலன் தன் வல்லமையை மார்க்கண்டேயரிடம் காட்ட நிச்சயித்தனன். ஆகவே, மார்க்கண்டேயரை யணுகித் தன் பாசக்கயிற்றை அவர்மீது வீசியெறிந்து, அவர் ஆவியை இழுக்கத் தொடங்கினான்.

எக்காலத்தும் சிவபிரானையன்றி வேறு கதியில்லையென்று கருதியிருக்கும் மார்க்கண்டேயர் "தேவரும் முனிவரும் தொழுதேத்தும் தேவனே! உன்னையன்றி, என்னைக் காப்பாற்றுவார் யாவருளர்? எம்பெருமானே! நின் இணையடிகளை அடைக்கலமாக அடைந்தேன். சரணம், அம்பலத்தரசே! அருள்புரிவாய்" என்று மனமாரப் பிரார்த்தித்தார்.

பிரார்த்தித்தவளவில், மார்க்கண்டேயர் பூஜித்துவந்த சிவலிங்கத்திலிருந்து நம்பெருமான் தோன்றி "அப்பனே! குழந்தாய், அஞ்சேல் அஞ்சேல்" என்று அபயமளித்து, மார்க்கண்டேயரது உயிரைக்கவர அங்கெதிர்த்து நிற்கும் யமனைத் தமது இடக்காலால் உதைத்துவிட்டனர்.

உடனே காலன் அடியற்ற மரம்போல் கீழே விழுந்தான். விழுந்ததும், மால் அயன் முதலிய மூர்த்திகள் பலரும் திகில் கொண்டனர். வானமும் பூமியும் கிடுகிடென நடுங்கின, ஜீவராசிகள் அனைத்தும் என் செய்வோமென ஏங்கின.

இது நிற்க, நாளென்செயும், வினைதான் என்செயும், தன்னை நாடிவந்த கோளென்செயும், கொடுங்கூற் றென்செயும், பரமனருள் இருந்தக்கால் ?

சிவபிரான் வந்து தோன்றியிருக்குங்கால் காலனைக் கண்ட பீதியை மார்க்கண்டேயர் ஒருவாறு தணித்துக் கொண்டதும், அப்பெருமான் "பக்தனே! நீ நம்மைக் குறித்து வழிபாடியற்றி வந்ததன் பயனாச, உனக்கு ஆயுள் என்றும் பதினாறாக இருக்கும்படி வரமருளினோம். இன்று போலவே நீ என்றும் பக்த சிகாமணியாக விளங்குவாயாக" என்று வரமருளி, மார்க்கண்டேயர் பூஜித்து வந்த சிவலிங்கத்திலேயே மறைந்து போனார்.

காலனுங் கர்வங்குலைந்து தன் பதி சேர்ந்தான். இச் சம்பவங்களை அறிந்த மார்க்கண்டேயரின் பெற்றோர் அடைந்த களிப்பிற்கு ஓர் அளவில்லை. இது நிகழ்ந்து வெகு காலமாகியும், தாம் சிவபிரானிடத்துப் பூண்ட பக்தியினால் என்றும் பதினாறு வயதுள்ளவராக மார்க்கண்டேயர் விளங்கி வருகின்றாரென்பது நம்முன்னோர்களின் கொள்கை. அவ்வாறே நமது புராணங்களுங் கூறுகின்றன.

ஆகவே, ஈசனிடத்து மெய்யன்பு கொள்ளுவோர் விதியையும் வென்றுவிடலா மென்பது வெளிப்படை. அனைவரும் அவ்வண்ணமே அனவரதமும் அமலநாதனை மனமாரப்போற்றிச் சுகமே வாழ்வார்களாக!



ஸுகன்யை

கன்னியர் திலகமாம் ஸுகன்யை

பதி பக்தி

நீர் வளமும் நில வளமும் நிறைந்து, குடிவளம் நன்கு செழித்து, கோல்வளம் மேன்மையுடனோங்கி, எந்நாட்டினும் நன்னாடாய் விளங்கியது கோசலநாடு. அந்நாட்டின்கண் அயோத்தி யென்னும் அழகிய நகர் ஒன்றுண்டு. அந்த அயோத்திமா நகரையே அரசிருக்கையாகக் கொண்டு செங்கோல் செலுத்தி வந்தான் சர்யாதி என்னும் அரசர் பெருமான். அவனுக்கு மனைவியர் பலர் இருந்தனர். ஆயினும், அம்மன்னவனுக்கு ஒரே புதல்விதானிருந்தனள். அம்மங்கையின் பெயர் ஸுகன்யை. அவள் அழகிற் சிறந்தவள். ஆடல் பாடல்களில் தேர்ச்சிபெற்றவள்; நற்குண நற்செய்கைகள் யாவும் நிரம்பப் பெற்றவள். இது நிற்க,

அந்நகருக்கு அருகே அழகிய பொய்கையொன்றுண்டு. அந் நீர்நிலையைச் சுற்றி நான்கு பக்கங்களிலும் புன்னை, கொன்றை, அகில், அரசு, மா, பலா, முதலிய மரங்கள் செழிப்பாய் வளர்ந்திருந்தன. மேலும், அக்குளத்தில் அன்னம், சக்கரவாகம் முதலிய பறவைகள் வசித்து வந்தன. அத்தடாகத்திற்கு அருகில் ஒரு பூஞ்சோலையும் இருந்தது.

ஒருநாள் நிருபன் தன் பத்னியருடன் வேடிக்கையாக அப்பூங்காவை யடைந்தான். அவனது அருமைப் புதல்வியாம் ஸுகன்யையும் அவர்களுடன் சோலை சென்றனள். மன்னவன் தன் மனைவியருடன் பூங்காவின் வளங்களைக் கண்டு களித்திருக்கையில், அக்கன்னிகை தன் சேடியருடன் மலர்கொய்ய அச்சோலையின் ஒரு மூலையை யடைந்தனள்.

ஈதிங்ஙனமிருக்க, சியவனர் என்னும் முனிவர் பெருமான் வெகு காலமாக ஆகார நித்திரை யாவுமின்றி அப்பூஞ்சோலையின் ஒருபுறத்தே தவமியற்றியிருந்தார். அவர் ஒரு சிறிதும் அசைவின்றி நெடுங்காலம் அவ்விடத்திலேயே தவம் பூண்டிருந்ததனால், பெரிய புற்றொன்றெழும்பி, அவரை மூடியிருந்தது. செடிகளும் கொடிகளும் அப்புற்றின்மீது படர்ந்திருந்தன.

அரசன் புதல்வி அப்புற்றை யணுக, அதிலிருந்து மந்தமான சத்தமொன்று வெளிக் கிளம்பியது. உடனே அது யாதென அறிய ஆவல் பூண்டவளாய், அப்புற்றிலுள்ள துவாரத்தின் வழியாக உள்ளே நோக்கினாள். பளபளவென்ற மின்னல்போன்ற ஒளி அதனுள்ளே காணப்பட்டது. அத்தகைய ஒளி இன்னதென்று தெரிந்து கொள்ளும் பொருட்டு, அருகேகிடந்த சிறிய முள்ளை யெடுத்து, அத்துவாரத்திலுள்ளே யிட்டனள்.

பின்பு, அம்முள்ளை வெளியே எடுத்துபார்க்க, அதன் முனையில் ஈரம்பற்றி யிருந்தது. உடனே "அந்தோ! துவாரத்தினுள்ளே ஏதோ ஜீவன் இருக்கின்றதுபோலும், அறிவின்மையால் அதனை முட்கொண்டு குத்திவிட்டேனே! என்செய்வேன்! அறியாப் பிள்ளை யென்

பது உண்மையாயிற்றே" என்று வருந்தியபின்னர் பாங்கியருடன் கூடிக்குலாவியதில், அதனை மறந்துவிட்டனள்.

சிறிது நேரஞ் சென்றதும், அரசன் தன் பரிஜனங்களுடன் நகரஞ்சென்றான். சென்றதும், பார்த்திபனுடன் பூங்கா சென்று திரும்பி வந்த அனைவர்க்கும் மல மூத்திராதிகள் வெளி வரவில்லை. அதனால், அவர்கள் மிகவும் வருந்தினர். இதனை யறிந்த இறைவன், இடர்க்கடலிலாழ்ந்து, என் செய்வதென ஏங்கி, அமைச்சர், பெரியோர் இவர்களைத் தருவித்து "அந்தோ! திடீரென யாவரும் இவ்வாறு வருந்தக் காரணம் யாது" எனலும், கற்றறிந்த பெரியோர் காவலனை நோக்கிக் கூறுவர் :—

"மன்னர் மன்ன! நமது பூங்காவில் சியவனரென்னும் முனிவர்பிரான் தவமியற்றி வருகின்றனர். அவர் இருப்பது தெரியாவண்ணம், அவரைப்புற்று மூடியிருக்கின்றது. பூங்கா சென்று திரும்பிவந்த அனைவருந் திடீரென வருந்துவதை ஆராயுமிடத்து, எவரேனும் அவருக்குத் தீங்கிழைத்திருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. இன்றேல் பிரஜைகள் வருந்தக் காரணமில்லை."

இவ்வாறு மூதறிவாளர் உரைத்த கட்டுரையைக் கேட்ட காவலன் தாபங்கொண்டு "பெரியோரைப் பிழைத்தது யார்? ஒருவன் தீமைசெய்ய, அதனால் அனைவரும் தாங்கமுடியாத துன்பமடைய நேர்ந்துவிட்டதே" என்று சினந்தான்.

உடனே, முக்கரணங்களாலும் தாங்கள் முனிவர்க்குத் தீமை புரியவில்லையென அனைவரும் பதிலுரைத்தனர். இதனை யுணர்ந்த அரசிளங்குமரி, தன் தந்தையை அணுகி வணங்கி "எந்தையே! யான் பூஞ்சோ

லேயில் மனத்திற்கிசைந்தபடி விளையாடியிருக்கையில் புற்றொன்றைக் கண்டேன். அதனுள்ளே பளீரென்று ஒளி தோன்ற, முன்பின் யோசியாமல் முள்ளால் குத்தி விட்டேன். இதுவே நான் செய்த தீமை. அதுவும் பேதைமையினால் புரிந்ததாகும்" எனலும், இறைவன் திடுக்கிட்டு, மிகுந்த பரபரப்புடன் பூங்காசென்று, மெல்ல அப்புற்றை இடித்துத்தள்ள, அதனுள் முனிவரைக் கண்டனன்.

கண்டதும் அவரது மலரடிகளில் தண்டனிட்டு "ஐயனே! அறியாப் பிள்ளையாகிய என் புதல்வி தங்களுக்குத் தீங்கு விளைவித்தனள். எல்லாவற்றையும் துறந்த பெரியோர் சினங்கொள்ளார். இப்பொழுதோ, என் பரிஜனங்கள் அடைந்திருக்கும் துன்பத்தைத் தாங்கள் நன்கறிவீர். ஏதுமறியாப் பெண்பிள்ளை செய்த பிழையைப் பொறுத்து, அருள் புரியவேண்டும்" என்று வேண்டினன்.

அதற்கு முனிவர் "அரசே! நான் சினங்கொண்டேனில்லை. உன் குமரி குத்தியதனால் என் கண்கள் போயும் நான் பொறுமையுடனிருக்கின்றேன். ஆயினும், நான் அம்பிகையைக் குறித்துத் தவமியற்றுவதால், பக்தனுக்கு நேர்ந்த துன்பத்தைப் பொறாத அம்பிகையின் கோபத்தால், உனது பரிவாரங்கள் வருந்துகின்றன போலும், நான் என்செய்வேன்? இன்னது செய்வதென்று எனக்கும் தோன்றவில்லையே. யானோ குருடனாய் விட்டேன்" என்றனர்.

உடனே அரசன் "முனிவர் பெரும! தங்களாலாகாத காரியம் ஒன்றுளதோ! வேண்டியதை வேண்டிய

வண்ணமே பெறவும், பிறர்க்கு அளிக்கவும், தங்களா லாகு மென்பதை அனைவரும் நன்கறிவர். தாங்கள் கண் ணிழந்து குருடாய் விட்டதனால், எக்காலத்தும் உட னிருந்து தங்களுக்கு உரிய தொண்டுசெய்யப் பலரை ஏற்படுத்தி, ஒருகுறையுமில்லாது பார்த்து வருகிறேன். இச்சமயம் என்னைச் சார்ந்திருப்போர் படும் பாட் டைப் போக்கவேண்டும். அவ்வாறே அருள்புரியப் பிரார்த்திக்கிறேன்" என்று வேண்டி நின்றான்.

அதற்கு முனிவர் விளம்புவார் ;—

" அரசர் திலக ! கண்ணொளியிழந்து பரிதபிக்கும் எனக்கு உன் வேலையாட்கள் மனமார ஊழியஞ் செய்ய உடன்படார். உன் புதல்வியினால் நான் அடைந்த கேட்டிற்கு ஈடாக, அக்குமரியை எனக்குத் தானஞ் செய்யின், அவள் எனக்கு வேண்டிய பணிவிடைகள் புரிவாள். அங்ஙனமாயின், உன் குடி ஜனங்களுக்கு உண்டாயிருக்கும் துன்பம் உடனே அகன்றுபோம். எனக்கு உன் புதல்வியை அளிப்பதனால், நீ மேலான புகழ் பெறுவாய்."

இவ்வாறு முனிவர் சொல்லியதும், கொற்றவன் ஒன்றும் தோன்றாது திகைத்து, மௌனவிரதம் பூண்டு, தனக்குத்தானே சிந்திப்பானாயினன்.

" ஈதென்ன ! இருதலைக்கொள்ளி எறும்புபோல் அக ப்பட்டுக் கொண்டோம். முனிவர் விரும்பிய வண்ணம் பெண்ணைக் கொடாது போயின், ஜனங்கள் பாடுபட வேண்டும். அல்லது முனிவருக்கு நமது குமரியைக் கன் னிகாதானம் செய்துவிடுவோமாயின், அவளுடைய கதி தான் என்னவாகும்? கிளியை வளர்த்துப் பூனையின் கை

யில் கொடுப்பதுபோல நமது செல்வப்புதல்வியை முனி
வருக்குக் கொடுத்துவிடுவதா ? மணாளனின் லட்சணம்
வெகுநன்று. அந்தகன், தொண்டுகிழவன், கானகத்தே
வசிப்போன்! அறுசுவை யுண்டியில்லாது வாயுவை உட்
கொள்வோன்! அருமையாய் வளர்த்த நமது புதல்வி
அவருக்கு வாழ்க்கைப்படின், அவள் உலகத்தில் என்ன
இன்பங்களை அனுபவிக்க முடியும்?''

இவ்வாறு யோசித்திருக்கையில் ஸுகன்யை தன்
பிதாவின் முன்பு தோன்றி, " தந்தையே! நான் செய்த
பிழைக்கு நானே வருத்தப்படவேண்டும். என்னொரு
த்தி பொருட்டு அனைவரும் கஷ்டப்படவேண்டிய
தில்லை. என்னை எவ்வாறு முனிவருக்குக் கொடுப்ப
தென்று சிந்தனை செய்யவேண்டாம், நிதியும் கணவனும்
நேர்படினும் தத்தம் விதியின் பயனே பயன் என்பதைத்
தாங்கள அறியீரோ! அறிந்தும் ஏன் தடுமாற்றம்?
கல்லென்றாலும் கணவன், புல்லென்றாலும் புருஷன்,
மேலும், அருந்தவ முனிவரைப் பதியாகக் கொள்ள
நானும், மணமகனாகக் கொள்ளத் தாங்களும், எவ்வளவு
பாக்கியம் செய்திருக்கவேண்டும்! ஆகவே, தாங்கள்
சற்றேனும் யோசிக்கவேண்டாம். முனிவர் விரும்பிய
வாறே என்னை அவருக்குக் கொடுத்துவிடுங்கள். அங்
ஙனமாயின், அனைவரும் சுகமே வாழலாம். இல்லை
யேல், முனிவரின் கடுங்கோபத்திற்கு நாம் உட்பட
வேண்டும்,'' என்று கூறினள்.

மகளின் மனவுறுதியைக் கண்டு மன்னவன் மகிழ்ந்
தானாயினும், விதியின்றி அந்நங்கையை முனிவர்க்கு
மணம் புரிவித்தான். பின்னர், தன் செல்வியைக் கான

கத்தே விட்டுவர மனம்பொறாத பார்த்திபன் கண்ணுங் கண்ணீருமாய் மாளிகை சேர்ந்தான்.

இதுநிற்க, நற்குணங்கள் அனைத்தும் ஒருங்கேதிரண்டு வந்து உருவெடுத்தது போன்ற காரிகையைக் கடிமணம் புரிந்த முனிவர் அவளுடன் சுகமே வாழ்ந்து வந்தார்.

கொண்ட கணவன் இருகண்ணுமிழந்த அந்தகனுயிருப்பினும், அவரையே அழகிற் சிறந்த மன்மதன் எனக் கொண்டு, எக்காலத்தும் அவர் மனமகிழும் வண்ணம் வேண்டிய பணிவிடைகளை இன்பமுடன் மனமாரச் செய்து வந்த ஸுகன்யையின் கற்புறுதியைக் கண்டு தேவரும், அருந்ததி அநுஸூயை முதலிய கற்பரசிகளும் அப்பெண்மணியை வாழ்த்திக் கொண்டாடின ரென்றால், அவளது கற்பின் நலத்தைப் பற்றி நாம் எவ்வாறு எடுத்துரைக்க முடியும்?

பொதுவாகச் சொல்லின், கற்பரசிகளுக் கெல்லாம் ஸுகன்யை ஓர் ஒப்பற்ற அணிகலமென்றே சொல்ல வேண்டும். இவ்வண்ணம் யாவரும் புகழ அம்மாதரசி வாழ்ந்து வருகையில், ஒரு நாள் தன் கணவனுக்கு வேண்டிய பொருள்களைச் சேகரித்துவரக் கானகஞ் சென்றனள். சென்று, அங்குள்ள பூஞ்சோலையில் மலர் கொய்திருக்கும்பொழுது, அவ்வழியேசென்ற அசுவினி தேவர்கள் (தேவ வைத்தியர்) அத்தையலின் இயற்கையழகைக் கண்டு வியந்து அக்காரிகையின் கற்புநலத்தைப் பரீட்சிக்க விரும்பினர்.

ஆகவே, அப் பெண்மணியிடஞ் சென்று "நங்காய்! நீ சுரமகளோ? அன்றேல் நாக கன்னியோ? யார் நீ? உன் நாமமென்ன? இரதி தேவியே போல்

அழகு வாய்ந்த நீ வேலைப்பாடமைந்த பொன்னுடையும் பட்டாடையும் தரியாது, மரவுரி பூண்டிருப்பது ஏனோ?" எனலும், வேடனைக் கண்ட மான்போல் பதறித் துடித்த அக்கற்பரசி "யான் சியவன முனிவரின் மனைவி, சர்யாதி மன்னனுடைய செல்வப் புதல்வி, முன் பின் யோசியாது வாய்க்கு வந்தவாறெல்லாம் பேசவேண்டாம். பேசின், உங்களது கதி என்னுகுமோ? அறியேன்!" என்றுரைத்தனள்.

அது கேட்ட தேவவைத்தியர் இருவரும் முன்னையிலும் பன்மடங்கு அழகுடன் அக்கன்னியின் முன்பு தோன்றி, மறுபடியும் அந்நங்கையை நோக்கி "ஹிதமான வார்த்தை சொன்னுல், நீ அதைத்தட்டி விடுகின்றாய். அவலட்சணமே வடிவெடுத்தது போன்ற முனிவருக்கு, உன்னை மணம் புரிவித்த தந்தையின் மதியீனத்தை, நாங்கள் என்னென்று சொல்வோம்? அரம்பையாதி மங்கையர்களிலும் நின்னை யொப்பார் ஒருவரும் இல்லையே! இவ்வனத்தில் நீ மரவுரியுடன் வசிப்பதைப் பார்க்க எங்கள் மனம் பதறுகின்றதே: உன் தந்தையே உனக்குச் சத்துருவாயினன். உன் வனப்பிற்கும் குணத்திற்கும் ஏற்ற அரசிளங் குமரனைத் தேடி, உன்னைக் கடிமணம் செய்வித்திருக்கவேண்டுமே.

"அவ்வாறில்லாது, பார்ப்பதற்கும் அருவருப்பான சரீரம் வாய்ந்த தொண்டு கிழவனுக்கா, உன்னை மனைவியாகச் செய்வது? அந்தோ! உன் தலைவிதி இருந்தவாறென்னே! சியவன முனிவர் உனக்கேற்ற கணவரல்லர், அவரோ துறவி, நீயோ போக பாக்கியங்களை அனுபவிக்க வேண்டிய அரசிளங்குமரி! நீ இக்கான

கத்தே கால் நொந்து கை நொந்து காலங்கழிப்பது தகுமோ! தகாது.

"ஆதலின், அக்கிழவரை இனி நீ நாடவேண்டாம். எங்களுடன் இந்திரலோகம் வருவாயேயானால், இந்திராணியைவிடப் பன்மடங்கு சிறப்புடன் நீ வாழலாம். மேலும், எண்ணிறந்த அரமடைந்தையர் குற்றேவல் செய்ய உன்னண்டையிலேயே அல்லும் பகலும் காத்திருப்பர். வலுவிலே வந்த ஸ்ரீதேவியைத் தள்ளி விடுதல் அழகன்று; அறிவுமன்று. தாமதியாது எங்களுடன் வந்துவிடு. அங்குள்ள நந்தவனத்திலும் ஏழடுக்கு உப்பரிகையிலும், உல்லாஸமாய்க் கவலையில்லாது காலங் கழிக்கலாம். அவ்வாறாயின், காய் கனி கிழங்கு தேடவேண்டிய அவசியமில்லை. கண்ணிழந்த முனிவரையும் கருதவேண்டாம்." என்று பலவாறு அவளை மயக்கப்பார்த்தனர்.

கற்பென்னும் பேரணியைப்பூண்ட பெண்மணிகள் இச்சக வார்த்தைகளை நம்பி ஏமாந்து போவரோ? ஒரு நாளுமில்லை. ஆகவே, அத்தேவர்கள் கூறிய கொடு மொழியைக்கேட்ட அக்கன்னிகாரத்தினம் நடுநடுங்கினளாயினும், பின்வருமாறு அவர்களுக்கு அறிவு புகட்டத் தலைப்பட்டனள்:—

"உங்களை உற்றுநோக்கின் தேவரென்றே தெரிகிறது நீங்கள் இருவர். நானோ இங்கு தனிமையாக இருக்கிறேன். மேலும் நான் நிற்கும் இடம் மனிதசஞ்சாரமில்லாத கானகம். ஆதலின், யாருமில்லாத இவ்வனத்தே வந்து என்னை அணுகி அடாத வார்த்தைகள் கூறுவது நீதியாகுமோ?

"மனிதர்கள் ஏதேனும் பிழை செய்யின், அவர்களுக்கு அறிவு புகட்டி, அவசியமாயின் தண்டிக்கவேண்டியது தேவர் கடமை. அங்ஙனமிருக்க, நீங்களே அபவாதம்புரிய நிச்சயித்துவிடின், அனைவர்க்கும் மேலான ஈசன் உங்களைத் தண்டிக்க இருக்கிறான். இதனை நீங்கள் மறக்க வேண்டாம். முன்னம் அகல்யாதேவியை இச்சித்த இந்திரன் பட்டபாட்டைத் தாங்கள் அறியீரோ? இது நிற்க,

"மங்கையரின் முன்பு தோன்றி, அவர்களது கற்பைக் கலைக்கத் தலைப்படின் கற்புடைய மங்கையர் இடும் சாபத்தை மும்மூர்த்திகளும் தடுக்கமுடியாதென்பதைக் கண்டிப்பாய் உணர்ந்துகொள்ளுங்கள். வேண்டாம், வந்த வழியே போய்விடுவதே உத்தமம். இல்லையேல் உங்கள் கதி என்னாகுமோ அறியேன்.

"இனி, கற்பரசிகளின் கணவர் கூன் குருடு செவிடாயிருப்பினென்? பாலராயிருப்பினென்? விருத்தராயிருப்பினென்? அக்கினிசாட்சியாகக்கொண்ட கணவர் எவ்வளவு குரூபியாயிருந்தாலும், கற்புடைய மங்கையர் அதன்பொருட்டு வருந்தார்.

"ஆனால் எல்லாம் வேதனிட்ட விதியின்படியே யாகுமெனத்தேர்ந்து, மனங்களித்திருப்பர். என் கணவன் மன மகிழும்வண்ணம், தொண்டுபுரிந்திருப்பதைவிட, நான் எதையும் பெரிதென்று மதியேன்! கிட்டாப்பழத்திற்குக் கொட்டாவி விட்டிருக்கவேண்டாம். தன்னந்தனியே யிருக்கும் என்முன் இனி நீங்கள் நிற்பீரேல் சபித்துவிடுவேன். ஆதலின், தேவர்களே! வந்தனம்;

போய் வாருங்கள். என் கணவன் ஆவலுடன் என் வரவை எதிர்பார்த்திருப்பார், நான் செல்லவேண்டும்."

இம்மொழிகளைக்கேட்ட தேவமருத்துவர் இருவரும் முனிவர் பத்தினியின் கலங்கா நிலைமைக்குப் பெரிதும் வியந்து, சிறிது நேரம் ஒன்றும் பேசாது மௌனஞ் சாதித்திருந்தனர்.

பின்னர், அத்தேவர் இருவரும் அம்மங்கையர் திலகத்தை நோக்கி "உத்தம பத்தினியே! உன் கற்பின் திறத்தைக் கண்டு களித்தோம். உனது கற்புறுதியைப் பரீட்சித்தறிவதற்கு வந்தோமே யொழிய, துர் எண்ணம் கொண்டோமில்லை. உன் நிலைமையைக்கண்டு நாங்கள் பரிதபிப்பதனால், உனதுபதியை மன்மதனே போல் அழகுபெறச் செய்து, இருவரும் பெற்று இன்பமுடன் வாழும்படி அருள்புரிய எங்களாலாகும். ஆதலின், எங்களது விருப்பத்தை உனது கொழுநனுடன் கூறுவாயாக. அவர் இஷ்டப்படின், நாங்கள் அவ்வாறே செய்யத்தடையில்லை" என்று சொல்லினர்.

அம் மங்கையர்க்கரசி உடனே விரைந்து சென்று, தன் கேள்வனிடம் நடந்த வற்றை வணக்கமுடன் விளம்பவே, அத் தேவ வைத்தியரை அழைத்து வரும்படி அவர் அறிவித்தார். அங்ஙனமே ஸுகன்யை வானவ மருத்துவரை அழைக்க, அவர்களும் முனிவரின் பர்ண சாலையை அடைந்தனர்.

அடைந்ததும், முனிவரால் அன்புடன் உபசரிக்கப் பட்ட தேவர்கள் மனமகிழ்ந்து, அருகே யிருக்கும் குளத்தில் மூழ்கி வரும்படி முனிவரை வேண்டினர். முனிவரும் அவ்வண்ணமே நீராடிக் கரையேறியதும்

அவர் முருகனைப்போல் அழகுடன் விளங்கினர். அதனைக் கண்ட காரிகையும் உள்ளம் பூரித்தனள்.

ஆயினும், அருகே நின்ற தேவரை நோக்க, அவர்களும் அங்க அடையாளத்தில் எள்ளளவும் குறைவின்றி முனிவரை யொத்திருந்தனர். மூவரும் ஒருருவாய் வேற்றுமையின்றி விளங்குவதைக் கண்ட ஸுகன்யை,

'இதேது! கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போலாயிற்று. நான் கூறிய புத்திமதியை யுணர்ந்த தேவர்கள் நல்வழிப் பட்டனரென்றல்லவோ எண்ணி மோசம் போனேன். இப்பொழுது அவர்கள் என்னை மயங்கச் செய்து விட்டனரே! தெய்வமே! என் செய்வேன்! புலிவாயினின்று தப்பிய மான்போல், தேவரிடம் தப்பிப் பிழைத்தேனென்று களிகூர்ந்த யான், மறுபடியும் திகைக்கும்படி நேர்ந்து விட்டதே!

"ஈசனே! இது உன் திருவிளையாடலோ? அன்றேல் தேவர்தம் சூழ்ச்சியோ? யாதோ அறியேன்! ஓ! தேவர்கள் என் மனவுறுதியை மீண்டும் சோதித்தறிய முயலுகின்றனர்போலும்! ஆயினுமென்ன! நான் எனது பதியிடம் மெய்யன்பு பூண்டு, தொண்டு புரிந்து வருதல் உண்மையாயின், இம்மூவரில் என் கணவர் இன்னார் என்பதைக் கண்டறிவேன். எனது கற்பில் ஏதேனும் களங்கமிருப்பின், என் காதலனை நிர்ணயிப்பது கஷ்டமாகும்."

என்று யோசித்து முடிவில் அம்பிகையைத் தியானித்து,

"இச்சமயம் யான் அநாதையாயினேன்! நீயே என்னை ரட்சித்தருளவேண்டும். நாமகளே, மலர்மகளே, மலை-

மகளே சரணம்! இவ்வுலகத்திலுள்ள சராசரங்களின் மீது நீங்கள் கருணைகூர்ந்து காத்தளிப்பதும், நான் என் காயகனிடத்து மாறாத அன்பு பூண்டிருப்பதும் மெய் யாயின் இச்சமயம் யான் அந்தரத்தே வீசியெறியும் பூமாலை என் காந்தனது கழுத்தில் வீழ்ந்து, என்னைக் களிக்கச் செய்யும்" என்று கூறித் தன் கைதனிலிருந்த மலர் மாலையை வானத்தே யெறிய, அது சியவன முனி வரது மார்பில் மகிமையுடன் வீழ்ந்து கன்னிகையின் கற்பை நிலை நாட்டியது.

உடனே அந்தர துந்துமி முழங்கிச் சங்கம் ஆர்க்க, அசுவினி தேவர் இருவரும் தங்களது உண்மையுருவு டன் அந்தரத்தே கிளம்பி, "கற்பரசியே சரணம்! உன்னைப்போல் கற்புடைய கன்னியரை நாங்கள் இது வரையில் கண்டது மில்லை, கேட்டது மில்லை! நீ உன் காந்தனுடன் நீடூழிகாலம் சுகமே வாழ்ந்திருப்பாயாக! உன் கணவரும் மன்மத வடிவுடனிருந்து உன்னை மகிழ் விப்பாராக! உன் கற்பைச் சோதிக்க நாங்கள் விரும்பி னோமே யல்லாது, வேறு கெட்ட எண்ணம் கொண்டி ருந்தோமில்லை. பெண்ணரசே! கோபம் வேண்டாம்" என்று ஆசி கூறி, மறைந்து போயினர்.

முனிவரும் தம் காதலியின் கலங்கா நிலைமைக்கு மெச்சினார். பின்னர் ஸுகன்யை ஆசையுற்றபடி, அத்தம்பதிகள் இருவரும் அயோத்திமா நகரடையவே, சர்யாதி மன்னன் தன் மகளையும் மருகரையும் மகிமையு டன் உபசரித்து மகிழ்வெய்தினான்.

உத்தமி கௌதமி

விதியைத் தேடிக்கொள்பவன் மனிதனே

கங்கைமா நதியை நிகர்க்கும் யமுனா நதி தீரத்தில் அமராவதி என்றொரு நகருண்டு. அந்நகரில் வேதியர் திலகமாய் கருணாகரர் என்னும் அந்தணர் ஒருவர் விளங்கிவந்தார். அவர் மனைவியின் பெயர் கௌதமி அவ்விருவரும் மனமொத்து இல்லறத்தைச் செவ்வனே நடத்தி வந்தனர்.

அவர்கள் இருவருக்கும் மனித ஆயுளில் பாதிகழிந்தும், மக்கட்பேறு உண்டாகவில்லை. நாடும் ஊரும் நனி புகழ்ந்தேத்தும் வண்ணம் ஒழுக்கமுடைமையில் அவ்விருவரும் சிறந்திருந்தனராதலின், அவர்களுக்குப் புத்திர பாக்கியமில்லாததைப் பற்றிப் பலரும் மனங் கசிந்தனர்.

ஆயினும், கொஞ்சகாலத்துக்குப்பின், ஈசனது கருணை வெள்ளத்தாலும், நல்வினையின் பயனாலும், அவர்களுக்கு ஒரு மைந்தன் தோன்றினான். ஆகவே, கண்ணொளி கிடைக்கப் பெற்ற பிறவிக் குருடனைப் போல அவர்கள் மகிழ்ச்சி கொண்டனர். இதுவரையில் மக்கட்பேறு எய்தாதிருந்த அத்தம்பதிகள் தங்கள் பாலனைப் பரிவுடன் வளர்த்துவந்து உரியகாலத்தே அவனுக்குக் கல்வி கற்பித்தனர்.

அக்குமாரனும் கூரியமதியுடையோனாதலின், ஆசான் விரித்துரைக்கு முன் கலைகளின் உண்மைப் பொருள்களைத் தானே யுணர்ந்து, தேர்ச்சிபெற்று விளங்கினான்.

இப்படியிருக்க அம்மைந்தனுக்கு வயது பதினெட்டு நிரம்பியது. அந்தோ! விதியின்பயனால் ஒருநாள் அப்புதல்வனைக் கொடிய பாம்பொன்று தீண்டியது. உடனே மணிமந்திர ஔஷதங்களால் அவனுயிரைத் தடுக்க முயன்றும் சிறிதும் பயன்படவில்லை.

விதிவசத்தால் அவ்வேதியர் சிறுவன் மாண்டுபோனான். அச்சமயம் தாய்தந்தையர் அடைந்த துயரத்தை இவ்வளவு அவ்வளவு என்று எடுத்துச்சொல்ல முடியாது! புத்திரசோகம் பொல்லாதல்லவா?

மக்கட் பேறில்லாதார் பொன்னுடையரேனும், புகழுடையரேனும், மற்று என்னுடையரேனும், யாதுபயன்? அன்றியும் மகவில்லாமானிடர், தான தருமங்கள் இயற்றினும், சத்தியவான்களாயினும், நல்லொழுக்கம் பூண்டிருப்பினும், வானவர்தம் ஊர்க்குப்போக மார்க்கமுண்டோ? இல்லை.

ஆகவே, தள்ளாத வயதில் மகனை யிழந்த தாய் "அந்தோ! என் விதிவலி இருந்தவாறென்னே! ஐயோ! நாங்கள் மூப்படைந்தோம். எங்களுக்கு ஒரு பெரிய ஊன்றுகோல் போலவும், ஆலமரத்தின் விழுது போலவும், நீ உதவிபுரிவாயென நாங்கள் வெகு ஆவலுடன் பார்த்திருக்க, எங்களை நிர்க்கதியில் விட்டு விட்டு நீ பறந்து போயினையே! கைக்கெட்டியது வாய்க்கெட்டாததுபோல், காலமில்லாக் காலத்தில் உன்னை யிழந்து பரிதபிக்கவும் செய்துவிட்டதே விதி. கண்மணி! இனி

யாங்கள் என்செய்வோம்! எங்களைக் காப்பாற்றுவார் யாவர் உளர்? மகனே! தலைநாளின் விதிப்படி நீ மாண்டு போனாயே" என்று பலவாறு அழுது அரற்றினாள்.

ஐயிரண்டு திங்களாய் அங்கமெல்லாம் நொந்து பெற்ற தாய் இவ்வண்ணம் வாய்விட்டலறிக் கதறுவதைப்பார்த்த நகரி லுள்ளோர் அனைவரும் ஆற்றொணுத்துயர் அடைந்தனர்.

அச்சமயம், புருகூதன் என்னும் வேடனொருவன் அந்தண குமாரனைத்தீண்டிய அரவைக் கைதனிலேந்தி வந்து, பார்ப்பன மாதின்முன்பு அப்பாம்பை விட்டுப் பகர்வான்:—

"தாயே! உலகமாதா என்று உன்னைச் சொல்லத் தடையுமுண்டோ? அரவமோ நின்புதல்தனைக் கடித்து உயிரைப் போக்கியது. இதோ பார். அப்பாம்பைக் கொணர்ந்திருக்கின்றேன். யாராக இருந்தாலும் பழிக்குப்பழி வாங்கவேண்டியது கடமையாகும். ஆகவே, உன் பிள்ளையைக்கொன்ற நாகத்தை இக்கணமே கொன்று விடுகின்றேன். நஞ்சுள்ள நாகத்தின்மீது கொஞ்சமேனும் இரக்கம் பாராட்டக்கூடாது."

இவ்விதம் கூறிவிட்டு, அவ் வரவத்தை வதைக்க அவ் வனசரன் முயன்றான்.

உடனே வேதியரின் மனைவி நடுநடுங்கி நெஞ்சம் பதைத்து வேடனைநோக்கி "அப்பா! வினையின் விளைவால் என் குமாரன் இறந்து போனான். பாம்பின்மீது எள்ளளவும் குற்றமில்லை. ஆதலின், இப்பாம்பை வீணே கொல்வதனால் யாது பயன்? கொன்றால் என் மகன் ஆவி பெறுவானோ? மாண்டவன் மீண்டுவாரான்.

இது நிச்சயம்! வினைவசத்தால் என் மைந்தனை யிழந்து யான் சோகமடைய நேர்ந்துவிட்டது. இப்பாம்பாகி லும் தன் குட்டிகளுடன் சுகமே வாழட்டும்! ஆகலின் இதனைக் கொலைபுரியவேண்டாம்'' என்று வேண்டி னள்.

வேடன் :—"அந்தோ! எப்பிறவியினும், அதிலும் மானிடப்பிறவியில் ஸந்ததி அவசியம். ஸந்ததியில்லாது போயின் வம்சம் நாசமாகும். ஆகவே, உங்கள் குலத் தையே கெடுக்க வந்த இக்கொடியபாம்பை என்னதான் செய்யக்கூடாது? அம்மணி! உலக வியற்கையை அறி யாயோ நீ? நமது விரோதிகளை வாட்டுவது வேத விதியேயாம். தேவர்களும இவ்வாறே செய்திருக் கின்றனர். முன்னம், இமையோர்க்கு இறைவனாகிய இந்திரன் தன் பகைவனும் விருத்திராசுரனை மாய்த்து விடவில்லையா? அன்றியும், எல்லாம் வல்ல இறைவ னாகிய பரமசிவன் தன்னை யவமதித்து வேள்வி புரியத் தொடங்கிய தட்சனையும் அவனுக்குச் சார்பாயிருந்த அனைவரையும் ஹதம் பண்ணியதாகப் புராணங்கள் கூறுகின்றனவே! சத்துருக்களின்மீது ஒரு சிறிதும் கருணை கூர்தல் ஒவ்வாது. மேலும் கொடியோரைக் கொலை புரியாது விட்டுவிடின், அநீதி மேலிட்டுவிடும்.''

கௌதமி :—"அப்பனே! பதறாதே! எக்காரியத்தை யும் ஆர அமரச் செய்யவேண்டும். பதறிய காரியம் சிதறிவிடும் நீயோ இப்பொழுது பாம்பைக்கொன்று விடவேண்டுமென்று வாதாடுகின்றாய்! நீ விரும்பும்வண் ணம் பாம்பை மடித்து விடுவதால், நமக்குள்ள லாபம் என்ன? இதை நீ யோசித்துப்பார். எண்ணித் துணிக

கருமம் என்பது முதுமொழி, அரவத்தைப் பரபரப்புடன் கொலை புரியின், அதன் உடலும் உயிரும் துடிக்குமல்லவா? மைந்தனை யிழந்து நான் அலறுவது போதாதா? பாம்பு பதறுவதையும் பார்க்கவேண்டுமா? அவ்வாறு பதறுவதைக் காண நான் மனஞ் சகியேன். புலையும் கொலையும் களவுந் தவிர் என்பது வேத வாக்கியம். தன்னுயிரைப் போக்கினும் வேறு ஒரு ஜந்துவின் உயிரை வாங்குவது பாவமாகும். ஆதலின், வேண்டாம், பாம்பைக் கொல்லாதே!"

இவ்வாறு அந்தணரின் பத்தினி அருளுடன் உரைப்பதையும், விலங்குகளைக் கொன்று குவிக்கும் வேடுவன் அன்பில்லாது நவில்வதையும் கேட்டிருந்த பாம்பு, வேடனை விளித்து,

"என்னை நீ கொல்வது எவ்வாறு பொருந்தும்? உனக்கு நான் ஏதேனும் தீங்கிழைத்தேனோ? இல்லை, நாமிருவரும் கானகவாசிகள். நான் கானகத்தே அலைந்து திரிந்திருக்கும்பொழுது, பலதடவைகளிலும் நீ என்னைக் காலால் இடறி வருத்தியிருக்கின்றாய். அவ்வாறிருந்தும் நான் உன்னைத் தீண்டியதுமுண்டோ? காலன் கட்டளையிட்ட வண்ணமே யான் இக்குமாரனைக்கடித்தேன். விதிவசத்தால் அவன் ஆவி அகன்றது. என்னிஷ்டப்படி யான் தீண்டியிருப்பேனாயின், என்னைக்கொன்று விடுவது ஏற்கும். எய்தவனிருக்க அம்பை நோவது போல், என்னை ஏவிக்கடிக்கச்செய்தவனை மறந்து, என் மீது சினங்கொள்வது தகாத கார்யம். இவ்வளவெல்லாம் பேசிய நீ, நியாயத்தைக் கண்டறியாது போயினையே!

அதற்கு நான் மெத்தவும் வருந்துகின்றேன்" என்று பதிலளித்து.

வேடன்:—"மாநாகமே! காலனையும் சூலனையும் யார் அறிவர்? பாலனைப்பாம்பு தீண்டியது. ஆகவே, அவன் மாண்டான், என்றே உலகம் கூறும். ஆதலின் அப்பழிக்குப் பாத்திரம் நீயே! நீ அப்படுபழியினின்று தப்பித்துக்கொள்ளமுயல்கின்றாய்! அது முடியாது. இது நிற்க, ஐயோ! இவ்வுத்தமி படும்பாடு ஒருவராலும் சகிக்கக்கூடவில்லையே! இதோ பார் இங்குள்ளோர் யாவரும் பாலன் இறந்து போனதைப்பற்றி அழுத கண்ணும் சிந்தியமூக்குமாய் அலறுகின்றனர். மெய்க்கு மெய்யே பேசவேண்டும், பொய்க்குப் பொய்யே பேச வேண்டும். கோளுக்குக் கோளே கூறவேண்டும். அங்ஙனமே உன்னைப் பழிக்குப்பழி வாங்க வேண்டுமென்பதை மறுக்க யாராலாகும்? நஞ்சையுடைய வஞ்சகப் பாம்பே! நீ என் கையிற் சிக்கிக்கொண்டாய். என்ன சொன்னாலும் உன் உயிர் இரவல். இதை நீ கண்டிப்பாய் அறிந்துகொள்."

இம்மாதிரி வேடனும் அரவமும் வெகு நேரம் வாதாடுவதை யறிந்த காலதூதர் அவ்விடம் தோன்றி,

"மூவிலகத்தினுமுள்ள ஜீவராசிகளின் உயிரைப் போக்கும் அதிகாரத்தைக் கொண்டுளான் காலன். அவனே எங்களை வில்லைப்போலவேகொண்டு அம்பைத் தொடுப்பது போல் ஏவுவான். அவ்வாறே அவன் குறிவைத்த உயிரை நாங்கள் கவர்ந்து செல்வது கடமை. மேலும், நாங்கள் ஒருவனிடம் குற்றேவல் புரியும் வேலையாட்கள். ஆகவே, எங்கள்மீது கோபங்கொள்

வதும் எங்களை நிந்தித்துப் பேசுவதும், அறிவீனம். மேலும் இப்பாம்பை வதைக்கப் பார்ப்பதும், பாவமாகும். அதனால், உங்களுக்கு என்ன பலன் கைகூடும்? பாவத்தைப் போக்கிக்கொள்ள வழிதேடவேண்டுமேயல்லது, மேன்மேலும் புற்றீசல்போல் வளரவிடுவது அறிவுடையோர் செய்யக்கூடியதல்ல. வீணில் இந்நாகத்தை அச்சுறுத்தி நாசப்படுத்தாதே!" என்றியம்பினர்.

காலதூதர் சொல்லியிதைக் கேட்ட வில் வேடன் விளம்புவான் :—

"உங்கள் வாய்மொழியிலிருந்தே, நீங்கள் கூறுவது சரியன்றென மெய்ப்பிக்கின்றேன் கேளுங்கள். எய்தவனிருக்க அம்பை நோவதில் பயன் யாதென வுரைத்தீர். ஒருவன் மற்றவன்மீது அம்பு தொடுப்பானுயின் முதன்முதல் அந்த அம்பை அறுத்துத்தள்ள வேண்டாமா? பின்புதானே எய்தவனைத் தாக்கவேண்டும். அங்ஙனமிருக்க, அம்புபோல வந்த பாம்பை முதலில் கொல்வது முற்றிலும் பொருந்தும். நான்மறையாளரின் நற்புதல்வனைப் பாம்பு தீண்டியது மெய்யன்றோ! ஆதலின் நான் அதனைக் கொல்லத் துணிந்தேன்."

இவ்வண்ணம் வனசரன் நவின்றதும் அங்கு வந்து தோன்றிய

காலன் :—ஒருவரை மற்றவர் ஏன் கொல்ல வேண்டும்! எத்தொழிலும் ஊழ்வினையின்படி நடந்தே தீரும். மறையோர் மைந்தன் மாண்டது விதியின் பயன், நன்மைவரினும் தீமை நேரினும், இரண்டையும் ஒரு தன்மையாக நோக்குவதே மேன்மக்களின்

இயற்கை! தமக்கு நலம் வருங்காலத்தில் அதனைத்தடுக்காது மேன்மேலும் அதனை யனுபவிக்க வழி தேடுவதும், தீங்குண்டாயின் அதனைப் போக்க அரும்பாடு படுவதும், கீழோரின் குணம். எக்காலத்தும் வருவது வந்தே தீரும். நமது செயலில் ஒன்றுமில்லை. நலத்தை யளிப்பதும் தீமையைப் புணர்ப்பதும் நல்வினை தீவினைகளின் பயன். இதனை அறியாதிருப்போரை முழுமூடரென்றே சொல்லவேண்டும். அவரவர் செய்த வினையின் வண்ணம் பயனை யூட்டுவிப்பது எங்களுடைய தொழில். அதனால் எங்கள்மீது குறைகூறுதல் தவறு. பாம்பு என்ன செய்யும்? அதைக்கொல்வதற்கு நியாயமேது? ஒருவன் புரியும் வினையால் இருவினையின் பயனும் அவனைச்சாரும். அதனை யவன் அனுபவியாமல் தீராது. யுகாந்தகாலமாயினும் அவனவன் செய்த வினை அவனவனைச் சென்றடைந்து பயனை யூட்டுவிக்கும். அப்பனே! இதை நீ நன்குணர்ந்துகொள்."

காலன் கூறிய கட்டுரையைக் கேட்ட கௌதமி சொல்வாள் :—

"நீங்கள் வாது புரிவதனால் யாது பலன்? இறந்துபோன என் குமரன் பிழைக்கப் போவதில்லை. மடிந்த மைந்தனை மடிமீதிருத்திக்கொண்டு மனம் புண்ணுவதைப் பார்க்கினும், சீக்கிரமே எரி மூட்டிக் கொளுத்திவிட்டு முழுகி வருவதே மேலானது. வேடன் விளம்பியதும் காலன் கூறியதும் உண்மை.

"நன்றாகயோசியாத மாந்தர் வேடனைப்போல் சொல்வது வழக்கம். கற்றறிந்த பெரியோர் காலனைப்போல் செப்புவர். பாம்பைக்கொல்வது வீணே! விதி வந்து

சூழ்ந்து கொண்டது, என் கண்மணியும் கண் மூடினன்! தேவரும் விதியைவெல்ல முடியாதென்றால், பந்தமுள்ள மானிடரால் எவ்வாறாகும்?

"சாதலும் பிறத்தலும் வினைப்பயன். நோதலும்பரிதலும் நுண்ணுணர்வின்மை! இன்பம் வந்துற்றகாலையில் களிப்பதும், துன்பம் வந்துற்ற காலையில் துயருற்று அழிவதும், மாந்தர் இயற்கை. இன்பம் துன்பம் இரண்டையும் ஒன்றாய்ப் பாவிப்பர் பெரியோர்.

"இப்புவியிலுள்ள மாந்தர் பலரும் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி யெண்ணி ஏங்கிநின்று, நெஞ்சம் புண்ணாவர். நாம் எண்ணியபடியே காரியங்கள் கைகூடா. நாம் வேண்டினும், வேண்டாவிடினும் வினையின் பயன் நம்மை வந்தடையும்."

"இவைகளை யெல்லாம் யோசித்துப் பார்க்குங்கால் நன்மையையும் தீமையையும் நாமே தேடிக்கொள்கின்றோம், முற்பிறவியில் நல்வினை புரிந்திருப்பின், மறுபிறப்பில் சுகமே வாழலாம். தீவினை செய்திருப்பின தீமையை அனுபவிக்க வேண்டும். ஆகவே, நன்மை தீமை ஆகிய இரண்டையும் நமக்கு நாமே தேடிக்கொள்ளும்பொழுது, பிறரை நோவதில் பயனென்ன?"

"அழுதென்ன! தொக்தென்ன? வீண் மனவருத்தமின்றி வேறொன்றும் கிட்டாது! வருந்தி யழைத்தாலும் வாராத வாரா, பொருந்துவன போமினென்றாற் போகா! இருந்தேங்கி—நெஞ்சம் புண்ணாக நெடுந்தூரம் தாம் நினைத்து, துஞ்சாமல், நற்கருமங்களைச் செய்து நற்பதவி பெற அனைவரும் விரும்புவதே சாலச் சிறந்தது."

"நன்மைவரின் ஆ! நாமன்றோ நன்மையைத் தேடிக் கொண்டு விட்டோம் என்று மகிழாமலும், தீமையு றின் அப்பாவி யல்லவோ தீமைபுரிந்தான் என்று பிறரை நிந்தியாமலும் இருந்து, எக்காலத்தும் நல்வினை யே புரியவேண்டுமென நம் முன்னோர்களும் வேத சாஸ்திரங்களும் முறையிடுவதால், யாவரும் இந்நீதி யைக் கடைப்பிடித்து நலம்பெறுவார்களாக."

இவ்வாறு அம்மாதரசி பேசியதும், அவளது புத்தி விசாலத்தைக்கண்டு மெச்சிய தேவர் மிகுந்த பிரியத் தோடு அத்தம்பதிகளையும் குமாரனையும் மேலுலகத் திற்கு அழைத்துச் சென்றனர்.

காட்டிலுள்ள விலங்குகளை வதைத்துவந்த வேட னும் "எல்லாம் விதியின் பயன். அதனைத் தேடிக் கொள்பவன் மனிதனே! ஆதலின் பிறரை நொந்து கொள்ளல் ஆகாது. ஐயோ! முற்சன்மத்தில் நாம் நல் வினை செய்யாது போயினமே யென நம்மை நாமே நொந்துகொள்ளவேண்டும்" என்ற ஞானமுற்று அன்று முதல் நற்கருமங்களையே செய்து, இன்பமுடன் வாழ்ந்து வந்து, உயர்பதம் பெற்றான்.

சாவித்திரி சரிதம்

கற்பின் மகிமையால் விதியை வென்ற மேன்மை

நம் பரதகண்டத்தின் வடபாகத்திலுள்ள மந்திர தேசத்தை முன்னொரு காலத்தில் அசுவபதி என்னும் மன்னவன் மனுநெறி தவறாது ஆண்டுவந்தான். ஆகலின் மாதந்தோறும் மும்மாரி பொழிய நாடெங்கும் செழுப்புற்றிருந்தது. பிரஜைகளும் தவறாது தானமுந் தவமுமியற்றி இன்பமுடன் வாழ்ந்து வந்தனர்.

ஆயினும் அவ்வரசனும் அவன் மனைவி மாளவி யென்பாளும் மனக் களிப்பில்லாது துயருடனிருந்தனர், புவியாளும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள மகனில்லாதிருந்த குறையே அவர்களுடைய துன்பத்திற்குக் காரணம். இவ்வாறிருக்கும் நாளில் ஒருநாள் நாரத முனிவர் அரசவையை யடைந்தனர்.

முனிவரை உள்ளன்புடன் உபசரித்த பின்னர், தன் குறையை அரசன் முறையிட்டான். அதைக்கேட்ட நாரதர் "அரசகேசரி! சாவித்திரியைக் (சரஸ்வதி) குறித்து நோன்பொன்று செய்யின், மைந்தனில்லாக் குறை நீங்கும்" என்று சொல்லி அந் நோன்பை இயற்றும் சாதனங்களையும் உபதேசித்தார்.

அவ்வாறே அரசனும் தேவியும் உறுதியாய் விரதமியற்றி வர நாளடைவில் மாளவி கருவுற்றுப் பெண்

மகவொன்றை ஈன்றனள். சாவித்திரியின் அருளால் தோன்றினமையின், அக்குழந்தைக்கும் சாவித்திரியென்றே பெயரிட்டு, மிகவும் ஆர்வமுடன் வளர்த்து வந்தனர்.

பின்பு, மன்னவன் தன் பெண்ணுக்குத் தக்க வயது வந்தவுடன் வித்தை பயிற்றுவித்தான். அப்புதல்வி நாமகளின் நல்லருளால் கல்வியில் தேர்ச்சிபெற்று விளங்கி வந்தாள். மேலும் குணத்திலும் சீலத்திலும் தனக்கு நிகர் ஒருவருமில்லையென்று பலரும் கொண்டாடும்படி அந்நங்கை நடந்துவந்தனள்.

காலக்கிரமத்தில் அக்குமரி மங்கைப் பருவம் அடைந்து, அழகில் அரம்பையாதி கன்னிகைகளினும் சிறந்து விளங்கினள். தன் செல்வப் புதல்விக்கு மங்கைப் பருவம் வாய்ந்ததைக்கண்ட பார்த்திபன், தக்க வரனை நாடிக் கொண்டிருக்கையில், நாரத முனிவர் அங்கு வந்தனர். கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததுபோல், அம்மாதவத்தினரைக் கண்ட அரசன் களிப்பெய்தி, அவரது பாதாரவிந்தங்களில் வீழ்ந்து வணங்கி, சாவித்திரியின் மணவிஷயத்தைக் குறித்து அவர் கருத்தை அறிய விரும்பினன். அவரது வரவை அறிந்த சாவித்திரியும் அவரையடைந்து அடி பணிந்து நின்றாள்.

உடனே நாரதர் அப்பெண்ணை ஆசீர்வதித்து "என் கண்ணே! உன் மணத்தைக் குறித்து அரசனும் அரசியும் ஆலோசிக்கின்றனர். நீ விரும்பும் ஆடவர் எவரேனும் உண்டோ?" என வினவினர்.

உடனே சாவித்திரி நாணத்தால் சிறிது பொழுது பேசாது தலை குனிந்திருந்தாளாயினும், பெரியோர்

கேட்ட கேள்விக்குப் பதிலளிக்க வேண்டியது அவசிய மெனக் கருதி,

"முனிபுங்கவ! முன்னொருநாள், நானும் என் தோழியரும் உத்தியானவனஞ்சென்று மலர்கொய்து வருகையில், அழகே வடிவெடுத்ததுபோன்ற ஓர் அரசிளங்குமரன் குதிரைமீதேறிச் சென்றான். அவனைக் கண்டதும் என்மனம் அவனிடம் குடிகொண்டுவிட்டது. அவன்யாரென என்தோழிமாரை வினவியதில், சாலுவ தேசத்தரசனது புதல்வனென அறிந்துகொண்டேன்," என்று மெல்ல உரைத்தனள்.

அதுகேட்ட அரசன் மனங்கலங்கி, "குழந்தாய்! அவ்வரசகுமரனது தற்கால நிலைமையை நீ அறியாய் போலும்! அவன் தந்தையோ தன் நாட்டைப் பகைவரிடம் பறிகொடுத்துவிட்டு, அரசியுடன் வனம்புகுந்து, ஒரு சிறிய குடிசையில் வசித்து வருகின்றான். பொல்லாக் காலத்தில் துன்பமெல்லாம் ஒருங்கே வருமென்பதுபோல, அரசனும் அரசியும் நாட்டை யிழந்ததுமன்றி, கண்ணையுமிழந்து விட்டனர். ஆதலின், அவர்கள் மைந்தனாகிய சத்தியவான், அவர்களுக்குப் பணிவிடை புரிந்து, காய் கனி கிழங்கு முதலியன தேடிக்கொணர்ந்து, கொடுத்துவருகின்றான். அவன் நற்குணங்கள் யாவும் நிரம்பப் பெற்றுளான். ஆயினும், அவனை நீ கணவனாக வரித்துக்கொள்ளின், என்ன சுகமடைவாய்?" என்று வருந்தி வினவினன்.

உடனே சாவித்திரி சொல்வாள் :—

"தந்தையே! தாங்களுரைப்பது மெய்யாயினும், அவரையே பதியாகக் கொள்ள முன்பே நிச்சயித்து விட்

டேன். ஆதலின், இப்பொழுது வேறொருவரை மண ந்துகொள்ள விரும்பின், அது தர்ம விரோதமாகும். குலமகளிர்க்குக் கணவன் ஏழையாயிருந்தென்? அரசா யிருந்தென்? இரண்டு மொன்றே!"

பின்னர், நாரத முனிவர் வேந்தனை நோக்கி, "மன் னர் மன்ன! இதற்குமுன் பல பிறவிகளிலும் சத்திய வான், சாவித்திரி ஆகிய இருவரும் தம்பதிகளாய் இருந்து வந்தனர். இப்பிறவியிலும் அப்படியே தான் முடிவாகும். தடுத்துப் பயனில்லை" எனலும்,

மணமகனது ஜீவியதிசை எவ்வாறுளதென அரசன் கேட்கவே, நாரதர் "ராஜதிலக! உண்மையை உரைப் பின் மனம் புண்ணுதல் கூடாது. வருவது வந்தே தீரும், சத்தியவானது ஆயுள் மேலாண்டில் முடிவடை யலாம். ஆனாலும் உன் புதல்வியின் மாங்கலிய பலத் தால் ஒருவேளை அம் மணமகன் நீடித்து வாழினும் வாழலாம்" என்றியம்பினர்.

மன்னவனோ முன்னிலும் பன்மடங்கு மனவருத் தங்கொண்டு, தன்னருமை மகளைப் பார்த்து, "என் கண்மணி! முனிவர் கூறியதைச் சற்றே யோசித்துப் பார். இப்பொழுதுகூட சத்தியவானையே கேள்வனு கக்கொள்ள வேண்டுமென்று பிடிவாதஞ் செய்வாயோ? நெடுநாள் பிள்ளையில்லாக் குறையினால் ஏங்கி யிருந்து, முடிவில் நாமகளின் நல்லருளால் உன்னைப் பெற்றெடு த்து, அற்ப ஆயுளுடையானுக்குக் கொடுத்துவிட எவ் வாறு மனஞ்சகிப்பேன்?" என்று சொல்லிப் புலம்பி னான்.

உடனே சாவித்திரி தன் பெற்றோரின் பாதங்களில்

வீழ்ந்து வணங்கி, "விதியைவெல்ல யாவராலாகும்? ஒருவராலு மாகாது! நானோ அவரையே கணவராகக் கொள்ளக்கருதி நிச்சயித்து விட்டதால், இனி என்ன சொல்லியும் பயனில்லை. எனக்காகத் தாங்கள் கவலைப்படவேண்டாம். இக்கணமே என்னை அழைத்துச் சென்று அவருக்கே மண முடிப்பிக்கவேண்டும்" என்று மன்றாடினாள்.

தன் புதல்விக்கு உதித்திருக்கும் மனவுறுதியைக் கண்டு, இனி, காலந்தாழ்ப்பதில் பயனில்லையென்று அரசன்தீர்மானித்து, வேண்டியவரிசைகளுடன்சாலுவ தேசாதிபதி தங்கியிருக்கும் காட்டை யடைந்தான். பின்பு, இருதேசத்தரசர்களும் சிறிதுநேரம் உரையாடி யிருக்கையில், அசுவபதியின் விருப்பத்தையறிந்த சாலுவ தேசாதிபதி சொல்லாணயினன் :—

"அரசே! நாங்களோ தற்காலம் வறுமைப் பிணியால்வாடிக் கானகத்தே வாழ்ந்து வருகின்றோம். உமது பெண்ணோ கஷ்டமென்பதைக்கனவிலும் அறியாதவள். அக்குமரி எங்களுக்கு மருமகளாயின், அனவரதமும் எங்களுடன் கஷ்டத்தை அனுபவிக்க நேரிடுமே யொழிய, அரசாங்க வைபவத்துடன் வாழ மார்க்கமில்லை. இன்பமாய் வாழ்ந்து வரும் உமது அருமைப் புதல்வியைத் துயரத்திற்கு ஆளாக்க நாங்கள் ஒருப்படுவதெங்ஙனம்?"

சாலுவ பூபதி இவ்வாறு விளம்பியும், சாவித்திரியின் மனவுறுதியை அசுவபதி வெளிப்படுத்திய உடனே அங்குள்ளார் அனைவரும் வியப்பும் ஆனந்தமும் எய்தினர். பல சொல்லிப் பயனென்ன? முடிவில், சாவித்-

திரி கோரிய வண்ணமே, சத்தியவானுக்கு அவளை விவாகஞ் செய்துகொடுத்துவிட்டுப் பின்னர், கன்றை விட்டுப்பிரியும் தாய்ப் பசுவைப்போல், அசுவபதியும் அரசியும் அடங்காத் துயர்கொண்டு தங்கள் நாடு நோக்கிச் சென்றனர்.

சத்தியவானுக்கும் சாவித்திரிக்கும் விவாஹம் நிறை வேறியவுடனே, சாலுவதேச மன்னனையும் அவனது பத்தினியையும் இன்னும் அவர்களைச் சார்ந்தோரையும் அசுவபதி தன் நாட்டிற் கழைத்தும் அவர்கள் வர ஒப்பவில்லை. ஆதலினால் அசுவபதி அவர்களைக் காட்டி லேயே விட்டுவிட்டுப் போகும்படி நேர்ந்தது.

நாள்தோறும் தன் தாய் தந்தையர்க்கு உணவு சேக ரித்துவர சத்தியவான் வெளியே போய் விடுவான். சாவித்திரியோ அக்குடிசையிலேயே தங்கியிருந்து, தன் மாமன் மாமியர் இருவரையும் தன் பெற்றோரைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு உபசரித்து, அவர்களுக் குப் பணிவிடைகள் புரிவதில் எள்ளளவும் சலித்தா ளில்லை. ஈதன்றோ கற்புடைய மங்கையரின் மாண்பு? எல்லாரும் பெண், சாவித்திரியும் பெண்ணா?

சாவித்திரியை மருமகளாக அடைந்த பின்னர், அவள் செய்துவரும் உபசரிப்புக்களால், சாலுவ தேச அரசனும் அரசியும் தாங்கள் கண்ணிழந்து தவிப்பதை யும் மறந்தவர்களாகி, "இந் நற்குல மங்கையை மருமக ளாக அடைய நாம் எவ்வளவு புண்ணியம்செய்திருக்க வேண்டும்? சத்தியவானே பாக்கியவான். ஆதலின், அவன் சாவித்திரியை மனைவியாகப் பெற்றான்'' என்று எப்பொழுதும் அகமகிழ்ந்தவர்களாய், சாவித்திரியைக்

கனவிலும் நனவிலும் நினைத்து, அல்லும் பகலும் அவனை ஆசீர்வதித்து வந்தார்கள்.

இவ்வாறு ஒரு வருஷகாலம் கழியவே, நாரதமா முனிவர் கூறியிருந்த நாள் கிட்டி விட்டது. வெள்ளம் வருவதற்கு முன் அணைகோலி வைப்பதுபோல், சாவித்திரி தன் மாமனர் மாமியாரிடம் உத்தரவு பெற்று, கௌரி விரதத்தை மூன்று நாள் அனுஷ்டித்தனள். விரதம் முடிந்த தினமாகிய நான்காவது நாட் பகல் தான் சத்தியவானது உயிர் ஓடும் காலமாக இருந்தது. ஆதலின், மூன்று தினங்கள் சாவித்திரி சிறிதேனும் அன்னபான மில்லாது விரதம் பூண்டிருந்ததனுலும், தன் கணவனது ஆவி அன்று நீங்கிவிடப் போவதாக முன்னமேயே அறிந்திருந்ததனுலும், கண்ணும் கருத்தும் உயிரும் மெய்யும் களைத்துப்போ யிருப்பினும், அன்று அதிகாலையிலேயே எழுந்து, நீராடி, பெரியவர் இருவருக்கும் செய்யவேண்டிய பணிவிடைகளைப் புரிந்ததும், தன் கணவன் வெளியே புறப்பட்டுப் போவதையறிந்து, தன்னையும் கூட்டிப்போகும்படி புருஷனை வேண்டினள்.

உடனே சத்தியவான் சொல்லுவான் :—

"என் கண்ணே! காட்டில் கொடிய விலங்குகள் திரியும். முள்ளடர்ந்த செடிகளும் கொடிகளும் வழியே குறுக்கிடும். மலைப்பாம்புகள் இங்குமங்கும் புரண்டு கொண்டிருக்கும். இவைகளைக் காணின் நீ அச்சமுறுவாய், ஆதலின் நீ வரவேண்டாம்"

இவ்வார்த்தைகளைக் கேட்ட சாவித்திரி "என் தலைவ! தங்கள் சொல்லைமீறி நான் நடக்கமாட்டேன். இன்று ஒரு நாள் மாத்திரம் நான் தங்களுடன் வருவேன்

அவசியம் என்னை அழைத்துச் செல்லவேண்டும்'' என்று கண்களில் நீர் ததும்ப வணக்கமுடன் வேண்டினள். ஆகவே, தாய் தந்தையரின் உத்தரவு பெற்றால், உடன்வரத் தடையில்லையென்று சத்தியவான் சொல்லியதும், அவ்வாறே சாவித்திரி தன் மாமனார் மாமியாரிடஞ்சென்று, மிகவும் விநயமாய் வேண்ட, அவர்கள் தங்கள் குமரனைக்கூவி "அப்பா! குழந்தை சாவித்திரி மூன்று தினங்களாக ஆகாரமில்லாது நோன்பினால், களைத்துப்போயிருக்கின்றாள். அல்லாமலும் காட்டில் திரியும் கொடிய பிராணிகளைக்கண்டு பயப்படுவாள். ஆதலின், நீ அவளை விட்டுப்பிரியாது ஜாக்கிரதையாக இருந்து சடுதியில் வந்துவிடு" என்றியம்பி, சாவித்திரியையும் ஆசீர்வதித்து, விடைகொடுத்தனுப்பினர்.

பின்னர், மேன்மை வாய்ந்த அத்தம்பதிகள் கானகம் நோக்கி நடக்கவே, அவ்வனத்தின் சிறப்பை சத்தியவான் காட்டிக்கொண்டுபோகையில், உச்சிப்பொழுதாயிற்று. அப்போது அவன் தனதருமை மனைவியை நோக்கி, "என் செல்வமே! என் கண்கள் யாதுகாரணத்தினாலோ பஞ்சடைகின்றன. புத்தியோ மயங்குகின்றது; கைகால்கள் சோர்வடைகின்றன" என்றுகூறி, அருகேயிருந்த ஒரு மரத்தடியில் உட்கார்ந்து களைதீர யத்தனிக்கையில், சாவித்திரி தன் கணவனது தலையைத் தன் தொடையின்மீது வைத்துக்கொள்ள, அவன் மெல்லப் படுத்தயர்ந்தான்.

அச்சமயம் ஒரு மஹாபுருஷன் தோன்றி, தானேறி வந்த வாகனத்தினின்று இறங்கி, சத்தியவான்மீது கயிறொன்றை வீசி, அதுவழியே அவனுயிரைக் கொள்ளை

கொண்டு, தென்திசையைநோக்கி, விரைவாய்ச் செல்ல லுற்றான். மாந்தர்களது உயிரைக் கவர்ந்துபோகும் மறலியே அவன் என்பதை நாம் சொல்லவேண்டுமோ?

இச்சம்பவம் நேரிடுமென்று எதிர்பார்த்தே சாவித்திரி தன் கணவனுடன் அன்று காடடைந்தாளென்பது வெளிப்படை. தன் பதியின் உயிரை யமன் கவர்ந்து செல்வதைக்கண்ட அக்காரிகை அடங்காத்துயர் கொண்டு, நெஞ்சம் பதைத்து, மெய்சோர்ந்து, ஆவிகலங்கினளாயினும், உடனே அருகேகிடந்த மண்ணைத் திரட்டித் தன் கணவனுக்குத் தலையணையாக வைத்துவிட்டு, அக்காலன் பின்னே கடுகி நடந்தனள்.

யமன் :—"பெண்ணே! நீ யார்? என்பின்வரக் காரணமென்ன?"

சாவித்திரி :—"அன்புள்ள ஐய! என்னைத் தாங்கள் அறியீரோ? யாருடைய ஆவியைத் தாங்கள் இக்காலை கவர்ந்து ஏகுகின்றீர்களோ அவருடைய மனைவியே யான்," என்று விம்மி விம்மி யழுதனள்.

யமன் :—"அம்மணி! ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலும் மாண்டார் திரும்பிவருவாரோ? என்னைப் பின்தொடர்ந்து வருவதால் எள்ளளவும் பயனில்லை. ஏன் வீண் சிரமம்? வந்தவழியை நோக்கிச்செல்வதே உத்தமம். பிறந்தோர் இறப்பதும், இறந்தோர் பிறப்பதும், இயற்கையே! கருவில் ஜீவன் புகும்பொழுதே, ஆவி அளவிடப்பட்டுள்ளது. அது கழிந்ததும், ஆவியைக் கொண்டோடுதல் என் கடமை. பாவிகளின் உயிரைக்கவர என் தூதர் செல்வர். புண்ணியவான்களின் ஆவியைக்கவர யானே வருவேன்."

சாவித்திரி :—" தேவே ! வந்தனம் ! என்மீது கருணை கூர்ந்து, என் கேள்வனது ஆவியைத் தந்தருளவேண்டும் ! பெண்ணென்றால் பேயுமிரங்குமே ! ஆதலின் என்னை ஏமாறிப் போகச்செய்தல் அழகன்று."

யமன் :—'பேதைமை என்பது மாதர்க் கணிகலம்' என்னும் வாக்கியத்தின் உண்மையை உன்னிடமே அறிந்தேன். மாண்டார் மீண்டும் பிழைப்பரோ ? இதனை அறியாயோ நீ ! அறிந்தும், அறியாததுபோல வேண்டுவது ஏனோ ? இதைத்தவிர வேறு எதை விரும்பினும், அங்ஙனமே செய்வது நிச்சயம்."

சாவித்திரி :—" கருணை வள்ளலே ! கண்ணிழந்து தவிக்கும் என் மாமன் மாமியர்க்கு எக்காலமும் தொண்டுபுரிந்துவந்தனர் என் கேள்வர். அவருடைய ஆயுளை அபகரித்துச் செல்லுகின்றீர். இனி அப்பெரியோரை யார் போற்றுவர் ? ஆதலின் அவ்விருவரும் கண்ணொளி பெறும்படி வரமருள்க."

யமன் :—" மாதரசே ! அங்ஙனே யாகுக ! உன் மனோரதம் நிறைவேறியது, இனி என்னைப் பின்பற்றி வருதல் தகுதியன்று. விதியை வெல்ல வேதனும் ஆகாது ! ஆதலின் வருந்தாது வீடுநோக்கிச் செல்வாய் கண்மணி !" என்று கூறிப்போயினன்.

சாவித்திரி :—(பின் தொடர்ந்து) " அருள் புரியும் ஐயனே ! நான் என்செய்வேன் ? ஏழைமீதிரங்கி என் வாழ்வை வயளிப்பீராக ! இல்லையேல், நான் உயிருடனிருப்பதைவிட இறந்துவிடுவதே சாலச் சிறந்ததாகும். கணவனையிழந்து காசினியில் தவிக்கும்படி செய்வது அறமாகுமோ ?"

இவ்வாறியம்பி, சாவித்திரி விடாது, தன்னைத் தொடர்ந்து வருவதை யறிந்த தென்றிசைத் தலைவன் வெகுவிரைவாய் ஏகியும், சாவித்திரி சலியாது அவனைப் பின்பற்றிச்சென்று,

"ஐய! கணவனை யிழந்து வாழ, நான் உடன்படேன். ஆகலின், என்னையும் தாங்கள் அழைத்துச் செல்லுங்கள். கேள்வனைவிட வேறுகதி யாருண்டு? எக்காலத்தும் கணவனுடன் கூடியிருப்பதன்றோ கற்புடைய மங்கையரின் கடமை. ஆகவே, அவர் ஒருபுறமும் நான் மற்றொரு புறமுமாக இருக்க, நான் ஒருக்காலும் சம்மதியேன். என்னைத் தாங்கள் கூட்டிச் சென்று விடுங்கள்" என்று கல்லுமுருகும்படி கதறினாள்.

யமன் :—" அவரவர்க்கு ஆயுள் முடியும்பொழுதே நான் என் கட்டளையைச் செலுத்துவேன். உன் ஆயுளோ இன்னும் சிலகாலம் உலகில் நீடித்திருக்க வேண்டும். அவ்வாறிருக்க உன்னையும் அழைத்துச் செல்வது என்னாலாகாத காரியம். உன் வேண்டுகோளுக் கிணங்கினால், தர்மம் என்னைத் தடுத்துவிடும். இது தவிர, மற்றெதை வேண்டினும், அவ்வாறே நிச்சயமாய் அளிப்பேன்."

சாவித்திரி :—" அறக்கடவுளே, நாட்டத்தை யிழந்து வாடியிருந்த என் மாமன் மாமியர் மறுபடியும் கண்ணொளி பெறும்படி கருணைகொண்டீர், அவர்கள் நாட்டை யிழந்து காட்டில் வசித்து வருவதும் தாங்கள் அறிந்ததே! ஆதலின், அவர்கள் மீண்டும் நாட்டைக்

கைக்கொண்டு இன்பமுடன் வாழும் வண்ணம் அருள் புரியவேண்டும்.'

யமன் :—"பெண்ணே! நீ விரும்பியபடி இரண்டு வரங்களும் அளித்து விட்டேன். இனி என்னைத் தொடர்ந்து வருதல் ஒண்ணாது" என்று கூறிமறைந்து போனான். ஆயினுமென்ன! கற்புடைய மங்கையர்க்கு எக்காரியந்தான் கை கூடாது? யமன் மறைந்து போனானாயினும், அவன் போகுமிடத்தை நம் கற்பரசி அறிந்துகொண்டவுடனே, அத்தேவனை விடாது தொடர்ந்து போயினள் : இதனைக்கண்ட

யமன் :—"ஆ! மங்கையர் திலகமே! என் மனத்தைப் புண்படுத்துவது சரியோ? அழுதாற் பயனென்ன! நொந்தாற் பயனென்ன! ஆவதொன்றுமில்லை! மெய்வருத்தமொன்றே மிகுதியாகும்."

சாவித்திரி :—"தேவர் பெரும! கோபங் கொள்ளாதீர். தாங்கள் என்மீது சினங்கொள்வது தகுமோ? காதலனுடன் உயிர் நீத்திடும் கற்பினள் விண்ணாட்டில் கோடிகாலம் கொழுநனோடு இன்புறுவர் என்று நூல்கள் கூறும். பூவுலகிலோ அல்லது பொன்னுலகிலோ எவ்வுலகிலாயினும் சரி, என் கணவனைப் பிரிந்து ஒருகணமும் நான் உயிர்தரியேன். ஆதலின், என்னுயிரையும் தாங்கள் கொள்ளை கொள்ளவேண்டும். இதுவே நான் விரும்புவது!"

யமன் :—"மங்கையர் திலகமே! உன் உயிரைக் கொள்ளமுடியாதென்று முன்பே கூறினேன்! உன் கற்பு நிலைமையைக் கண்டு களியாதார் யாவருளர்? நானும் உன் கற்புறுதியைக் கண்டு மெச்சினேன். நீ வேறு

எதை விரும்பினும், அவ்வாறே ஆகும்படி வரங்கொடுப்பேன். இது நிச்சயம், பெண்ணே! என்ன விருப்பம்!"

சாவித்திரி :—"புதல்வரில்லா வாழ்க்கை வீணே? என்பெற்றோர் புத்திரபாக்யமில்லாது வருத்த முறுகின்றனர். ஆதலின், அவர்கள் அப்பேறு பெறுமாறு கடாட்சிக்க வேண்டுகின்றேன்."

யமன் :—அவ்விதமே உன் தாய் தந்தையர் நூறு புதல்வர்களையடைந்து மகிழ்ந்திருப்பாராக! ஆனால் நீ உன் உயிருடன் சென்று அவர்களுடன் வாழ்ந்து வர வேண்டும்."

கணவனையிழந்து தவிக்கும் பொழுது, வானாட்டுச் செல்வமும் பெரிதாகக் காணப்படாதாதலால், தன் அன்னையும் பிதாவும் புதல்வர்களைப் பெற்று, பெரு மகிழ்ச்சியுடன் வாழும்படி மறலி அருள் கூர்ந்தும், சத்தியவானையிழந்த பின்னர், சாவித்திரி உலகில் வாழ்ந்திருக்க எவ்வாறு மனமொப்பக்கூடும்? ஆதலின், அக்கடவுளைப் பின்பற்றி மீண்டும் சென்றனள்.

யமன் :—"பெண்மணியே! நிழலைப்போல் என்னைத் தொடர்ந்து வருதல் ஏற்குமோ? நீ வேண்டிய வண்ணமே மூன்று வரங்கள் அளித்தேன். அங்ஙனமிருக்க மறுபடியும் என்னைத் தொடர்ந்து வருகின்றாயே! சாதலும் பிறத்தலும் வினைப்பயன். அப்பயனை விலக்குவதற்கு வேதத்திலும் மார்க்கம் கூறப்படவில்லையே! அவ்வாறிருக்க, அதனைப் போக்குவதென்றால் யாரால் ஆகும்? பெண்ணே! பேதுறாது திரும்பிச்செல்! உன் கணவன் ஆவியை விட்டுவிட என்னால் முடியாது. உன்

னைக்கொண்டுபோக எனக்கு முறையுமில்லை, விதியுமில்லை."

சாவித்திரி :—" அந்தோ! கணவனை யிழந்து பூமிக்குப் பாரமாக நான் ஏன் வாழவேண்டும்? தங்களுடைய கருணை வெள்ளத்தால், என் மாமன் மாமியர் கண்ணொளி பெற்றதுமன்றி, செங்கோலும் எய்தினர். என் பெற்றோரும் புத்திரப்பேறு பெற்றனர். இத்துணை தூரம் கருணைகூர்ந்த தாங்கள் என் கணவனது ஆவியையும் கொடுத்து, என்னை ஈடேற்றுங்கள். இல்லாதுபோனால், என் உயிரையும் கொண்டுபோய் விடுங்கள். தன் பதியிழந்து பாரியை பரமவேதனைப்படுவதைப் பார்க்க எவரும் மனமுருகிப்போவர். இனி யான் உயிர் வாழேனென்பது திண்ணம். என் நாதனைப் பறிகொடுத்துவிட்டு, நான் உயிர் வாழ்தல் ஒண்ணாது. அவரை விட்டு விடுங்கள். முடியாதாயின் நானும் உடன் வருவேன். என்னையும் அழைத்துச் செல்லுங்கள்."

சாவித்திரி தேவியின் கற்புறுதியையும், மனோதிடத்தையும், நெஞ்சுறுதியையும், கண்டு சகியாது மயங்கிய யமன் சிறிதுநேரம் சிந்தித்து உடனே தன்வாகனத்தை விட்டிறங்கி

" மாதர் திலகமே! ஆயுள் முடிந்த பாலனொருவன் முற்காலத்தில் பக்தியின் மகிமையால் விதியை வென்று உயிர்பெற்றான். அங்ஙனமே உன் கற்பின் மகத்துவத்தால், உன் கணவன் ஆவி அடைந்தான். இப்பேருலகில் உன்னைப்போன்ற பெண்மணிகளைக் காண்பரிது. உன்னைப்போன்ற கற்பரசியின் வேண்டுகோளை மறுத்துவிட மும்மூர்த்திகளாலும் முடியாதென்றால்,

என்ஞல் மறுப்பது எவ்வாருகும்? ஆதலின் சத்திய வான் உயிர்பெற்று உன்னுடன் நீடூழிகாலம் வாழ்வாஞக! நீயும் நெடுங்காலம் அஷ்ட ஐசுவரியங்கள்பெற்று மகிழ்ந்திருப்பாய்"

என்று ஆசிர்வதித்து உரைத்தனன்.

அக்கணமே சாவித்திரி அறக்கடவுளின் அடியிணைகளில் வீழ்ந்து, அன்புடன் வணங்கி,

"தேவே! தங்களது கருணைப்பெருக்கை நான் எவ்வாறு போற்றுவேன்? அறக்கடவுள் என்ருல் தங்களுக்கே தகும். நான் தங்களை அடுத்தடுத்து வேண்டிய காலத்தும், என்மீது சிறிதும் கோபங்கொள்ளாது என் மஞேரதத்தைப் பூர்த்திசெய்த நன்றியை நான் என்றும் மறவேன்"

என்று கூறித்துதித்தவளவில், மறலியும் சாவித்திரியை மனமார வாழ்த்திப்போயிஞன்.

உடனே சாவித்திரி விரைவாகச்சென்று, தன் புருஷன் படுத்திருந்த இடத்தையடைந்து, அவன் தலையைத் தூக்கி மடிமீதிருத்தியதும், தூங்கி விழித்தவன் போல் சத்தியவான் எழுந்திருந்தான். ஆகவே, சாவித்திரி பேரானந்த மடைந்தனள். பின்பு சத்தியவான் கூறுவான்:—

"பெண்ணே! மாலைப்பொழுது கிட்டிவிட்டது. நானே இதுவரையில் அறியாது தூங்கிவிட்டேன். ஆனல் யாரோ ஒரு புருஷன் என்னைப் பிடித்துக்கொண்டு போக, நீ கூடவந்து மீட்டு வந்தாய் என ஒரு கனவு கண்டேன்."

என்றதும், விவாகமாவதற்கு முன் நாரதர் கூறியது

முதல், யமனிடமிருந்து உயிரை மீட்டுக்கொண்டு வந்தது வரையில் அங்கங்கையர்க்கரசி வெளியிட்டாள்.

பின்னர், அப்பெண்மணியின் அன்பு மேம்பாட்டையும், தன் பெற்ரோர்க்குச் செய்து வந்த பணிவிடையின் நலத்தையும், கற்பின் உறுதியையும், சத்தியவான் பெரிதும் கொண்டாடி மகிழ்ந்தனன். உடனே அவ்விருவரும் பயணமாகித் தங்கள் இருப்பிடம்சேரவே, திடீரென்று கண்பெற்றுக் களித்து இன்னும் குழந்தைகள் வரவில்லையே எனக் கவலைகொண்டிருந்த அப்பெரியோர் இருவரும், கானகத்தில் நடந்த அற்புதச் செயல்களை சத்தியவான் கூறக்கேட்டு அகமகிழ்ந்தனர்.

இங்ஙனம் அவர்கள் பேரானந்தத்தில் மூழ்கியிருக்கையில் சாலுவ தேசத்துப் பிரதான மந்திரி சதுரங்க சேனையுடன் கானகமடைந்து, அந்நாள்வரையும் தலைநகர்க்கு அழைத்துச்சென்று, "முன்னிருந்த மன்னன் மாண்டுபோனதால், அவனுக்கு முன்னிருந்த இறைவனைத் தாங்கள் அடையாதுபோயின், ஆவியைத் துறந்துவிடுவதாகப் பிரஜைகள் அனைவரும் ஒருமனமாய் அறிவித்ததனால்" அவ்வாறே தங்களை யழைக்க வந்தேனென்று அறிவித்தான்.

தாயை யிழந்த கன்றுபோல் கதறிக் கொண்டிருந்த குடிஜனங்கள் தங்களது பழைய பார்த்திபன் வந்துவிட்டதை அறிந்தவுடனே பரமானந்தமடைந்து, அரசவையிற் குழுமினார்கள். பின்னர் அங்குக்கூடிய அமைச்சர்கள், பிரதானிகள், பிரஜைகள் முதலியோர் விரும்பிய வண்ணமே சத்தியவான் முடிதரித்து, செங்கோலை ஏற்றுக்கொண்டான். உடனே அசுவபதி மன்னனும்

அரசியும் இச்சந்தோஷச் செய்தியைத் தூதவரால் உணர்ந்துகொண்டு, சாலுவதேசஞ் செல்லவே அனைவரும் சொல்லி முடியாத ஆனந்தத்தில் ஆழ்ந்தனர்.

தனக்கு விவாகமாவதற்கு முன்பே சத்தியவானைக் கணவனாக வரித்துப் பின்பு அவனுடைய ஆயுள் ஒரு வருஷகாலமே நீடித்திருக்குமென்று நாரத முனிவரால் அறிந்தும், அந்தச் சத்தியவானையே கணவனாகக் கொள்ளுதல் முறையென்றுணர்ந்து, அவ்வாறே அவனுக்கு மாலையிட்டு, மாமன் மாமியர் மனமகிழும் வண்ணம் பணிவிடைகள் புரிந்து, அவர்களின்மனமார்ந்த ஆசீர்வாதத்தையும் பெற்று, கௌரியின் நோன்பொன்றியற்றி, அதுபொருட்டு மூன்றுநாள் அன்னபானமில்லா திருந்து, நான்காநாள் தன் கணவனுடன் கானகஞ்சென்றிருக்கையில், அவனது ஆவியை யமன் கொண்டோடிய காலத்தும், அவனைப் பின்பற்றிச் சென்று, தன் மாமன் மாமியர்க்கு நாட்டத்தையும் நாட்டையும் அடைவித்து,தன் பெற்றோர்க்கு புத்திரப் பேற்றை எய்துவித்தபின்னர், தன் கேள்வனது ஆயுளை மீண்டும்பெற்றுவந்த சாவித்திரியின் கற்புறுதியையும் ஒழுக்கத்தையும் பெருமையையும் பெண்டிர்கள் யாவரும் பின்பற்றுவார்களாக!

பீஷ்மர் சபதம்

தந்தையிடம் அத்தியந்த பக்தி

பூர்வம் அயோத்தி மாநகரில் சந்தனு என்னும் மன்னவனொருவன் அரசு செலுத்தி வந்தான். அவனுடைய தண்ணளியாலும், வன்மையாலும் இப்பரத கண்ட முழுவதும் அவனது ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. எக்காலத்தும் தன் குடிகளுக்கு நன்மை புரிவதிலேயே அவன் கண்ணுங் கருத்துமா யிருந்தான்.

ஆதலின், பிரஜைகள் அனைவரும் சந்தனுவைத் தெய்வமெனக் கொண்டாடினர். இத்துணை ஏற்றம் வாய்ந்த இறைவனது பட்டமஹிஷியின் பெயர் கங்கை. அவளிடம் அவனுக்கு மைந்தர் எழுவர் தோன்றினர்.

ஆயினும், விதிவசத்தால் ஒவ்வொரு குமாரனும் பிறந்த அக்கணமே மாண்டு போயினன். ஆகவே, அரசனும் அரசியும் ஆற்றொணாத் துயரடைந்தனர். அமைச்சர் தேற்றுதலினால் அவர்கள் ஒருவாறு தேறியிருந்தனர்.

பின்னர், அவர்களுக்கு நாளடைவில் தேவவிரதன் என்னும் புதல்வன் தோன்றினான். தோன்றவே, மன்னனும் அரசியும் மனமகிழ்ந்து அப்பாலனை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்துவந்தனர். ஈதிங்ஙனமிருக்க,

முன்னைவினையின் பயனால், அரசன் தன் காதலியைப் பிரிய நேர்ந்து விட்டது. தாயோடு அறுசுவைபோம், தந்தையோடு கல்விபோம், சேயோடு தான்பெற்ற செல்வம் போம், ஆயவாழ்வு உற்றாருடன் போம், உடன் பிறப்பால் தோள்வலி போம், பொற்றாலியோடு எவையும்போம். ஆதலின், காதலியை இழந்த காவலன் அடங்காத்துயர் கொண்டான்.

சிலகாலஞ் சென்றபின் தேவவிரதன் தக்கபருவமடைந்தனன். பிறகு அவன் பரசுராமரை யடைந்து, அவரை ஆசிரியராகக் கொண்டு, அஸ்திர சஸ்திரப் பயிற்சியில் தேர்ச்சிபெற்று விளங்கினான். மேலும், அரசர்க்குரிய அறிவு, ஆண்மை, வீரம், தீரம், மெய்வலி, முதலிய அருங்குணங்கள் யாவும் ஒருங்கே அமையப் பெற்றான்.

ஆகவே, தன் மைந்தனது அருங்குணங்களையும், படைக்கலப் பயிற்சியையும் கண்டு களித்த மன்னன் நல்முகூர்த்த மொன்றில் அக்குமாரனுக்கு இளவரசுப் பட்டஞ்சூட்டி மகிழ்ந்தான். பின்னர், ஒருநாள் அரசன் வேட்டையினிமித்தம் காடு செல்ல நேர்ந்தது. அவ்வாறே கானக மேகி, அங்கிருந்த கொடிய விலங்குகளை வேட்டை யாடியதும் கொற்றவன் மிகுந்த களைப் புற்றான். அன்றியும் அவனுக்கு நீர்வேட்கை மிகுதியாக உண்டாகவே, அருகே சிறிது தூரத்தில் ஓடும் யமுனை நதி சென்று நீர்பருகிக் கரையேறினான்.

அச்சமயம் திடீரென்று மிகுந்த பரிமள மொன்று வெகுதூரம் வீசியது. அதனை முகர்ந்த மன்னவன் "இதென்ன ஆச்சரியம்! இதுகாறும் நாம் இத்தகைய நறுமணத்தை அனுபவித்தோமில்லை. திடீரென இம்

மணம்வீசக் காரணம் யாது? அதனை அறியவேண்டும்" என்று நினைத்து, அவ்வாறே, மணங்கமழும் திசையை நோக்கி நடக்கலுற்றான்.

சிறிது தூரஞ் சென்றதும், அழகிய பெண்மணியொருத்தி தென்பட்டனள். அவளை அணுக அணுக, மணமும் பெருகத் தலைப்பட்டது. இறைவன் மிக்க வியப்புடன் அக் காரிகையைக் கிட்டி "மாதே! யார் நீ! உன் நாமம் யாது? உன் பெற்றோர் யாவர்?" என்று வினவினான்.

நாணமென்னும் பேரணியைப் பூண்டிருந்த அப் பெண்பால் ஒன்று முறையாது, பூமியை நோக்கிய வண்ணமாய் மௌனஞ் சாதித்திருந்தனள். ஆயினும், தன்னை யணுகிய புருஷன் நரேந்திரனாயிருத்தல் வேண்டுமென்று அறிந்துகொண்ட அப்பெண்,

"அரசே! வந்தனம்! என்னைப் பரிமளகந்தியென்று அனைவரும் அழைப்பர். என் தந்தையாரோ, இக்கரை வருவோரை அக்கரையிற் சேர்க்கும் தொழிலை நடத்துபவர்,"

என்று பணிவுடன் பதிலளித்தனள்.

அச்சமயம் படகோட்டியும் பார்த்திபன் பக்கமணுகி அடிமலர்பணிந்து நின்றான்.

உடனே, இறைவன் தேர்ப்பாகனை நோக்கினான். நிருபனது உள்ளக் கருத்தை முகக்குறிப்பினாலுணர்ந்த பாகன், படகோட்டியை நெருங்கி,

"அவனியாளும் அரசன் நின்செல்வியை மணம் புரிய விரும்பின் அது, நீ செய்த பெருந்தவமோ? அன்

றேல், உன் மகளியற்றிய மாதவமோ ? யாதோ அறியேன்'' எனலும்,

படகோட்டி, "ஐய! பூருவின் குலத்திலுதித்த கோமகன் என் மகளை மணஞ் செய்துகொள்ள விரும்புவது எங்கள் முன்னோர் செய்திருக்கும் நல்வினைப்பயனேயாம். என் செல்வியே பாக்யவதி! இதற்கு எள்ளளவும் ஐயமில்லை. ஆயினும், நம் பார்த்திபனுக்குப் பகீரதியிடமாகத் தோன்றிய தேவவிரதன் என்னும் மைந்தன் உளன்.

"அக்குமாரனுக்கு அரசன் இளவரசுப்பட்டம் சூட்டியாய்விட்டது. ஆகவே அரசுரிமை தேவவிரதனுக்கே உரித்தாகும். என்மகள்பால் தோன்றும் பாலர்கள் யாது பேறு பெறக்கூடும்? அரண்மனையிலிருந்து அறுசுவையுண்டி அருந்தியிருப்பதைவிட வேறு எப்பேறும் அவர்களுக்குக் கிட்டாது. இதைக் குறித்தே நான் சிந்திக்கின்றேன்'' என்றுரைத்தான்.

அவன் பகர்ந்த மாற்றத்தினைக் கேட்ட கொற்றவன், வேல் பாய்ந்த பெரும்புண்ணில்கனல்நுழைந்ததுபோல், உள்ளம் உருகி, உடல் கருகி, உயிருண்டோ, இல்லையோ என்னும்படி நாடடைந்தான்.

அடைந்ததும், தேய்மதிபோல் நாளுக்கு நாள் தந்தையினது மேனி வாடிப்போவதைக் கண்ணுற்ற தேவவிரதன், ஒன்றுந் தோன்றாது மயங்கி, தன் தந்தையின் வாட்டத்திற்குக் காரணத்தையறிய, அடுத்தடுத்து அன்புடன் வினவியும், மன்னன் மறுமொழி தந்தானில்லை.

இறைவனே, பரிமளகந்தியை மணந்துகொள்ள வேண்டுமென்ற பேராவல் பூண்டு வாடியிருந்தான்.

படகோட்டிக்கோ தன் மகளை மன்னவனுக்கு மணம் புரிவிக்க ஆசையிருந்தும் தன் குமரிபால் தோன்றும் மைந்தர்களுக்கு அரசுரிமை கிட்டாதென்ற காரணத்தால், மனமொப்பவில்லை. அவன் விரும்பும் வண்ணம் நடக்கவும் நிருபனுக்கு மனமில்லை. ஏழு புதல்வரைப் பறிகொடுத்த பின்னர், அருமையாய்த் தோன்றிய எட்டாவது மைந்தனுக்கு அரசைக் கொடாது, படகோட்டியின் பேரனுக்கு அரசுரிமையை அளிக்க எவ்வாறு மனஞ்சகிப்பான் அரசன்? ஆதலினாற்றான், மைந்தன் வினவியதற்கு மன்னவன் பதிலளித்தானில்லை.

ஆயினும், தன் அருமைத் தந்தையின் மனோவியாதியைப் போக்கவேண்டுமென்று தேவவிரதன் நிச்சயித்துவிட்டான். ஆகவே, கடைசியில் காவலனது மனக்கோளைப் பாகன் மூலமாய் உணர்ந்துகொண்ட தேவவிரதன், ஒருகணமும் தாமதியாமல், அமைச்சர் பெரியோர் முதலானோருடன் கடற்புரத்தரசரைக் கிட்டி, மிகுந்த ஆதரவுடன் அவனை நோக்கிக் கூறுவான் :—

"ஐய, இன்றுமுதல் நீங்களே எனக்குப் பாட்டனார், என்னை ஈன்றெடுத்த தாய் பகிரதியல்லள். இக்கணந்தொட்டு உங்கள் மகளே என தன்னை! எனது தாயாம் உங்கள் குமரிபால் தோன்றும் பிள்ளைகளை எனது அருமைத் தம்பியரென்னத் தடையுமுண்டோ? கடலாடை சூழ்ந்த இக்காசினி முழுவதும் என் தம்பியர்க்கே யுரியது; இது ஸத்தியம்! ஸத்தியம்!! இனி நீங்கள் விரு

ம்புவதென்ன ? இக்கணமே உங்கள் குமரியை எனது தந்தைக்கு மணமுடிக்க உடன்படவேண்டும்."

"இதோ, என்முன் நிற்கும் மாந்தர் பலரும் தேவர் அனைவரும் யான் இச்சமயம் ஏற்கும் விரதத்தினை அறிவாராக. அஃது யாதெனில்,

"எனது ஆவி, என்னுடலைவிட்டு நீங்குமளவும், நான் இல்வாழ்வைக் கனவிலும் கருதேன். கடவுளர் அறிய இவ்விரதம் மெய்யே! அன்றியும், இன்றுதொட்டு நான் இவ்வுலக இன்பத்தை ஒரு சிறிதும் இச்சியேன்! உலக வின்பத்தினை இக்கணமே வெறுத்துத் துறந்துவிட்டேன். மக்கட்பேறு பெறுதார் நற்கதிசென்று சேரா ரென்பது உண்மையாயினும், என் தந்தையின் பொருட்டு, யான் இவ்விரதத்தை மேற்கொண்டேனாகலின், அவரது இன்னருளால் நான்நற்கதிபெறுவேன். எங்கள் மூதாதையாகிய பூரு தம் பிதாவுக்கு இளமையை நல்கி, அவரது மூப்பைப் பெற்றிருக்க வில்லையா ? ஆகவே, எனது பிதா எவ்விதத்திலும் இன்பமுடன் வாழப் பார்ப்பதே எனது கடமையாகும்!"

இவ்வண்ணம் தேவவிரதன் கொடிய விரதம் பூண்டதைக்கேட்ட மானிடர் பிரமித்து நின்றனர். விண்ணவரோ வியப்பெய்திப் பூமழை பொழிந்தனர். மாமுனிவர்கள் தேவவிரதனுக்கு ஆசி கூறினர். அந்தரத்தே தேவ துந்துமி முழங்கியது. அத்தேவவிரதன் பூண்ட சபதத்தின் பெருமையை நாம் என்னென்று புகழ்வது?

அனைவருக்கும் இயலாத அரிய விரதத்தை மேற்கொண்டதனால், அன்று முதல் தேவவிரதனுக்கு பீஷ்மர் என்ற பெயர் உண்டாயிற்று. பின்னர் பீஷ்மர்

காலதாமதஞ் செய்யாது, தமது அன்னையைத் தேரி லேற்றிச் சென்று, அரண்மனையை அடைந்து, அவளை அரசன் முன்னர் நிறுத்தி, "எந்தாய்! வந்தேன் அன்னை யுடன்" என்று விளம்பி அரசனது பாதமலரைத் தொழுது நின்றார்.

அக்காலத்தில் சந்தனுவுக்குத் தோன்றிய ஆனந்தத் திற்கு ஓர் அளவில்லை. தன்னருமை மைந்தனை மார் போடணைத்து, உச்சி மோந்து, "மகிமை வாய்ந்த புதல்வனே! "பெறுமவற்றுள் யாமறிவதில்லை, அறிவறி ந்த மக்கட்பேறல்லபிற" ஆதலின், உன்னைப் புதல்வனாக அடைந்த பின்னர், எனக்குக் கிட்டாத காரியம் ஏதே னும் உளதோ! தந்தை மகனுக்குச் செய்யவேண்டிய கடமைகளில் நான் உனக்கு ஒரு சிறிதும் உதவினே னில்லை. என்றாலும், எனது எண்ணத்தை யறிந்து, அவ்வண்ணமே நீ என்னைக் களிக்கச் செய்தாய். இதற் குக் கைம்மாறாக யான் என்ன செய்யமுடியும்? எனி னும், நீ தட்டாது மோட்சபதவி பெறுவாய். மேலும், எக்காலத்து நீ அதனை விரும்புகின்றாயோ, அக்காலம் அவ்வாறே சித்திக்கு மென்பதற்குத் தடையில்லை" என்று சந்தனு வரமருளினன்.

பின்னர், படகோட்டி பார்த்திபனை நோக்கி, "மன் னர் மன்ன! இப் பரிமளகந்தியைக் கேவலம் பரதவர் மாதெனக் கருதேல். இவள் தேவகன்னிகை! முன்னம் ஆகாச வீதியிடையே சென்ற தேவனொருவன், நான் மகளின்றி வருந்துவதை யுணர்ந்து, எனக்கு இப்பெண் மணியை அளித்துப் போயினன். ஆகவே, நான் இச் செல்வியை எனதருமை மகளேபோல் பாவித்து வளர்

த்து வந்தேன். இத் தேவமாது மாலையிடுவதற்கு ஏற்ற மணாளனை யான் தேடியிருந்த காலையில், கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்ததுபோல், தாங்கள் இம் மங்கையைக்கொள்ள மனமொப்பியது என் முன்னோர் செய்த பெருந்தவமாகும்" என்று வாய்புதைத்து, உரைத்தவளவில், அசரீரியும் "ஆம், பரிமளகந்தி தேவ கன்னியே யாவள்" என்று வற்புறுத்த, அரசன் அடங்காமகிழ்ச்சி கொண்டு, அந்நங்கையை வேதவிதிப்படி மணம் புரிந்து, இன்பமாய் வாழ்ந்துவந்தான்.

நாள் பலகழிந்ததும், சித்திராங்கதன், விசித்திரவீரியன் என்னும் மக்கள் இருவர்தோன்றினர். தம்முடன் ஒரே தாய்வயிற்றிற் பிறந்த தம்பியரைப் போலவே அவ்விருவரையும் பீஷ்மர் பாவித்து, அவர்களுடன் களித்திருக்கையில், விதிவலியால் சந்தனுமன்னன் விண்ணுலகேகினன். ஆகவே முன்பு தாம் செய்துகொண்ட வாக்குறுதியின் வண்ணம் தமது தம்பியர்க்கே பீஷ்மர் முடிசூட்டினர்.

அப்பால், நாளடைவில் சித்திராங்கதன் ஆவி துறக்கவே, விசித்திரவீரியனுக்கே பீஷ்மர் அரசுரிமையைக் கொடுத்து, முறையாக ராஜ்யபாரம் நடத்தும்படி அவனுக்கு அறிவுறுத்தி, தாமும் மேற்பார்வை பார்த்துவந்தார். இவ்வாறிருக்கையில், காசிராஜன் புதல்வியர்க்குச் சுயம்வரமென மணவோலை வந்தது. அதனையறிந்த பீஷ்மர், உடனே தம்பியுடன் புறப்பட்டு, காசி மன்னன் ஸபாமண்டபத்தை யடைந்தனர். அச்சமயம் அங்கிருந்த அரசிளங்குமரர் பலரும் "ஓ! குருகுலக் கோமானாகிய பீஷ்மர் தாம் கூறிய சபதத்தை மறந்த

னரோ" என ஐயுற்றனர். எனினும், பீஷ்மர் சொன்ன சொல் தவறுவரோ? ஒரு நாளுமில்லை. இது நிற்க, சுயம்வரம் என்றால் என்னவெனில்,—

அரச குமரிகள் தம் மனதுக்கிசைந்த மணாளனைத் தாங்களே தேடிக்கொள்வது. அவ்வாறு அக்கன்னியர் ஒரு குமரனைத் தேர்ந்தெடுக்கும் பொழுது, அங்கு ஸபாமண்டபத்தில் கூடியிருக்கும் அரசிளஞ் சிங்கங்கள் மனம் பொறாராயின், உடனே அக்குமரனுடன் போர் புரியத் தொடங்குவர். அங்ஙனம் போர்புரியின், அக்கன்னியரால் குறிக்கப்பட்ட குமரன், தன்னை எதிர்க்கும் அரசகுமரர்களைப் போரில் புறங்காணவேண்டும். இல்லையேல் போரில் வெற்றிபெற்றோரே அம்மங்கையரை மனைவியாக அடைவது வழக்கம்.

இனி அக் காசிராஜனுக்கு அம்பா, அம்பிகை, அம்பாலிகை என்னும் மூவர் புதல்விகள். அம்மூவரும் அழகில் நிகரற்றவர்கள். ஆகவே, அம் மங்கையர் மூவரையும் தம்பிக்கு மணம்புரிவிக்கப் பீஷ்மர் விரும்பி ஸபாமண்டபத்தில் கூடியிருந்த குமரர்களைப் போருக் கழைத்து, அவர்களனைவரையும் புறங்கண்டார்.

அவதாரமூர்த்தியாகிய பரசுராமரிடம் வில்வித்தை பயின்ற பீஷ்மர்முன், அரசகுமரர் தோற்றுப்போனது வியப்பல்லவே! பீஷ்மர் போர்புரியுங் காலத்து, சாளுவ தேசமன்னன் வெகுதீரத்துடன் பீஷ்மரை எதிர்த்தான், ஆதலின், காசிராஜன் புதல்வியரில் மூத்தவளாகிய அம்பா என்னுங் கன்னிகை அச்சாளுவ மன்னனை விருப்புடன் நோக்கினள். ஆதலின் பீஷ்மர் அம்பாஎன்னும்

மங்கையைத் தவிர்த்து, மற்ற இரண்டு பெண்களையும் விசித்திரவீரியனுக்கு மணமுடித்தார்.

உடனே தன்னையும் ஏற்றுக்கொள்ளும்படி பீஷ்மரை அம்பா வேண்டினள். பீஷ்மர் அதற்கு மனமிசையாததால் அவள் சாளுவ மன்னனை நாடினள். அவனும் மறுத்துவிட்டான். ஆதலின், மிகவும் மனங்கலங்கிய அந்நங்கை மறுபடியும் பீஷ்மரை யடைந்து வணங்கி, தன் கதியைக் கூறி குறையிரந்தனள். "நீ சாளுவ மன்னன்மீது மையல் கொண்டாயாதலின், உன் எண்ணம் ஈடேறாது" என்று அவர் பதிலளித்து விட்டார்.

உடனே அக்கன்னிகை பீஷ்மரை நோக்கி "ஐயனே! தாங்கள் இவ்வுலக இன்பத்தை இச்சிப்பதில்லையெனக் கூறியிருப்பினும், எவ்விதத்திலேனும் உம்மையே மணாளனாகக் கொள்வேன்" என வஞ்சினங் கூறிப்போய், பரசுராமரையடைந்து வேண்டினள். ஏன் அந்நங்கை பரசுராமரை யடைந்தாளெனின், குருவின் வார்த்தைக்கு பீஷ்மர் இணங்கி விடுவரென்பதே.

அங்ஙனமே, அக்காரிகை பரசுராமரை யடைந்து குறையிரந்ததும், அவர் அக்கணமே பயணமாகி, பீஷ்மரை யடைந்து அம்பாவை மணம் புரியும்படி அறிவித்தனர். அதற்கு பீஷ்மர் "ஐயனே! சரணம்! தாங்கள் கூறுவதை நான் எங்ஙனம் மறுக்க முடியும்? ஆயினும், என் தந்தையின் பொருட்டு உலக வின்பத்தை நாடுவதில்லை யென்று சபதம் பூண்டேன். அச்சபதத்திற்கு மாறாக நடத்தல் நீதியாமோ? தவறின், எவ்வுலகத்தாரும் என்னை ஏளனஞ் செய்வரே! என்செய்வேன்; தங்களுடைய கட்டளையை வேதமொழிபோல்போற்று

வதும் என் கடமையாகும். எனினும், சொன்ன சொல் தவறி, சபதமிழந்து, நகைப்புக் கிடமாவதில் எள்ளளவும் இஷ்டப்படேன்" என்று கூறினர்.

பரசுராமரோ பதிலுரைக்க இயலாது திரும்பிப் போயினர். பின்னர் அம்பா தன் விதியை நொந்து கொண்டு, தவமியற்ற நிச்சயித்து, அங்ஙனமே தவக் கோலம் பூண்டனள்.

தாம் கூறியபடியே பீஷ்மர் பிரம்மச்சரிய விரதம் அநுஷ்டித்து வருவதைக் கண்ட பலரும் அவரைக் கொண்டாடினர். பின்னர் நாளடைவில் விசித்திர வீரியனுக்கு, பாண்டு, திருதராஷ்டிரன், என்னும் மக்கள் இருவர் தோன்றினர். அவ்விருவருக்கும் முறையே பாண்டவர், துரியோதனுதியர் எனக் குமரர் பலர் பிறந்தனர். இவ்விரு திறத்தாரும் தாயபாகங் காரணமாகப் பகைத்துப் போர் புரிந்தனர் என்பது அனைவரும் அறிந்த விஷயம்.

தமது பேரன்மார்களின் போராட்டத்தை நீக்க, பீஷ்மர் பலவாறு முயன்றும், விதிவலியால் யுத்தம் ஏற்பட்டு விட்டது. அதுவே பாரதயுத்த மெனப்படும். அப்பாரத யுத்தத்தின் பத்தாநாளில், பீஷ்மர் ஆகமெங்கும் அம்புகள் பாயப்பெற்று, சோர்வடைந் திருக்கையில் தருமன் முதல் மன்னர் பலரும் ஒருங்கே திரண்டு வந்து, பீஷ்மரை யணுகி அவரது புஜபல பராக்கிரமங்களை வாயார வாழ்த்தி, முடிவில்,

"மூதாதையே! தந்தை இன்பம் எய்தற்பொருட்டு, தவத்தையே இன்பமாகக் கொண்டஞானச்செல்வமே! செஞ்சேவகமே! முந்தை மரபுக் கெல்லாம் முதல்வா!

ஞாலம் முழுதும் போற்றும் ஞானியே! உம்மை நிகர்ப்பார் யாவருளர்?" என்றழுது தொழுதவளவில்,

பீஷ்மர் தம்மக்களை நோக்கி "அன்புள்ள மைந்தர்காள்! அஞ்சேல்! தொல்லைவினையின் பயனை யார்தான் விலக்க முடியும்? உங்கள் முன்னிலையில் யான் நற்கதி பெறுவது பெரும் பாக்ய மல்லவா? ஆயுளோ அநித்திய மென்பதை நீங்கள் அறிவீர். ஆதலின் வருந்தேல்" எனத் தேற்றியதை அனைவரும் நன்கறிவர்.

அச்சமயம் தக்ஷிணாயண காலமாதலின், உத்தராயண புண்ணியகாலத்தில் உயிர் துறப்பது பாக்கியமாகு மென்ற வேதமொழியைக் கடைப்பிடித்து, தந்தையருளிய வரத்தால் உத்தராயணம் வரையில் உயிரை ஓடாது நிறுத்திக்கொண்டார். பின்னர் அப்புண்ணிய காலத்தில் ஆவியை நீத்து உயர்பதம் பெற்றார். தந்தையின் மனம் மகிழும் வண்ணம் புதல்வர் நடந்துகொள்வது எத்துணை பெருமை பாருங்கள்!

சியவன முனிவர் பெருமை

பசுவின் மகிமை

பண்டைக் காலத்தில் சியவனர் என்னும் முனிவ ரொருவர் இருந்தார். அவர் ஐம்புலன்களையும் தம் வசப்படுத்தி யிருந்தாராயினும், சஞ்சலமின்றித் தவமிய ற்றுவதற்கு ஏற்ற இடத்தை நாடினர். முடிவில், பாகீரதி நதியின் முகத்துவாரமே தக்க இடமென்று கருதி அங்குச்சென்று, நீர் நிலையினுட் புகுந்து, அருந்தவ மியற்றி வந்தார். அனைவரும் கண்டு களிக்கும்படி தம் சித்தம் சலியாமல் அதனைச் சிவன்பாலிருத்திப் பன் னீராண்டு கழிக்கவே, ஒருநாள் வலைஞர் பலர் மச்சம் பிடிக்க வந்து, அம்முகத்துவாரத்தை யடைந்து முனி வரிருக்கு மிடத்தே வலையை வீசினர்.

பின்னர், சிறிதுபொழுது சென்றதும், வலையை நீர் மட்டத்துக்குமேலே இழுக்க, அது மிகவும் கனமா யிருந்தது கண்ட செம்படவர் "ஓ! ஓ! இன்று நமக்குப் பெரிய மீன் கிடைத்தது" என்று மனமகிழ்ந்து பார்க்க, அதனுள் முனிவர் அகப்பட்டிருப்பது தெரிந்தது. மாயவலையிற் சிக்காத சியவனர் செம்படவரின் வலையிற் சிக்கியது என்ன ஆச்சரியம்!

தங்கள் வலைக்குள் முனிவரிருப்பதைக் கண்ட வலை ஞர் மிகவும் திடுக்கிட்டு, அவரது மலரடிகளில் வீழ்ந்து வணங்கி, "அன்புடைய ஐயனே சரணம்! பொய்யறியா மெய்யனே அபயம்! எங்கள் குலாசாரப்படி வலை வீசி

னோம். இம் மாநதியின் முகத்துவாரத்தில் தாங்கள் மூழ்கியிருந்ததை நாங்கள் அறிந்தோமில்லை. தேவரீர் செய்துவந்த தவத்திற்குப் பங்கம்செய்து விட்டதைப் பற்றி மெத்தவும் வருந்துகின்றோம். நாங்கள் மனமறியாது தீங்கிழைத்தோமாதலின், எங்களை மன்னிக்கும்படி மன்றாடுகின்றோம். ஆண்டவனே சரணம்" என்று கைகட்டி வாய் புதைத்து வேண்டினர்.

இம்மொழிகளைக் கேட்ட அருந்தவத்தோன் வலைஞரை நோக்கி "நீங்கள் எனக்கு எவ்விதத்திலும் தீமை புரிந்தீர்களில்லை. உங்கள் குலதர்மத்தின் வண்ணம் வலை வீசினீர்கள். யான் இங்கு யோகத்தில் இருந்ததை நீங்கள் எவ்வாறு அறிய முடியும்?

"நீங்களோ வெகு பாடுபட்டுப் பெரியமீன் கிடைக்குமென்று எதிர்பார்த்து ஆவல்கொண்டிருந்தீர்கள். ஆயினும், அது நிறைவேற வில்லை. என்றாலும், நீங்கள் என்னைக் கடைவீதிக்கு இட்டுப்போய் விற்றுவிட்டு, அதனால் கிடைக்கும் பொருளைக் கொண்டு இன்றைப் பொழுதைப் போக்குங்கள். நீங்கள் ஏமாறிப் போகக் கூடாது? ஏனெனில் நீங்கள் மீன் பிடித்துவிற்று, மிகுந்த தனத்துடன் திரும்பி வருவீர்களென்று எதிர்பார்த்திருக்கும் உங்கள் மனைவி மக்கள் மனமொடிந்து போகக் கூடாது. மேலும் இனி நீங்கள் மீன் பிடிப்பதற்கும் வேண்டிய பொழுதில்லை. ஆதலின், கொஞ்சமேனும் அச்சமின்றி என்னைவிற்று அந்த ஊதியத்தைக்கொண்டு களியுங்கள்" என்று விளம்பினார்.

இம்மொழி கேட்டசெம்படவர் திக்பிரமை கொண்டவர்களாய் "ஐயனே! தாங்கள் சொல்வது முறையன்று.

தங்களுடைய தவநிலையைக் கலைத்தது மன்றி, தங்களையும் விற்றுப்பணம் பெற்றால், நாங்கள் எவ்வாறு உயிர்தரிப்போம்! பெரியோரைப் பிழைத்த மாபாவம் எங்களைச் சூழ்ந்திருக்க, அதைவிடக் கொடிய பாவத்தைத் தேடிக்கொள்ள நாங்கள் மனமொப்போம்," என்று முனிவரை நோக்கிக் கூறியும், முன் சொன்னதையே முனிவர் பிடிவாதமாகச் சொல்லினர்.

பின்னர், யாது செய்வோமெனத் திகைத்து நின்ற வலைஞர், முடிவில், நாட்டையாண்டு வரும் நகுஷ ராஜனிடஞ்சென்று நடந்ததை நவின்றனர். உடனே அம் மன்னவன் விரைந்துசென்று, முனிவரிருக்கும் இடஞ் சேர்ந்து "பெரியோரே! சிறியோர்களாகிய செம்படவர் தங்களுக்கிழைத்த தீங்கினை யுன்னாது பொறுத்தருள வேண்டும். இதுவே நான் விரும்புவது" என்று பணிவுடன் பகர்ந்தான்.

முனிவரும் மன்னவனை நோக்கிச் சொல்வார் :—

"அரசே! அறியா வலைஞர் எனக்கு எள்ளளவும் பிழை செய்யவில்லை. தங்கள் ஜாதித்தொழிலுக் கிணங்க வலைவீசினர். அது கனமாயிருந்தது பற்றி மிகப் பெரிய மீன் கிடைத்ததென்று களிப்புற்றிருந்தனர். அவர்கள் கொண்டிருந்த ஆசையை நிராசையாக்க, நான் அவ்வலையிற் பட்டிருந்தேனாயினும், அவர்களுடைய ஆசை வீண்போவதில் எனக்கு இஷ்டமில்லை. ஆதலின், என்னை விற்றுப் பணம்பெறும்படி அவர்களுக்கு அறிவித்தேன். அவர்கள் இன்னது செய்வதென்று தோன்றாது, உன்னையடைந்து முறையிட்டனர். எங்கள் இருவருக்கும் ஒப்ப நடக்க நீ விரும்பின், எனக்

குண்டான விலையை அவ்வலைஞருக்கு உதவுவாயாக. பின்னர் என்னை மீட்பது தர்மமாகும். அவ்வாறின்றி அவர்களைச் சும்மா அனுப்ப எனக்குச் சம்மதமில்லை."

இவ்வாறு முனிவர் கூறியதும், அரசன் துறவியை நோக்கி, "முனிவர் பெரும! மாசற்ற மனமுடைய தங்களுக்கு ஈடாக இச்செம்படவருக்கு ஆயிரம்பொன் அளிக்கின்றேன்" என்று பதிலளித்தான். உடனே முனிவர்பிரான் அவனைப்பார்த்து "உன் மதிப்பு நன்று நன்று! ஆணவம், காமம், மாயை என்னும் மும்மலங்களும் நீங்கப்பெற்ற நிறைகுண மாந்தரின் விலை ஆயிரம் பொன் போலும். பலகலைகளையும் கற்றுணர்ந்த நீ முனிவர்களின் விலையை வெகு நன்றாக நிர்ணயித்தாய்!" எனலும், அரசன் "நூறாயிரம் பொன் அளிக்கத் தடையில்லை," என்றான்.

"அந்தோ! மாதவ மிழைத்த உடல் நூறாயிரம் பொன்தான் பெறுமோ?" என்று முனிவர் செப்ப, "ஐயனே! கோடிப்பொன்" என்றான் மன்னன்.

அதற்கு அம்முனிவர் பெருமான் "இராஜ திலக! அந்தணர், பெரியோர், அமைச்சர் இவர்களுடன் கலந்து பேசி, பற்றற்ற முனிவர்களின் விலையை மதித்துக் கொள்" என்றியம்பவே, அரசன் தனது ஆப்த நண்பராகிய கவிஸாகரர் என்னும் அருந்தவத்தோரைத் தியானித்து, "ஆபத்துக் காலத்தில் ஊன்று கோல் போல் உதவும் உத்தமரே! இச்சமயம் என் முன் தோன்றி, என் கவலையைப் போக்கவேண்டும்" என்று துதித்தபோது, அம்முனிபுங்கவர் அக்கணமே அரசன் முன்பு தோன்றினர். காவலனும்,

வேதியரை வலம் வந்து பணிந்து, நடந்தனயாவும் எடுத்துரைத்தான்.

உடனே அக்கவிஸாகரர் கூறுவார் :—

"அரசே! மலரவனும் மற்றுள்ள இமையவரும் முனிவர் பிரானை சியவனருக்கு ஈடாகார். ஆகவே நீ கோடானுகோடி தனம் அளிப்பினும், அது முனிவருடைய மகிமைக்கு நிகராகாது. இவ்வுலகத்திலுள்ள எப்பொருளும் முனிவருக்குச் சமானமில்லை. ஆயினும் பரம புண்ணியத்தை அளிக்கவல்ல பசு ஒன்றையே முனிவருக்கு நிகராக ஒப்பிடலாம். இத்தகைய மகிமை வாய்ந்த பசு பாரில் இல்லாவிடின், இந்நிலவுலகம் செழித்தோங்க முடியாது. மனிதரைவிடப் பன்மடங்கு மேலான தேவர்களும், பசுவைத்தொழுது, ஏத்துகிறார்களென்றால், அப்பசுவின் பெருமையை நான் என்னென்று சொல்வேன்? நற்குணங்கள் யாவும் நிரம்பப்பெற்ற பெரியோர்க்கு ஒரு பசுவை ஒருவன் தானஞ் செய்யின், அவன் உலகெலாம் புகழும் வண்ணம் வாழ்ந்து, மேலான பதவி பெறுவான். மேலும் ஒரு பசுவின் உடலில் எத்துணை உரோமங்கள் இருக்கின்றனவோ அத்துணை வருஷகாலம் அவன் முக்தி யின்பத்தை எய்துவான். அன்றியும் எவ்விதச் சடங்குகளும் நற்காரியங்களும் பசுவின்றி நடைபெறா. ஆதலினால் பசுவைவிட மேலான பொருள் மூவுலகத்தில் எதுவுமில்லை. அம்முனிவருக்குப் பதிலாக ஒரு பசுவை இச்செம்படவருக்கு ஈதலே யுக்தமாகும்."

வேந்தன் இவ்வசனங்களை கேட்டுப் பெரிதும் மகிழ்ச்சி கொண்டு, சியவன முனிவரை நோக்கி, "மாதவ

மிபற்றும் பெரியோரே! தங்களுடைய மகிமையும் பெருமையும் இவ்வளவென அறியாத யான், தங்களுக்குச் சமானமாய்த் தனம் அளிப்பதாகச் சொன்னேன். தங்களது அருமை பெருமைகள் இவ்வளவென இப்பொழுது அறியலானேன். ஆதலின், தங்களுக்கு விலையாக ஒரு பசுவை இச்செம்படவருக்குக் கொடுக்கின்றேன்" என்று வேண்டினன்.

இம்மொழி கேட்ட சிபவனர் களிகூர்ந்து, அந்நிருபனை வாழ்த்தி, "பசுவே எனக்கு ஏற்றவிலையாகும்." என்றியம்பினர். உடனே வேந்தன் ஒரு பசுவைத் தருவித்து, வலைஞருக்கு ஈந்து, முனிவரை மீட்டுக் கொண்டான்.

பசுவைப் பெற்றுக்கொண்ட செம்படவர், முனிவர் கோமானை நோக்கித்தொழுது, "பசுவின் மகிமை இன்னதென்பது இதுவரையில் எங்களுக்குத் தெரியாது. ஆனால் இச்சமயம் தெரிந்துகொண்டோம். ஆகவே, தங்களைவிட மேலான இப் பசுவை வைத்துக் கொள்ள எங்களுக்கு மனமில்லை. ஆதலினால், தங்களுக்கே இப்பசுவை நாங்கள் தந்துவிடுகின்றோம். எங்கள் வேண்டுகோளை அன்புடன் ஏற்றுக்கொண்டு, நாங்கள் கடைத்தேறும்படி அருள்புரிய இறைஞ்சுகின்றோம்," என்று ஆவலுடன் புகன்றனர்.

மீன் பிடித்து வயிறு வளர்க்கும் ஈனத்தொழிலையே மேற்கொண்ட செம்படவர்களின் தீவிர ஞானத்தையும் பக்தியையும் கண்டு மெச்சிய முனிவர், அவர்களை நோக்கி, "நீங்கள் எனக்குச் செய்த உபகாரத்தினாலும் பசுவினிடம் கொண்ட பக்தியினாலும் நான் ஆனந்

மடைகின்றேன். உங்கள் வேண்டுகோளை மறுக்க எனக்கு மனமில்லை. ஆகவின் நீங்கள் ஈந்த கோ தானத்தை ஏற்றுக்கொள்ளுகிறேன். நீங்களனைவரும் நற்கதி பெறுவீர்களாக" என்று வரமருளினர்.

இவ்வாறு சொல்லி முடிப்பு முன்னே, புஷ்பகவிமானங்களுடன் தேவர்கள் வந்து தோன்றி, அரம்பை, மேனகை, திலோத்தமை முதலிய தெய்வ கன்னியர்கள் மங்களம்பாட, அச்செம்படவர்களைத் தெய்வ உலகத்திற்கு அழைத்துச் சென்றனர். இவ்வதிசயத்தைக் கண்ட நகுஷன் முனிவரின் அடியிணைகளில் வீழ்ந்திறைஞ்சினன். அச்சமயம் முனிவர் "வேந்தனே நீ வேண்டும் வரம் யாது" எனலும், மன்னன் சொல்வான் :—

"முன்பு என் குலத்துதோர் செய்த நல்வினையின் பயனல் இன்று நான் தங்களைக் கண்ணாரக் காணும் பேறு பெற்றேன. அதுவுமன்றி, பசுவின் மகிமையையும் அறியலானேன். மேலும் பசுவைக்கொடுத்து வலைஞரிடமிருந்து தங்களை மீட்கும் பெரும்பேறும் பெற்றேன். இதைவிட நான் அடையும் பலன்கள் வேறுளவோ ! இல்லை. ஆயினும், ஒன்றுண்டு. அஃதென்னவெனில், தேவரீர் போன்ற பெரியோர்களிடத்தில் என்றும் மாறாத பக்தி பூண்டிருக்க எனக்கு வரமருள வேண்டுமென்பதே !

பார்த்திபனது பக்தி விநயத்தைக் கண்டு களித்த முனிவர் பெருமான், "அரசே ! என்னிமித்தம் கோதானஞ் செய்து, என்னைச் செம்படவர் கையினின்று மீட்டாய். ஆதலின், நீ நரேந்திரனுயிருப்பது மன்றி,

ஸுரர்க்கும் இறைவனுக வாழும்படி அருள் புரிகின்றேன்" என்று கூறி, மன்னவனை ஆசீர்வதித்துப் போயினர்.

பின்னர் நகுஷன் பன்னெடுங்காலம் அரசுபுரிந்து, முனிவர் அருளிய வண்ணமே, தேவர்களும் முனிவர்களும் போற்ற, அரம்பையாதி மங்கையர் வாழ்த்தெடுப்ப, சங்கநிதி பதுமநிதி இரண்டும் வேண்டியதை வேண்டிய வண்ணமே அளிக்க, கற்பகத் தருவின் நிழலில் தேவேந்திர பதவி பெற்று வாழ்ந்துவந்தான்.

நளனும் தமயந்தியும்

சூதினால் விளையும் கேடுகள்

பூமடந்தைதன் நாட்டம்போல் சிறப்பு வாய்ந்தது நிடதநாடு. அந்நாட்டின் தலைநகராக விளங்கியது மாவிந்தம் என்னும் நகரம். நளனென்னும் நரேந்திரன் அந்நகரை அரசிருக்கையாகக் கொண்டு செங்கோல் செலுத்தி வந்தான். தன் குடிஜனங்களுக்கு நேரும் இன்ப துன்பங்களைத் தன்னுடையனவாகக் கொண்ட அக்காவலன் எக்காலத்தும் தன் குடிகளின் க்ஷேமத்திலேயே கருத்துள்ளவன். முடிவாகக் கூறுமிடத்து, தன் பிரஜைகள் அனைவரையும் தாய்போல் பாதுகாப்பவன்.

ஒருநாள் அம்மன்னர் மன்னன் மாலைப் பொழுதில் ஒரு பூஞ்சோலைக்கு சென்றான். அங்கிருந்த வாவியின் தாமரை மலரொன்றில், தெள்ளிய சிறகும் செவ்விய தாளும் கொண்டு ஓர் அரசவன்னம் வீற்றிருந்தது. காவலன் அவ்வன்னத்தை நோக்கி நோக்கி அகமகிழ்ந்தான்.

உடனே அருகே நின்ற காவலாளிகள் மன்னனது மனோபாவத்தைக் குறிப்பாலுணர்ந்து, அப் பறவையைப் பற்றிக்கொணர்ந்து, அரசன் கையிலிட்டனர். பொன்னினும் பொலிந்து விளங்கும் சிறகுடைய அன்

னத்தைக் கையிலேற்ற நளன் அதன் சிறப்பைப் பல வாறு புகழ்ந்துரைத்தான். வேந்தன் விளம்பிய வார்த் தைகளைக் கேட்ட அன்னப்பறவை தன்னைக் கொற்ற வன் கொலைபுரிவானோ என்று கலங்கி, அரசனை நோக் கிக் கூறும் :—

"அரசர் பெரும! யானோ என் இனத்தை விட்டுப் பிரிந்து, உமது காத்திற் சிக்குண்டேன். என்னைக் காணாது என் இனத்தார் இன்னல் உறுவர். அடைந் தோரைப் புரத்தலே அரசரின் கடமை. ஆதலின் என்னை வருத்தாது விடுவீரேல், அந்நன்றியை யான் என்றும் மறவாது பாராட்டுவதுமன்றி, என்னாலான உதவியையும் புரிந்து உமது நண்பனாவேன்."

இவ்வாறு அரசவன்னம் விளம்பிய இரக்க மொழி களைக்கேட்ட அரசன், அதன் இஷ்டப்படியே விட்டு விட்டான். உடனே அப்பறவை அந்தரத்தே பறந்து சென்று அரசர் பிரானை நோக்கி, "மன்னர் மன்ன! ஒருபட்சி யாது உதவிபுரியுமென எண்ணவேண்டாம். குண்டினபுரத்தை மனு நெறிப்படி பரிபாலித்து வரும் வீம ராஜனுக்குத் தமயந்தி என்றொரு புதல்வியுண்டு. அவளே அழகின் அவதாரமென்றே சொல்ல வேண் டும். அழகுடன் நற்குண நற்செய்கைகளும் பொரு ந்தியிருப்பது ஒரு விசேஷம். அம்மங்கையை உமக்கு மாலை சூட்டும் வண்ணம் செய்வதே நான் செய்யும் கைம்மாறாகும்"

என்று கூறிவிட்டுக் குண்டினபுரத்தை நோக்கிப் பறந்து சென்று, அங்குள்ள அந்தப்புரத்தின் உய் யான மடைந்தது. அக்காலை தமயந்தி தன் தோழிய

ருடன் அங்கு வந்திருந்தனள். அப்பொழுது அன்னம் தமயந்தியை நோக்கிச் சொல்லும் :—

" பெண்மணி ! உன் வனப்புக்கும் குணத்திற்கும் ஏற்ற மணாளனை நீ அடைதல் அவசியமன்றோ ? உனக்கேற்ற நாயகனை நான் தேடிவந்திருக்கின்றேன். அத்தகைய மணாளன் யாரெனில், நிடத நாட்டதிபதியான நளச்சக்ரவர்த்தியே. அவனது பெருங்குணங்களை இயம்பக்கேள்: அவனோ செம்மனத்தான், தண்ணளியான், செங்கோலான். மேலும் அழகில் மன்மதனை ஒப்பான். மேனிலத்தும் நானிலத்தும் அவனைப்போல்வார் மருந்தினுக்கும் கிடைப்பதருமை. அறங்கிடந்த நெஞ்சும், அருளொழுகு கண்ணும், மற்போரிற் சிறந்த தோளும், உடையோனாதலின், அவன் செங்கண்மாலை நிகர்ப்பான் என்று சொல்லத்தடையில்லை."

இங்ஙனம் எடுத்துரைத்த பின்னர், அன்னம் பறந்து சென்று, நடந்த யாவற்றையும் நளனுக் கறிவித்தது.

இது நிற்க, அன்னம் இயம்பிய மொழிகளை மனத்திலேற்ற அன்னநடையாள் உடனே கன்னிமாடஞ் சேர்ந்து நளனையே நினைத்தவளாய்த் தன் பாங்கியருடனும் பேசாது வாளாவிருந்தனள். தன் புதல்வியின் நோக்கத்தைச் சேடியரால் உணர்ந்த வேந்தன் வேதியரால் நல்முகூர்த்த மொன்றை நாடி, " தமயந்திக்கு ஸ்வயம்வரம்" என்று அரசிளங்குமரர் அனைவருக்கும் ஓலை போக்கினான்.

அவ்வாறே மணவோலைபெற்ற மன்னிளங்குமரர் பலரும் குறித்த தினத்தில் குண்டினபுரஞ்சேர்ந்து சுயம்வர மண்டபம் அணுகினர். நளனும் ஆடையணிகளால்

தன்னை அலங்கரித்துக்கொண்டு அவ்விடம் சேர்ந்தான். முகூர்த்த காலங்கிட்டியதும், பாங்கியர் தமயந்திக்கு மங்களஸ்நானஞ் செய்வித்து ஆடையணிகளால் அலங்கரித்தனர்.

பின்பு, அப்பெண்மணியைச் சுயம்வர மண்டபத்துக்கு அழைத்துச் சென்று, அங்கு வெகு அழகான ஆதனங்களில் வீற்றிருந்த அரச குமாரர்களின் நாட்டையும் பெயரையும் புகழையும் விரித்துரைத்து, முடிவில் நளனைக் கிட்டியதும், "பாவாய்! இதோ எழிலுடன் வீற்றிருக்கும் இறைவன் நிடத நாட்டு நிருபன், பூமண்டலம் முழுவதையும் ஒரு குடைக்கீழ்ச் செங்கோல செலுத்தும் சக்ரவர்த்தி" என்றனர்.

அக்கணமே தமயந்தி உவகை பூத்தவளாய்த் தன் கைதனிலிருந்த மணமாலையை நளனது மார்பில் சிறக்கச் சூட்டினள். உடனே அந்தணர் பலரும் ஆசி கூறினர். மங்கையர் அனைவரும் கீதம் பாடினர். இது இவ்வாறாக கதிரவன்முன் மின்மினிபோல் முகவொளி மழுங்கிய மற்ற அரசிளங்குமரர் வெட்கமுற்றுத் தலைகுனிந்து, தத்தம் நாடடைந்தனர். பின்னர் வீமராஜன் தன் புதல்விக்கும் நளனுக்கும் கடிமணம் நிறைவேற்றினான். சின்னாள் காறும் நளன் தன் மனைவியுடன் குண்டினபுரத்தே தங்கியிருந்து, கடைசியில் அரசியுடன் மாவிந்த நகரஞ் சேர்ந்து இன்பமாக வாழ்ந்து வந்தான்.

பூவும் அதன் மணமும்போல அவ்விருவரும் இந்திர போகத்தினும் சிறப்பாக வாழ்ந்து வரவே, நாளடைவில் இரண்டு மக்களையடைந்தனர். நளனுக்குப் புட்கரன் என்னும் ஒரு தாயாதி உண்டு. அவனோ நள

னுக்கு மாறான குணமுள்ளவன். சுவறாடலில் கைதேர்ந்தவன். மேலும் பொறாமையே குடிகொண்ட உள்ளத்தான். ஆதலின், நளனது வாழ்வையும் புகழையும் கண்டு சகியாத புட்கரன் எவ்விதத்திலும் நளனது நாட்டைக் கவரவேண்டுமென்ற தூர் எண்ணத்துடன் ஒருநாள் நிடதநாடு சேரவே, நளனால் பல சிறப்புக்களும் செய்யப் பெற்றான்.

இருவரும் அறுசுவையுண்டி அருந்திக் களித்திருக்கையில், சிறிது நேரம் பொழுது போக்காகச் சூதாட வேண்டுமென்று புட்கரன் புகலவே, நளனும் முன்பின் யோசனையின்றி அதற்கு இசைந்துவிட்டான். உடனே அவ்விருவரும் சதுரங்கப் பலகை பரப்பிச் சூதாடத் தொடங்கினர்.

வரம்பு கடந்து நடக்கும் யானையை அங்குசங்கொண்டு பாகர் திருப்புவது போல், அரசன் பிழை செய்யுமிடத்து நீதி மொழிகளை எடுத்துக் கூறி அவனை நல்வழிப் படுத்தல் அமைச்சர்களின் முதற் கடமையாம். ஆகவே, நளன் சூதாடப் போவதை யுணர்ந்த மந்திரிமார் உடனே சூதாடும் மண்டபமணுகி நளனுக்கு நல்லறிவு புகட்டத் தலைப்பட்டனர்.

"ஐயனே! சரணம். தாங்கள் ஆடுவதற்கு இயைந்த சூதாட்டம் நல்குரவைத் தேடி யழைத்து வரும் தூதாகும். கொடிய பொய்யினுக்கு அருந்துணையாம். அற்பத்தனத்தை ஈன்ற தாயை நிகர்க்கும். மெய்க்கு உற்றபகையாகும். அக்கொடிய சூது அறத்தைக்களைந்து அருநரகிற் சேர்க்கும். அருளைப் போக்கும், கோபமே கொண்டு விரோதத்தை மூட்டிவிடும்.

"ஆதலின், அதனைக் கனவிலும் கருதார் கற்றறிந்தோர். காதல், கவறாடல், கள்ளுண்டல், பொய் மொழிதல், ஈதல் மறுத்தல், இவையனைத்தும் மாபாதகமாகும். மேலும், கவறாடலை மேற்கொண்டவர் அதிலிருந்து மீளார். சூதாடுவோர் தாங்களோ தமக்கு அழியாத் துயரத்தைத் தேடிக்கொள்வதுமன்றி, தம்மைச் சேர்ந்தோரையும் படாதபாடு படும்படி செய்து விடுவர். இவையனைத்தும் நம் முன்னோர்களின் முதுமொழி.

"மூத்தோர் சொல்லும் வார்த்தை அமுதமாதலின், அம்மொழிகளை மீறிநடப்போர் நஞ்சையுண்டது போல் ஒருகணத்தில் அழிந்து போவர். சூது விரும்பேல் என்பதைச்சற்றே சிந்தியுங்கள். 'எண்ணித் துணிக கருமம்' என்பது ஆன்றோர் வாக்கு.

"ஆதலின் நாம் செய்யப்போகும் காரியத்தைத் தீரயோசித்தறிந்து, அதன் பலாபலன்களைத் தேர்ந்த பின்னரே, அக்கருமத்தைத் தொடங்கவேண்டும். அவ்வாறில்லாது கண்மூடித்தனமாய் ஒரு கருமத்தில் பிரவேசிப்பது அறியாத மக்களின் இயற்கை. அரசர் பெரும! தாங்கள் அறியாத நீதி நூல் எதுவுமில்லை. அங்ஙனமிருக்க, தாங்களே இச்சூதாடத் தலைப்படுதல் அழகுமன்று, அறமுமன்று, அங்கே பாருங்கள். நகரமாந்தர் அனைவரும் அரண்மனை வாயிலில் கூடி ஓலமிட்டுச் சூதை நிறுத்தும்படி கதறுகின்றனர்," என்று அமைச்சர் கூறினர்.

"யானை வரும் பின்னே, மணி ஓசைவரும் முன்னே." அதுபோல் "கேடுவரும் பின்னே, மதிகெட்டுவரும் முன்னே" என்னும்பண்டைமொழிபழுதுபடாதல்லவா?

ஆதலால், அமைச்சர் கூறிய நன்மொழிகளை அரசன் அலட்சியஞ் செய்ததுமன்றி, அவர்மீது கடுஞ்சினமுங் கொண்டான். தாங்கள் எடுத்துரைத்த நீதி மொழிகள் யாவும் காட்டிலெறித்த நிலவுபோலாயினமை கண்ட மந்திரிகள் பெரிதும் மனவாட்டமடைந்து 'யாது விளையுமோ' என்றேங்கியிருந்தனர். இதனை யறிந்த தமயந்தி அடங்காத்துயர்கொண்டு, தன் மக்களுடன் தாதியரை யனுப்பி, அரசனை அழைத்து வரும்படி ஏவினள்.

ஏவியுமென் ? அமைச்சர் மொழியைக் கேளாதான் தாதியரின் வேண்டுகோளைக் கவனிப்பது எங்ஙனம்?

காலத்தின் கோலத்திற் கேற்ப, ஆடை அணி கரி பரி தேர் காலாள் நாடு நகரம் ஆகிய அனைத்தையும் நளன் சூதாட்டத்தில் இழந்தான்.

அச்சமயம் புட்கரன் நளனை நோக்கி, "இராஜதிலக, கடைசியாக ஓராட்டம் ஆடுவோம். நான் உன்னிடமிருந்து ஆட்டத்தில் ஜயித்த அனைத்தையும் பணயமாக வைக்கின்றேன். நீயும் தமயந்தியைப் பணயமாக வைத்து ஆடுவாயாக! நீ ஆட்டத்தில் ஜயித்து விடின், இழந்துபோன அனைத்தையும் பெறலாம்" என்றியம்பினன்.

மார்பிடையே வேல்பாயப் பெற்றதுபோல், புட்கரனது வசனங்களைச் செவியிலேற்ற பார்த்திபன் வெட்கமுற்றுத் தலை குனிந்து ஆட்டத்தை நிறுத்தினன். உடனே அறிவும் தலைப்பட்டது. கண்கெட்ட பிறகு யாது செய்ய முடியும்! பிறகு மஹா பாதகனை புட்கரன் நளனை நோக்கி "இனி எனது நாட்டில் நில்லாதே!

உன் மனைவி மக்களுடன் புறப்பட்டு, இக்கணமே ஓட வேண்டும்" என்று கட்டளையிட்டான்.

பின்னர், நளன் எதுவும் கூறாது மனைவி மக்களுடன் காடு நோக்கிச் சென்றான். செல்லுங்கால் அம் மாவிந்த நகர மாந்த ரனைவரும் ஒருங்கே திரண்டு மன்னவனைப் பின் தொடர்ந்து, "ஆருயிரின் தாயே! அறத்தின் பெரும்பயிரே! பேரருள்கூர் பெருமானே! பாரைப் பறிகொடுத்துக் கானகமடையவும் தலைவிதியோ! இனி யாங்கள் எவ்வாறு உயிர் வாழ்வோம்" என்று கண்ணீர் ஆறாய்ப்பெருக அழுது கூக்குரலிட்டனர்.

நகரமாந்தர், அழுதரற்றுவதை யுணர்ந்த புட்கரன், "எவரேனும் நளனையணுகி, நல்வார்த்தை கூறின், தண்டனைக்கு உள்ளாகவேண்டும்" என்று பறை சாற்றுவித்தான். அதுகேட்ட நளன் நகரமாந்தரை ஒருவாறு தேற்றி யனுப்பிவிட்டான்.

தருமமாக அரசு புரிந்துவந்த நளச்சக்ரவர்த்தியை இழந்து பரிதபிக்கும் பிரஜைகளுக்குப் புட்கரனிட்ட கட்டளை புண்ணிற் கோலிட்டது போலாயிற்றென் பதை நாம் சொல்லவேண்டியதில்லை. இது இவ்வாறாக, ஸுமந்திரன் என்னும் மந்திரி மாத்திரம் நளனை விட்டுப் பிரியாமல் காடடைந்தான். காட்டினிடையே கால் நடையாய்ப் போகமுடியாது வருத்தப்படும் மனைவியைக் கண்ட நளன் பலவாறு எண்ணிக் கண்ணீருதிர்த்தான். அதனை யுணர்ந்த தமயந்தி தன் நாயகனை நோக்கி, "விதியின் வலியை வெல்ல வல்லார் யாவர்? விதியைக் குறித்து அழுதால் பயனென்ன? நொந்தால் பயனென்ன? ஆவதொன்றுமில்லை" எனலும்,

நளன் ஆற்றொணாத் துயர்கொண்டு, "என் ஆருயிர்த் தலைவி! இக் கானகத்தே கல்லும் முள்ளும் உன் காலில் உறுத்துவதைக் கண்டு நான் எங்ஙனம் வசிப்பேன்? ஆதலால் உன் தந்தையின் மாளிகை சேர்ந்து வாழ்ந்திரு. கூடிய சீக்கிரத்தில் நான் அரசை மீட்டுக்கொண்டு உன்னை அழைத்துச் செல்வேன்," என்று கூறினன். அக் கொடிய மொழிகளைக் கேட்ட தமயந்தி ஒன்றுந் தோன்றாது மயங்கி மனங் கசிந்து சொல்வாள் :—

"தாங்கள் என்னைத் திருமணஞ்செய்த பொழுது எக்காலத்தும் என்னை விட்டுப் பிரியேனென்று அக்னியின் முன்பு சபதஞ் செய்து கொடுத்ததை மறந்து விட்டீர்களோ? அச்சமயம் நானும் அவ்வாறே தங்களை விட்டுப்பிரியாது தொண்டு செய்திருப்பதாக வாக்களித்தேனே! அவ்வாறிருக்க, இப்பொழுது என்னை விட்டுப் பிரிந்து போதல் எவ்வாறு ஏற்கும்? மேலும் பூவைவிட்டு மணம் பிரியுமோ? சுடரினின்றும் ஒளி அகலுமோ? அதுவேபோல் நாயகனைத் தனியே விட்டு நாயகி பிரிதலும் கூடுமோ? உயிர் பிரிந்த வுடல் தரித்திருக்க முடியாததுபோல், உம்மை விட்டுப் பிரிந்து நான் எவ்வாறு வாழமுடியும்? இது கனவிலும் கருதக் கூடாத காரியம்"

இவ்வுறுதி மொழிகளைக்கவனித்த நளன் "பூங்கொடி போல்வாய்! நீ கூறிய அனைத்தும் உண்மையே! ஆயினும், இக்காட்டிலோ யானை பிளிறுவதையும், சிங்கம் கர்ஜிப்பதையும், மற்றுமுள்ள கொடிய மிருகங்கள் கூக்குரலிடுவதையும் கேட்பின், நீ மனங்கலங்கி அறிவழிந்து போவாய்! மேலும் சரியான வேளையில் உனக்கு உணவு

கிடைக்காது. அன்றியும், கானகத்திலுள்ள மூங்கில்கள் ஒன்றோடொன்று உறைவதனால், ஊழித் தீபோல் எரிவதைக் காணின் அச்சமுறுவாய்! என் செய்வேன்; என் தலைவிதி இருந்தவாறு என்னே!" என்று பிரலாபித்தான்.

இம்மொழிகள் செவியில் நுழைதலும் தமயந்தி இயம்புவாள்:—

"என் ஆருயிரே! தாங்களும் என்னுடன் வருவீராயின், நான் எனது பெற்றோரின் மனைக்குச் செல்ல உடன்படுவேன். இல்லையேல், கானகத்தே தாங்களும் நாட்டிடையே போகமுடன் நானும், இருப்பது கற்புடைய மங்கையருக்கு அழகுமன்று விதியுமன்று. பெண்மக்கள் இளமையில் தம் தாய் தந்தையரிடத்தும் மணமானபின் கொழுநரிடத்தும், நாயகனுக்குப் பின் உயிரோடிருப்பின் மைந்தர்களிடத்தும், வாழவேண்டுமென்பதே விதியாகும். அங்ஙனமிருக்க, யான் தனியே என் தந்தையின் நாடு செல்லேன். என்னைப் பரீட்சித்தறியும் நோக்கத்துடன் இம்மொழிகள் செப்புகின்றீர் போலும்.

"கற்புடைய மங்கையருக்குக் கணவனே கடவுள். அம்மணாளனுக்குப் பணிவிடை புரிதலே தவமாகும். காந்தன் உண்டு கொள்ளுமளவும் உண்ணாதிருத்தலே விரதம். கணவனது கட்டுரையைக் கேட்டு மகிழ்தலே விரதம். கணவனது கட்டுரையைக் கேட்டு மகிழ்தலே வேத சிரவணம். எக்காலத்தும் நாதனுடன் கூடி வாழ்தலே மோட்சமாகும். இம்முதுமொழிகளை நான் நன்கு அறிவேன் காந்தன் வசிக்குமிடம்

சுடுகாடே யாயினும், அதுவே ஒப்புயர்வற்ற அரண்மனையாகும். ஆதலின், அரசே! தாங்கள் முன்பு கூறிய வன்மொழியை மறுபடியும் சொல்லா திருக்கும்படி வேண்டிக்கொள்கிறேன்."

தமயந்தியின் தாபமொழிகளைக் கேட்ட காவலன் மனமுருகி, "பெண்ணாரமுதே! உன்னை விட்டுப்பிரிய நினைத்தேனல்லேன். உன் மேனி வாடி விடுமே என்றஞ்சினேன்; நின்னைப்பிரிந்து செல்ல மனந்துணியேன். ஆனால், நம்மக்களை உடன் கொண்டேகுதல் கூடாது. ஆதலின், அருமை மக்களை நம்மந்திரியுடன் நின் தந்தையின் மனைக்கு அனுப்புதலே சிறந்தது" என்றான்.

தமயந்தியும் அதற்கு ஒருவாறு மனமொப்பினளாயினும், மக்களை விட்டுப்பிரிய நேரும் கொடுந்துயரை ஆற்றாளாகி, அழுதழுது அவர்களை மார்புறத்தழுவி, கன்றைவிட்டுப் பிரியும் தாய்ப்பசுவே போல் கதறிய பின்னர், மக்களை மந்திரியின் வசமாக்கவே, அன்புடைய அமைச்சனும் அக்குழந்தைகளுடன் வீமன நகர்க்கேகினன்.

பின்னர், நளமஹாராஜன் தன் நாயகியோடு காட்டினுட் புகுந்து போகையில், அங்கிருந்த ஒரு தடாகத்திலே அன்னப் பறவைகள் கூடிக் குலாவுவதைக் கண்டான். கண்டதும், அவற்றிலொன்றைப் பிடிக்க ஆவல்பூண்டு, தன் உடையை அவிழ்த்து அதன்மேல் வீசியெறிந்தான்.

மாயமாய் வந்து தோன்றிய அப்புள் ஆடையுடன் அந்தரத்தே பறந்து சென்றது. என் செய்வான் நளன்! ஆடையின்றி வருந்தவும் நேர்ந்துவிட்டது, அவன் தலை

விதி! காவலன் படும் கடுந்துயரைக் கண்டு ஸகியாதவன் போலக் கதிரவனும் கடலிற் குளித்தான். உடனே பேரிருள் பரவி விட்டது.

பின்னர், இரவில் கானகத்தே செல்வது உசிதமல்லவென்று நினைத்த மன்னவன், அருகேயிருந்த ஒருபாழ் மண்டபத்திற்குள் தன் தலைவியைக் கூட்டிச்சென்றான். அன்னமில்லாத அயர்ச்சியினாலும், வழிநடந்த களைப்பினாலும், மக்களைப் பிரிந்த மனத்துயரினாலும், தமயந்தி உணர்வற்றுப் படுத்துறங்கத் தலைப்பட்டனள். மலரணையில் மகரயாழ் கேட்டுறங்கும் மகிமை வாய்ந்த தமயந்தி தற்காலம் நள்ளிரவில் பாழ்மண்டபத்தே புழுதியில் படுத்தபர நேர்ந்ததைக் கண்ட மன்னவன் மனம் புழுங்கி, தன் விதியை நினைத்து நினைத்துப் பொருமி, அந்நங்கையின் தலையைத் தன் தொடையின்மீது இருத்திக் கொள்ளவே, அப்பெண்மணி மெய்மறந்து தூங்கி விட்டனள். அப்பொழுது நளன்,

"அந்தோ! ஒரு நாள் வழிநடந்த மெலிவினால் இவ்வாறு வருந்தும் தமயந்தி எவ்வாறு நம்முடனிருந்து நாள் கழிக்கமுடியும். இவள் நம்முடனிருப்பின், ஒருவரையொருவர் பார்த்து பார்த்துப் புலம்ப நேரிடும். ஆதலின், இவளை இவ்விடத்திலேயே விட்டகலுதல் நன்றாகும். பொழுது விடிந்த பின்னர், இவ்வழியே செல்வோருடன் இவள் தன்தாய் வீடு சென்றுவிடுவள்"

என்றெண்ணி அவளது ஆடையிற் பாதியை அரிந்து கொண்டு, அருகே யிருந்த ஒரு கல்லை அவளுக்குத் தலையணையாக வைத்து ஓடி விட்டான்.

ஆயினுமென்! சிறிது தூரஞ் சென்றதும் "ஐயோ! காட்டிலுள்ள கரடி புலிகள் அவளைப் பட்சித்துவிடுமே" என்றஞ்சித் திரும்பி வருவான்.

வந்து, தமயந்தி அயர்ந்து நித்திரை செய்வதை நோக்கி "இக்கண்மணியைத் தனியே விட்டு எவ்வாறு பிரிவேன்" என்றேங்கி யழுவான்.

மறுபடியும் "அந்தோ! இவளை நம்முடன் அழைத்துச் செல்லின், இருவரும் இன்னலுற வேண்டுமே, ஆதலின், இவளறியா வண்ணம் ஓடி விடுவதே நலம்" என்றுன்னி ஓட்டம் பிடிப்பான்.

என்றாலும், தமயந்தியை விட்டுப் பிரிய வேண்டுமென்ற ஆவல் முன்னே இழுக்க, அவள் மீதுள்ள அன்பு பின்னே வலிக்க, அன்றிரவு முழுவதும் தமயந்தியை விட்டுச் சிறிது தூரம் போவதும், உடனே திரும்பி வருவதுமாயிருந்தான்.

கடைசியில், பொழுது புலர்வதைக் கண்டு, "இப்போது கதிரவன் உதயமாகப் போகின்றான். இனி, நாம் இங்கு நில்லாது ஓடிப்போவதே உத்தமம். தினகரன் தோன்றிய பின்னர், காட்டின் அச்சம், இவளுக்கு அதிகமாயிராது," என்று நினைத்தவனாய்,

"கானகத் துறையும் தெய்வங்காள்! வீமன் தன்மெல்லியலை விட்டேகுகின்றேன். இனி இவள் உங்கள் அடைக்கலம். இவளைக் காப்பாற்றுவது உங்கள் கடமையாகும்" என்று துதித்துக் கொண்டே சென்று விட்டான். சிறிது நேரத்திற்கெல்லாம் தமயந்தி துயிலுணர்ந்து பார்க்கவே, தன் தலைவனைக் காணாதவளாகி

கெஞ்சம் பதைபதைத்து, நாற்புறமுஞ் சுற்றிப்பார்த்தாள். நளனைக் காணவில்லை. உடனே கோவென்றலறி, உணர்வற்று மண்ணில் விழுந்தாள்.

மீண்டுமெழுந்து "அந்தோ! நாயகனைக் காணாது நான் எவ்வாறு உயிர் தரிப்பேன்" என்றேங்கினாள். இங்கு மங்கும் ஓடினாள், உழன்றாள், பேச்சு மூச்சின்றிச் சிறிது பொழுது தரையில் கிடந்தாள்.

பின்னர் "என் ஆருயிர்த் தலைவ! உமக்கு நான் ஒரு பிழையும் இழைக்கவில்லையே! என்னைப் பிரியேனென்று உறுதி கூறி அழைத்து வந்து, கானகத்தே விட்டேகியது, தகுமோ?" என்று புலம்பினாள். மறுபடியும் "மலையே மானே, மயிலே குயிலே, என் காவலன் போனவழியைக் காட்டீரோ" என்று அரற்றினாள்.

இவ்வண்ணம் தமயந்தி தனியே நின்று புலம்புகையில், அருகேயிருந்த பேராவமொன்று அவளை வளைந்து கொண்டு விழுங்கத் தொடங்கியது. ஆயினும், அவ்வழியே சென்ற வேடுவனொருவன் அப்பாம்பை இரு துண்டாக வெட்டியெறிந்து, அப்பெண்ணணங்கைக் காப்பாற்றினான்.

ஆனாலும் அப்பாதகன் கொண்ட கொடிய சிந்தையை அறிந்துகொண்ட தமயந்தி உடனே அவ்விடத்தைவிட்டு ஓடவே, சிறிது தூரத்திற்கு அப்பாற் சென்று கொண்டிருந்த ஒரு வாணிபக் கூட்டத்தார் அவளை அன்புடன் வரவேற்று, உண்டி முதலியன கொடுத்துத் தங்களுடன் அழைத்துச் சென்றனர். ஆயினும் கொஞ்ச தூரம் அவ்வணிகக் கூட்டத்தார்

சென்றவுடனே, கள்வர் பலர் தோன்றி, அவர்களிடமிருந்த பொருள்களைக் கவர்ந்து சென்றனர்.

தமயந்தி தம்மைத் தொடர்ந்ததனால் தங்களுக்கு இக்கேடு விளைந்ததென்று வாணிபர் மதித்து, அம்மாதரசியை அகற்றி விட்டனர்.

ஒன்றன்பின் ஒன்றாய்த் தனக்குப் பலகேடுகள் விளைவதை நினைத்து 'என் செய்வேன் தெய்வமே!' என்றேங்கிய தமயந்தி, முடிவில் தன் விதியை வெறுத்தவளாகி, அவ்வழியே சென்றுகொண்டிருந்த மனிதர்களிடம் சேதி நகரின் மார்க்கந் தெரிந்து கொண்டு, கடுகி வழிநடந்து, அவ் வரண்மனையை அணுகினாள்.

தமயந்தியின் சிற்றன்னையாகிய சேதி நகர அரசிக்கும் தமயந்தியை இன்னாளென்று அறிந்து கொள்வது அருமையாயிற்று. ஆகவே, விதிவசத்தால் தமயந்தி அவ்வரண்மனையில் தாதியாக அமர்ந்து காலங்கழித்து வந்தனள். இது நிற்க,

அமைச்சனுடன் சென்ற மக்களிருவரும் வீமராஜனது அரண்மனையை அணுகவே, தமயந்தியுடன் நளன் காடடைந்தான், என்று கேள்வியுற்ற வீமன் பெரிதும் வருந்தி அவர்களைக் காணுமாறு நாற்றிசையினும் தூதுவரைப் போக்கினன்.

அவர்களில் ஒருவன் பலவிடங்களிலுஞ் சென்று நாடித்திரிந்தும் நளனையும் தமயந்தியையும் காணாதவனாகி, முடிவில் சேதி நாடடைந்து, ஆங்கிருந்த தமயந்தியை அழைத்துக் கொண்டுபோய் வீமராஜனிடம் சேர்த்தான்.

அச்சமயம் தமயந்தியின் மேனிவாட்டத்தைக் கண்ட

பெற்றோர் இருவரும் தாங்கவொண்ணுத் துயரங் கொண்டு, தெய்வச் செயல் இங்ஙனமிருப்பின், நம்மாலாவது ஒன்றுமில்லை யென்று மகளைத் தேற்றினர். தன் மக்களின் கூட்டுறவைக் கொண்ட தமயந்தி ஒரு சிறிது மகிழ்ந்தாளாயினும், நாயகனையே அல்லும் பகலும் நினைத்து, அவன் பிரிவை எண்ணி எண்ணி வருந்தியிருந்தனள்.

காதலியைக் காரிருளிற் கானகத்தே கைவிட்ட காவலன், தமயந்தியை விட்டு வந்தோமேயென்று வருந்தி வழிநடக்க, அங்கு கொழுந்துவிட்டெரியும் காட்டுத் தீயில் மாநாகம் ஒன்று சிக்குண்டிருக்கக் கண்டு மனமிரங்கி, அதனை எடுத்து, அப்புறத்தே விட்டு, அதற்கு உயிர்ப்பிச்சை அளித்தான்.

உடனே நாகம் அவனைத் தீண்டியது. தீண்டலும் நளனது உடற் பொலிவு முற்றும் குலைந்து போயிற்று. ஆயினும், "இதுவும் ஒரு நன்மைக்கே" என்றுணர்ந்தான் நளன். ஏனெனில், தன் நிஜரூபத்துடன் நாட்டிற் புகுந்தால், அனைவரும் தன்னை இன்னுரென்று அறிந்து கொள்வர்.

பின்பு நளன் யாரையேனும் நாடியடைந்து குற்றேவல் புரியத் துணிந்து, அயோத்திமா நகரை நோக்கிப் போகையில், வழியில் ஒருநாள் கடற்கரையை யடைந்தான். அச்சமயம் கரையோரத்தேயிருந்த நண்டொன்று நளனைக் கண்டதும் ஓடி யொளித்துக் கொண்டது.

உடனே அவன் அந் நண்டை நோக்கி, "நண்டே! காதலியைக் காரிருளிற் கானகத்தே கைவிட்டு வந்த பாதகனைப் பார்க்கப்படா தென்றோ வளையில் ஓடி

ஒளிகின்ருய்'' என்று கூறிவிட்டுப் பிறகு கடலில் அலை கள் புரண்டுவருவதைக் கண்டு சொல்வான் :—

"கருங்கடலே! நீயோ போகின்ருய், வருகின்ருய், புரண்டு விழுந்து இரங்குகின்ருய். இச்செய்கைகளை நோக்கின், நீ என்னை ஒப்பாய்! என்னைப்போல் நீயும் உன் மனைவியைப் பிரிந்து வந்தனையோ?''

இவ்வாறு, வழியே கண்ட பொருள்களின் செயல் களைக் கண்டு, அவைகளைத் தனக்கு ஒப்பிட்டுக் கொண் டேபோய் முடிவில் அயோத்தி அடைந்தான்.

பின்னர் சமயம் பார்த்திருந்து, அரசனது அவைக் களம் சென்ருன். இறைவன் நளனை நோக்கி "யார் நீ! என் செய்யவல்லை?'' என்று வினவினுன். அதற்கு நளன் "மன்னர் மன்ன! அடியேன் பெயர் வாகுகன். அசுவலட்சணத்திற் கைதேர்ந்தவன். தேர் நடத்தும் தொழிலினும் திறமையுடையேன்'' எனலும், மன்னன் மனங்களித்து அவ்வாகுகனைத் தேர்ப்பாகனுய் அமர்த் திக் கொண்டான்.

வாகுகனும் இறைவன் மனமகிழும் வண்ணம் தன் தொழில்களைச் செவ்வனே நிறைவேற்றிக் காலங் கழி த்து வந்தான். ஆயினும் தன் ஆருயிர்க் காதலியை மறந்தானில்லை. மறந்துவிட முடியுமோ? எக்காலத் தும் அவளை நினைத்து நினைத்து, ஒருவருமறியா வண் ணம் சோகத்திலாழ்ந்திருந்தான். ஈதிங்ஙனமிருக்க,

மணாளனைப்பிரிந்த மனக்கலக்கத்தினுல் தமயந்தி ஓயாது கண்ணீர் சொரிந்து கதறுவதைக் கண்டு ஸகி யாத வீமன், கற்ருய்ந்த வேதியரை நாற்புறமும் போக்கி, நளனைக் கண்டு வருமாறு திட்டஞ் செய்தான்.

அங்ஙனமே சென்ற வேதியனொருவன் அயோத்தி நகரடைந்து,

> கானகத்துக் காதலியைக் காரிருளிற் கைவிட்டுப்
> போனதுவும் வேந்தற்குப் போதுமோ?

என்று வீதியெங்கும் கூறிக்கொண்டே போனான். அதுகேட்ட வாகுகன் திடுக்கிட்டு,

> ஒண்டொடி தன்னை உறக்கத்தே நீத்ததுவும்
> பண்டை விதியின் பயனேகாண்!

என்று பதிலளித்தான்.

இம் மறுமொழிபெற்ற அந்தணன், காற்றினும் கடுகி நடந்து, குண்டினபுரமேகி, அயோத்தியில் நடந்ததை வீமனுக்கு நவின்றான்.

உடனே தமயந்தியின் துயரம் ஒரு சிறிது குறையத் தலைப்பட்டது. ஆதலின் கூடிய சீக்கிரத்தில் தன் நாயகனைக் காண வேண்டுமென்ற அவா மேலிட்டவளாய்த் தன் அன்னைபாற் சென்று, "எனக்கு இரண்டாம் சுயம்வரமென அயோத்தி மன்னனுக்கு ஓலை அனுப்புக" என்று வேண்டினள்.

புதல்வியின் விருப்பத்தை அரசனுக்கு அரசி தெரிவிக்கவே, முன் அயோத்தி சென்றுவந்த மறையோனையே மன்னவன் தூதனுப்பினான். அவ்வாறே மறைவல்லான், அயோத்தி மன்னனாகிய இருதுபன்னனிடஞ் சென்று, "தமயந்திக்கு இரண்டாம் சுயம்வரம்" என்றறிவித்தான். அது கேட்டுக் களிப்பென்னும் கடலில் ஆழ்ந்த கொற்றவன் "அன்றே நமக்கு மாலையிடத் தமயந்தி விரும்பினள். ஆயினும் அது தவறி நளன் கழுத்தில் விழுந்துவிட்டது. இனி இரண்டாம் சுயம்வர

மென்பது நம்மைக் குறித்தே ஏற்பட்டதாகும்" என்று வீண் எண்ணங் கொண்டவனாய், வாகுகனை யழைத்து அவனிடம் நடந்தவற்றைச் சொல்லி, அதிவிரைவிற் செல்லக்கூடிய பரிகளைத் தேர்ந்து, இரதத்தைப் பூட்டும் வண்ணங் கட்டளையிட்டான்.

அவ்வாறே வாகுகன் தேரைச் சித்தப்படுத்த, இருது பன்னன் அக்கணமே குண்டினபுரத்திற்குப் புறப்பட்டான். போகும் பொழுது நளன் பின்வருமாறு சிந்திப்பானாயினன் :—

"என்ன விந்தை! நமது நாயகி இரண்டாம் சுயம்வரத்தை நாடிவிட்டாள்! ஆயினும் அவள் உத்தம ஜாதிப் பெண். பாம்பின் கால் பாம்பறியுமல்லவா? ஆகவே தமயந்தி கொண்ட சூழ்ச்சி நம்மைக் காண்பதற்கே யாகும்! அது பொருட்டே ஒரு வேதியர் சிலதினங்களுக்குமுன் வந்து உசாவிப் போயினர். என்றாலும், பெண் புத்தி பேதமைத்து! நம்மை நெடுங்காலம் காணாதொழிந் தமையாலும், நாம் காரிருளில் கானகத்தே அவளைக் கைவிட்டு வந்தமையாலும், நம்மை அவள் வெறுத்தனளோ யாதோ! அறியோம். ஆயினும் இம் மன்னனுடன் சென்று கண்டறிவோம்."

இவ்வண்ணம் வாகுகன் சிந்தித்துக் கொண்டிருக்கையில், தேரோ குண்டினபுரம் கிட்டியது. இரதத்திற் பூட்டிய பரிகளின் வாயு வேகத்தையும், அத்தேரின் ஒளியையும் கண்ட தமயந்தி சரேலென மாடமேறி, அத்தேரின்மீதே கண்ணுங் கருத்துமா யிருந்தனள். ஏனெனில், தேர் நடத்தும் திறமையைக் கொண்டே வாகுகனை இன்னானென்றறிய ஆவல் பூண்டாள்.

தேர் அரண்மனையைக் கிட்டியதும், வாகுகனது நடை, செய்கை இவைகளால் அவனையே நளனென்று தமயந்தி தெரிந்து கொண்டனள். ஆபினும் உரு வேறுபட்டிருப்பதனால் ஒரு சிறிது ஐயம் பிறந்தது. ஆகவே, தன் பாங்கியரில் கூரிய மதியுடைய ஒருத்தியை வாகுகன்பால் விடுத்து, அப்பாகன் பாகஞ் செய்யும் உணவில் ஒருபாகம் வாங்கி வரச் சொன்னாள். அப்பாங்கியும் பாகத்திற் சிறிதளவு வாங்கி வந்து தமயந்தியின் கைதனில் கொடுக்கவே, அதனை உருசி பார்த்த தமயந்தி, "வாகுகன் நளனென்பதற்கு எட்டுணையும் ஐயமில்லை" என்று நிச்சயித்தாள். மீண்டும் தமயந்தி அப்பாங்கியுடன் தன்மக்களை வாகுகனிடம் அனுப்பி, அங்கு நடப்பதைத் தெரிந்து வரும்படி விடுத்தனள்.

அவ்வாறே மக்களுடன் வாகுகன்பால் பாங்கி செல்ல, தன் மக்களைக் கண்ணெதிரே காணப்பெற்ற பாகன், அவர்களை வாரியெடுத்து, மடிமீதிருத்தி, உச்சி மோந்து, "மக்காள்? நீர் என் மக்கள்போல்கின்றீர்! யார் மக்கள்?" என்று கண்களில் நீர்த்ததும்ப வினவினன்.

அதற்கு அச்சிறுவனும் சிறுமியும் "ஐய! நாங்கள் நிடத நாட்டு நிருபனது மக்கள். அக் கோமான் எமது அன்னையைக் கானகத்தே கைவிட்டு ஓடிப்போக, யாங்கள் இருவரும் இங்கு வாழ்ந்து வருகின்றோம்" எனலும், வாகுகன் நெக்குருகி, கண்களில் நீர்வடியக் கலங்கி நின்றான். இவையனைத்தையும் தமயந்தியினிடம் பாங்கி அறிவிக்கவே, அந்நங்கையர்க்கரசி ஓடோடியுஞ் சென்று,

தன் தாயை யணுகி, "அன்னாய்! அயோத்தி மன்ன னது பாகனே என்மணாளன். மடைத் தொழில் புரியும் வல்லவனே எனது கணவன்! உருமாறியிருக்கும் உத்தமனே என் ஆருயிர்த் தோழன்'' என்று சொல்லி அலறினள். பின்பு தந்தையின் அனுமதியால் வாகுகனை அத்தாணி மண்டபத்திற்கழைத்து, அவனை அன்புடன் இறுகத்தழுவிக்கொண்டு, கோவென்றலறினள் தமயந்தி.

பின்னர் "என் இன்னுயிர்த் தலைவ? உமது நாயகியை நள்ளிரவில் காட்டகத்தே உறக்கத்தில் விட்டேகிய உமது நெஞ்சம் கல்லோ! அன்றேல் இரும்போ!" என்று விம்மி விம்மி யழுதனள்.

இச்சொல்லம்பு நெஞ்சகத்தே பாய்ந்ததனால் தியங்கி நின்ற பாகன் ஒருவாறு மனந்தேறி, "என் கண்ணே! விதியின் வழியே மதிபோயினதே யொழிய வேறில்லை" யெனப் புகன்றான். பின்னர் தன் வேற்றுருவைப் போக்கிக் கொண்டு பாகன் நிற்கவே, அங்குள்ள பலரும் அதிசயித்து நளனைக் கண்ணாரக் காணப்பெற்றோமென மகிழ்ந்தனர். உடனே அந்நகர் முழுவதும் திருமண நகரேபோல் சிறந்து விளங்கியது.

பின்பு அமைச்சருடன் யோசனை செய்து, சூதினை லிழந்த அரசை மீட்டும் சூதினாலேயே மீட்கவேண்டுமெனத் தேர்ந்தனர்.

அவ்வாறே நளனும் சின்னாள்காறும் அந்நகரில் தங்கியிருந்து, சூதாட்டத்தில் கைதேர்ந்து, புட்கரன் பாற் சென்று, கவருடவில் அவனைப் புறங்கண்டு, நிடத நாட்டை மீட்டுக் கொண்டதுமன்றி, புட்கரனது நாட்டையும்கைக்கொண்டான். ஆயினும், புட்கரன் மீதிரங்கி

அவனுக்குரிய நாட்டை அவனுக்கே கொடுத்துவிட்டு தன் மனைவி மக்களுடன் நெடுங்காலம் நிடத நாட்டை யாண்டு இன்புற்றிருந்தான்.